# History of India from 1947-1997 C.E

# UNIT-III

# பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி (1964-1966)

## சிண்டிகேட் (The Syndicate)

நேரு இறந்தவுடன் குல்சாரிலால் நந்தா தற்காலிகப் பிரதமராகப் பொறுப்பேற்றார். எனினும் நேருவுக்கு அடுத்த பிரதமரை முறையாகத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. எனவே, காங்கிரஸ் தலைவராயிருந்த காமராஜர் ஒரு உட்குழுவை உருவாக்கினார். அக்குழுவில் அரசியல் செல்வாக்குமிக்க மூத்த காங்கிரஸ்காரர்களான காமராஜர் (சென்னை ), அதுல்ய கோஷ் (மேற்கு வங்காளம்), எஸ்.கே.பட்டில் (பம்பாய்), என்.சஞ்சீவ ரெட்டி (ஆந்திரா), எஸ். நிஜலிங்கப்பா (மைசூர்) ஆகியோர் இடம் பெற்றனர். இந்த காங்கிரஸ் உட்குழு 'சிண்டிகேட்' என்று அழைக்கப்பட்டது. அதன் நோக்கம் காங்கிரசுக்குக் கூட்டு தலைமைப் பொறுப்பேற்று, அடுத்த பிரதமர் யார் என்பதை முடிவு செய்வதாகும். இவர்களைப் பிராந்திய அதிகார-இடைத்தரகர்கள்' (Regional Power **Brokers) என்**று வர்ணித்துள்ளார் தாரிக் அலி

பிரதமர் பதவிக்கு குல்சாரிலால் நந்தா, மொரார்ஜி தேசாய், வால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி ஆகியோரின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. தற்காலிகப் பிரதமராயிருந்த நந்தா அவரே பிரதமராக நீடிக்க வேண்டுமென்று விரும்பினார். பொரார்ஜி தேசாய் மூத்த தலைவர் என்ற முறையில் பிரதமர் பதவிக்குப் போட்டியிடுவதற்கான வேட்பு மனு தாக்கல் செய்தார். காங்கிரஸ் காரியக் கமிட்டி தேர்தல் மூலம் பிரதமர் தேர்ந்தெடுக்கப்படுவதை விரும்பவில்லை. பிரதமர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றியது. காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சியின் சார்பாகப் பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு காங்கிரஸ் தலைவர் காமராஜரிடம் ஒப்படைக்கப்பட்டது. காமராஜர் காங்கிரஸ் தலைவர்களின் பொதுக் கருத்தறிந்து (Con Gosus) பிரதமர் பதவிக்கு வால் பகதூர் சாஸ்திரியின்

பெயரைப் பரிந்துரைத்தார். அதைக் காங்கிரஸ் காரியக் கமிட்டி ஆமோதித்தது. அதை கட்சிக் கட்டுப்பாட்டுக்குப் பணிந்து தனது வேட்பு மனுவை திரும்ப பெற்றுக் கொண்டார் மொரார்ஜி தேசாய். காங்கிரஸ் கட்சி கட்சி பிளவு படுவது தவிர்க்கப்பட்டது. காங்கிரஸ் 'சிண்டிகேட்' பொதுக்கருத்தறிந்து பிரதமரை முடிவு செய்யும் மரபை உருவாக்கியது. 1964 ஜூன் 2-ஆம் தேதி லால் பகதூர் சாஸ்திரி போட்டியின்றிப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேருவுக்குப் பின் பிரதமர் பதவிக்கு சாஸ்திரியைத் தேர்ந்தெடுப்பதற்காக காமராஜர் 'சிண்டிகேட் கையாண்ட பொதுக்கருத்து விதிமுறை' (Consensus Fomula) காங்கிரஸ் கலாச்சாரத்தின் முன்மாதிரியாயிற்று சாஸ்திரியைப் பிரதமராக்கியதன் மூலம் காமராஜர் 'தலைவரைத் தீர்மானிப்பவர்' (King-maker) ஆனார். கட்சித் தலைமைக்குக் கட்டுப்பட்டவரே ஆட்சித் தலைவர் என்ற கருத்து உறுதி செய்யப்பட்டது. அதாவது கட்சித் தலைவர்களால் பிரதமர் பதவியைத் தீர்மானிக்க முடியும் என்பது உணர்த்தப்பட்டது. எனவே, பிரதமர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமின்றிக் கட்சித் **தலைவர்களு**க்கும் கட்டுப்படவேண்டும் என்பது கோடிட்டுக் காட்டப்பட்டது. அரசாங்கம் மேற்கொள்ளும் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றில் காங்கிரசின் செல்வாக்கு இருக்க வேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது. சுருங்கக் கூறின் காங்கிரஸ் கட்சியின் மேலாண்மைக்கு அடங்கியே காங்கிரஸ் அரசாங்கம் செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தோடும் எதிர்பார்ப்போடும் காங்கிரஸ் சிண்டிகேட் லால் பகதூர் சாஸ்திரியைப் பிரதமராக்கியது.

## உழைப்பால் உயர்ந்தவர்

லால் பகதூர் சாஸ்திரி 1904 அக்டோபர் 2-ஆம் தேதி காசி நகரத்துக்கு **அருகாமையில் மு**கல்சராய் என்ற ஊரில் பள்ளி ஆசிரியருக்கு மகனாகப் பிறந்தார். இளவயதில் தந்தையை இழந்த லால்

பகதூர் தாய் மாமன் வீ ட்டில் தங்கிப் படித்தார். உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்போது காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டார் (1920). தடையை மீறி ஊர்வலம் நடத்த முயன்றதற்காகக் கைது செய்யப்பட்டார்(1921). காசி வித்யா பீடத்தில் நான்காண்டுகள் தத்துவப் பாடத்தில் தேர்ச்சி பெற்று சாஸ்திரி' பட்டம் பெற்றார்(1924). நாட்டுப் பற்றுமிக்க லால் பகதூர் சாஸ்திரி சமூக சேவையில் நாட்டங் கொண்டார். லோக் சேவா மண்டல்' என்ற அமைப்பில் சேர்ந்தார்(1926). 1927-இல் லலிதா தேவியைத் திருமணம் செய்து கொண்டார். அடுத்த ஆண்டே அலகாபாத் நகர சபைத் தலைவரானார்(1928).

லால் பகதூர் சாஸ்திரி அரசியல் மேடைப் பேச்சாளர். வரி கொடா இயக்கத்தின்போது அலகாபாத் அரசாங்கத்துக்கு எதிராகப் பேசிய குற்றத்துக்காக இரண்டரை ஆண்டுகால சிறை தண்டனை பெற்றார்(1930). பின்னர் அலகாபாத்தில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்(1936), ஜமீன்தாரி முறையின் சீர்கேடுகளை ஆய்வதற்காக நியமிக்கப்பட்ட காங்கிரஸ் குழுவின் அமைப்புச் செயலாளராகவும், உத்தரப் பிரதேச 'பார்லிமெண்ட் போர்டு' தலைவராகவும் பணியாற்றினார். பண்டித கோவிந்த வல்ல பந்த் உ.பி.யின் முதலமைச்சரான போது சாஸ்திரி அவரது அமைச்சரவையில் போலீஸ் மந்திரியானார்(1937), 'வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றார்(1942), விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மொத்தம் 9 ஆண்டுகள் சிறைவாசம் செய்தவர் சாஸ்திரி

இந்தியா விடுதலை அடைந்தபின் நேரு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது லால் பகதூர் சாஸ்திரி பொதுச் செயலாளராக இருந்தார்(1950), 1951-இல் நாடாளுமன்ற மாநிலங்கள் அவை உறுப்பினரானார். நேரு அமைச்சரவையில் இரயில்வே அமைச்சராக சேர்த்துக் கொள்ளப்பட்டார்(1952). இவரது பதவிக் காலத்தில் மூன்றாம் வகுப்புப் பெட்டிகளிலும் மின்விசிறிகள், தூங்க வசதிகள், இடப்பதிவு வசதி முதலிய வசதிகள் செய்யப்பட்டன. சித்தரஞ்சன் இரயில் பெட்டித்

தொழிற்சாலை, பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை, விசாகப்பட்டினம் கப்பல் கட்டும் தளம் முதலியன தொடங்கப்பட்டன. 1952-இல் அரியலூரில் நிகழ்ந்த இரயில் விபத்துக்குத் தார்மீகப் பொறுப்பேற்று அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். 1957 நாடாளுமன்றத் தேர்தலில் அலகாபாத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட லால் பகதூர் சாஸ்திரி மீண்டும் நேரு காமைச்சரவையில் இடம் பெற்றார். வர்த்தகம் மற்றும் தொழில் கறை அமைச்சராகவும் (1958-59) திறம்படப் பணியாற்றினார் . கிட்டப்படி அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப் பணியில் ஈடுபட்டார் (1963).

நேரு நோய்வாய்ப்பட்டதால் அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான சாஸ்திரி மீண்டும் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் பிரதமராக' (Defacto Prime Minister)ச் செயல்பட்டார். நேரு இறக்க சாஸ்திரி இந்தியாவின் இரண்டாவது பிரதமராகப் போட்டியின்றி தேர்ச்... நேருவின் குடும்பப் பின்னணியும், அவரின் ஆளுமையும், அவருக்குக் கட்சி கட்டுப்பாடும், சர்வதேச அந்தஸ்தும் சாஸ்திரிக்கு இல்லை. என வறுமையில் வளர்ந்த சாதாரண மனிதர் தேசப் பற்றாலும், தியாகத்தாலம் அயர்ந்து நாட்டின் உன்னதமான உயர்பதவியைப் பெறமுடியும் என்பதற்கு வாம். சாஸ்திரி சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## உறுதியான பிரதமர்

லால் பகதூர் சாஸ்திரி ஒரு பலவீ னமான பிரதமராக இருப்பார், கட்சிக் தலைமைக்கு கட்டுப்பட்டு நடப்பார், கூட்டுத் தலைமையின் கீழ் ஆட்சி செயல்படும் என் சிண்டிகேட் தலைவர்கள் எதிர்பார்த்தனர். அவர்களைக் கலந்தாலோசித்தே சாஸ்திரி அரசாங்கத்தை நடத்துவார் என்று நம்பினர். ஆனால் சாஸ்திரி சிண்டிகேட்டர் **கைப்பாவையாக இருக்க விரும்பவி**ல்லை. அவர் பிரதமர் பதவிப் பொறுப்பேற்றலாம் சுதந்திரத்துடன் செயல்படத் துவங்கினார். குட்டையான மனிதர் நெட்டையான முடிவுகளை எடுத்தார். பஞ்சுபோல் மிருதுவாகத்

தோன்றினாலும் இரும்புபோல் உறுதியாக இருந்தார். **பிரதமர் பதவி பற்றிய மயக்கமோ மருட்**சியோ அவருக்கில்லை. பிரதமர் பொறுப்புக்களைப் பற்றி சாஸ்திரி தெளிவாக இருந்தார். அவரது பதவியின் பரிமாணங்களைப் பற்றி நன்கறிந்திருந்தார். நேர்மை, வாய்மை, தூய்மை ஆகியவற்றை வழிகாட்டிகளாகக் கொண்டு கடமையாற்றினார். பிரதமர் பொறுப்பேற்றவுடன் நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் உரையாற்றிய சாஸ்திரி மகாத்மா காந்திக்கும், பண்டித ஜவஹர்லால் நேருவுக்கும் எழுப்பக்கூடிய பொருத்தமான நினைவுச் சின்னம் சுதந்திரமான சுபிட்சமான, வலிமையான இந்தியாவை நிர்மாணிப்பதாகும்' என்று குறிப்பிட்டார். அதன்படி ‘நிலையில் திரியாது நடந்து கொண்டார்.

## சாஸ்திரியின் அமைச்சரவை

பொதுக்கருத்து அடிப்படையில் பிரதமரானார் லால் பகதூர் சாஸ்திரி. பிரதமர் சாஸ்திரி சுதந்திரமாகவும், துணிச்சலுடனும் அவரது அமைச்சரவையை அமைத்து பிரதமர் பதவிப் போட்டியில் தோல்வியுற்ற குல்சாரிலால் நந்தாவுக்கு அமைகள் பிரதமருக்கு அடுத்த இடம் அளிக்கப்பட்டது. மொரார்ஜி தேசாய் இடம் பெற இந்திரா காந்திக்கு வெளியுறவு இலாகாவைக் கொடுக்காமல் தகவல் தொடாபு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது. இந்திரா காந்திக்கு வெளியு கொடுக்கப்பட்டிருந்தால் ரஷ்யர்களும் இடதுசாரிகளும் இரட்டிப்பு மகிழ்ச்சி அரிஜனத் தலைவர் ஜெகஜீவன் ராமுவுக்கு சாஸ்திரியின் அமைச்சு தரவில்லை. அமைச்சர்களைத் தேர்தெடுப்பதும் அவர்களுக்கு இலாகாக்களை பிரதமரின் சிறப்புரிமை என்ற நாடாளுமன்ற நிலைநாட்டினார் லால் பகதூர் சாஸ்திரி. இந்த விஷயத்தில் சாஸ்திரி சிண்டிகேட் தலைவர் காமராஜரைக் கலந்தாலோசிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதே சமயம் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏழுபேருக்கு சாஸ்திரி அமைச்சரவையில் இடமளிக்கப்பட்டது. டி.டி.கிருஷ்ணமாச்சாரியும், சி.சுப்பிரமணியமும் 'காபினட்' அமைச்சர்கள்.

ஓ.வி.அழகேசன் ராஜாங்க' அமைச்சர். எஸ்.வி.ராமசுவாமி, டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரன், சி.ஆர். பட்டாபிராமன், மரகதம் சந்திரசேகர் ஆகிய நால்வரும் துணை அமைச்சர்கள்.

## இந்திரா காந்தியின் ஆட்சி

பிறப்பும், வளர்ப்பும்

இந்திரா பிரியதரிசினி 1917 நவம்பர் 19 ஆம் தேதி ஜவஹர்லால் நேருவுக்கும் கமலா நேருவுக்கும் மகளாகப் பிறந்தார். இந்திரா அலகாபாத்திலிருந்த மாடர்ன் பள்ளி செயிண்ட் செசிலா பள்ளி-இல்லக் கல்வி-சுவிட்சர்லாந்து ஜெனீவா சர்வதேசப் பள்ளி (1926) மீண்டும் அலகாபாத்தில் செயிண்ட் மேரி கான்வெண்ட் பள்ளி (1927) பூனாவில் பரிசோதனைப் பள்ளி-சாந்திநிகேதன், பிரிட்டனில் பிரஸ்டல் பள்ளி(1935) பாட்மிட்டன் பள்ளி, **ஆக்ஸ்போர்டு சாமர்வைல் கல்லூரி (1936) என்று பல்வேறு** கல்வி நிலையங்களில் கல்வி கற்றார். இந்திரா இங்கிலாந்தில் மாணவியாக இருந்த போது வரலாற்றிலும்; மானிடவியலிலும் ஆர்வம் கொண்டார். தொழிற்கட்சியில் உறுப்பினரானார். சோஷலிச சித்தாந்தத்தில் ஈடுபாடு கொண்டார். இந்திரா பிரியதரிசினி முறையாகக் கற்றதை விட அவர் பெற்ற முறைசாராக் கல்வியே அதிகம். நேரு சிறையிலிருந்த போது இந்திராவுக்கு உலக வரலாறு பற்றி எழுதிய 200 கடிதங்களும் தந்தை மகளுக்குக் கொடுத்த அரிய அஞ்சல் கல்வியாகும். 1941 மார்ச் மாதம் இந்தியா திரும்பிய இந்திரா பிரியதரிசினி இலண்டனில் இருந்தபோது காதலித்த பெரோஸ் காந்தியைத் திருமணம் செய்து கொண்டார் (1942 மார்ச் 26). பெரோஸ் காந்தி சொராஸ்டரிய சமயத்தைச் சேர்ந்த பார்சி வகுப்பைச் சேர்ந்தவர். 'காந்தி' என்ற சிறப்புப் பெயரை தன் பெயருடன் இணைத்துக் கொண்ட பெரோஸ், மகாத்மா காந்திக்கு எந்த உறவும் இல்லை.

## தந்தையும் மகளும்

இந்திராநேரு திருமணத்திற்குப் பிறகு இந்திரா காந்தி ஆனார். இந்திரா காந்தியும் பெரோஸ் காந்தியும் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் கலந்து கொண்டு சிறை சென்றனர். விடுதலையானவுடன் தனிக்குடித்தனம் துவங்கினர். அவர்களுக்கு ராஜீவ் (1944 ஆகஸ்டு), சஞ்சய் (1946 டிசம்பர்) என்ற இரு மகன்கள் **பிறந்தனர். இ**ந்தியப் பிரிவினையின் விளைவாக டெல்லியில் வெடித்த இனக்கலவரத்தின் போது இந்திரா காந்தி மகாத்மா காந்தியின் தலைமையில் இன ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். கமலாவின் மறைவுக்குப் பின் (1936) நேரு டெல்லி தீன் மூர்த்தி இல்லத்தில் வாழ்ந்து வந்தார். இந்திரா காந்தி தன் தந்தையின் வேலைப் பளுவைப் பகிர்ந்து கொள்ளும் பொருட்டு தன் பிள்ளைகளோடு தீன் மூர்த்தி இல்லத்துக்கே வந்து விட்டார். தீன் மூர்த்தி இல்லத்தில் இந்திரா காந்தி தந்தை ஜவஹர்லால் நேருவுக்கு மூன்று வழிகளில் உதவியாக இருந்தார். 1) வீ ட்டுப் பராமரிப்பு. வீ ட்டில் உபசரிப்பு, விருந்தோம்பல் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் இந்திரா காந்தி. தீன் மூர்த்தி வீ ட்டுப் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தார். 2) வெளிநாட்டுப் பயணம், இந்திரா காந்தி தந்தை நேருவுடன் பிரிட்டன், சீனா, அமெரிக்கா, சோவியத் யூனியன், இந்தோனேஷியா போன்ற நாடுகளுக்குச் சென்றார். வெளிநாட்டுப் பயணங்களின் போது பன்னாட்டுத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் பற்றி நேரடியாகத் தெரிந்து கொள்ளவும், இராஜதந்திரக் கல்வி பெறவும் வாய்ப்புகள் கிடைத்தன. 3) அரசியல் தொடர்பு. தீன் மூர்த்தி இல்லம் அரசியல்தேன் கூடாகத் திகழ்ந்தது. வெளிநாட்டு, உள்நாட்டு அரசியல் பிரமுகர்களுடன் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பம் இந்திரா காந்திக்குக் கிடைத்தது. அவரது அரசியல் ஆர்வம் வளர்ந்த வண்ணம் இருந்தது.

## அரசியல் அறிமுகம்

காங்கிரஸ் தலைவர்

1938-லிருந்து காங்கிரஸ் உறுப்பினராக இருந்த இந்திரா காந்தி

காங்கிரஸ் காரியக் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1955). காங்கிரஸ் கட்சியின் பெண்கள் பிரிவிலும் ஆர்வத்துடன் பங்கேற்றார். அவரது ஆர்வத்தையும் முனைப்பான நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனித்த காங்கிரஸ், இந்திரா காந்தியை அதன் மத்திய தேர்தல் கமிட்டிக்குத் தேர்ந்தெடுத்தது (1957). அடுத்த ஆண்டே அவர் நாடாளுமன்ற போர்டின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1958). 1959-ஆம் ஆண்டு இந்திரா காந்தி அகில இந்திய காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருமதி சென் குப்தா, டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார், கவிக்குயில் சரோஜினி நாயுடு ஆகியோருக்குப்பின் அப்பதவிக்கு வந்த நான்காவது பெண் இந்திரா காந்தி ஆவார்.

காங்கிரஸ் கட்சித் தலைவரான இந்திரா காந்தி, கம்யூனிஸ்ட் கட்சி கேரளாவை ஆட்சி செய்வதை விரும்பவில்லை. எனவே அவ்வாட்சியைக் கவிழ்க்கத் தீர்மானித்தார். கேரளாவில் பயணம் செய்தார் (1959). அம்மாநிலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் யதேச்சதிகார ஆட்சி நடப்பதாகப் பிரச்சாரம் செய்தார். கம்யூனிஸ்ட் அரசாங்கம் அறிமுகப்படுத்திய 'கல்வி மசோதா' இளைஞர்கள் மனதைக் கெடுப்பதாகவும், சிறுபான்மையினர் உரிமைகளைப் பறிப்பதாகவும் குறை கூறினார். கல்வி மசோதாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இந்திரா காந்தி குடியரசுத் தலைவரையும் பிரதமரையும் சந்தித்துக் கேரளாவில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாகவும், கம்யூனிஸ்ட் அரசாங்கம் கலைக்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தினார். உண்மையான ஜன நாயகவாதியான நேரு ஜனநாயக முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கலைக்கக் கூடாது என்றார். பெரோஸ் காந்தி கேரள அரசுக் கவிழ்ப்பு முயற்சியை அறிந்து அதிர்ச்சி அடைந்தார். மறுப்பு தெரிவித்தார். ஆனால் காங்கிரஸ் தலைவர் இந்திரா காந்தி பிடிவாதமாக இருந்தார். கேரளாவில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது. முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்பூத்திரிபாட் கம்யூனிஸ்ட் அரசாங்கம் கலைக்கப்பட்டது. அரசியல் ஆதாயத்திற்காக

ஆட்சியை கலைப்பதற்கான முன்னுதாரணத்தை ஏற்படுத்தினார் இந்திரா காந்தி. இந்நிகழ்ச்சி பிற்காலத்துக்கான அபாயகரமான அரசியல் ஒத்திகை' என்று குறிப்பிட்டுள்ளார் தாரிக் அலி. பதினோறு மாதங்கள் காங்கிரஸ் தலைவராக இருந்த இந்திரா காந்தி அப்பதவியில் நீடிக்க மறுத்து விட்டார். பெரோஸ் காந்தி மாரடைப்பால் மரணமடைந்தபின் (1960) இந்திரா காந்தி சியலில் தீவிர ஈடுபாடு கொண்டார். இந்தியா முழுவதும் பய**ணம் செய்து காங்கிரஸ்** கட்சியைப் பலப்படுத்தும் முயற்சியில் இறங்கினார். வெளிநாடுகளுக்குப் பயணம் செய்து இந்தியாவைப் பற்றி உரையாற்றினார். இந்திரா காந்தி நேருவின் ஆட்சிக் காலத்திலேயே தனக்கென ஒரு அரசியல் அடித்தளத்தை உறுதியாக அமைத்துக் கொண்டார்.

## அடுத்த பிரதமர்

நேருவுக்குப்பின் யார் அடுத்த பிரதமர் என்ற கேள்வி எழுந்த போது மொரார்ஜி தேசாய், குல்சாரிலால் நந்தா, லால் பகதூர் சாஸ்திரி ஆகியோருடன் இந்திரா காந்தியின் பெயரும் பரிசீலிக்கப்பட்டது. நேருவின் விருப்பத்தை நன்கறிந்த காங்கிரஸ் சிண்டிகேட் தலைவர் காமராஜர் லால் பகதூர் சாஸ்திரி பிரதமராவதற்கு வழி செய்தார். சாஸ்திரி இந்திரா காந்தியை செய்தி-ஒலிபரப்பு அமைச்சராகச் சேர்த்துக் கொண்டார். இந்திரா காந்தி அமைச்சர் பணியை அவருக்கே உரிய ஆர்வத்தோடும் அக்கறையோடும் திறமையோடும் செய்தார். நாள்தோறும் நேருவைப் போன்றே இந்திரா காந்தியும் அவர் வசித்த சப்தர்ஜங் ரோடு முதல் இல்லத்தில் பொதுமக்களைச் சந்தித்து வந்தார். அதன் மூலம் அவர் ஒரே சமயத்தில் கட்சி ஆட்சி பொதுமக்கள் தொடர்பைப் பலப் படுத்திக் கொண்டிருந்தார். பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி கேட்டுக் கொண்டதன் பேரில் இந்திரா காந்தி 1964-இல் நடைபெற்ற காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் இந்திய பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். இந்தியாவின் சார்பாக பிரான்ஸ், அமெரிக்கா, யூகோஸ்லாவியா, கனடா, மங்கோலியா,

பர்மா ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்தார். இந்திரா காந்தி பிரதமர் சாஸ்திரியின் சார்பாக இருமுறை மாஸ்கோ சென்று வந்தார். குருஷேவுக்குப் பின் வந்த ரஷ்யத் தலைவர்களைச் சந்தித்துப் பேசிய முதல் வெளிநாட்டு அரசியல்வாதி இந்திரா காந்திதான். இந்திரா காந்தியின் அமைச்சர் பணியும், வெளிநாட்டுப் பயணங்களும் அவருடைய மதிப்பைக் காங்கிரசுக்குள்ளேயும் வெளியேயும் வெகுவாக உயர்த்தியது. இந்திரா காந்தி மக்கள் செல்வாக்குடைய தலைவராகத் திகழ்ந்தார். எனவே, 1966 ஜனவரி 10 ஆம் தேதி பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி தாஷ்கண்டில் அகால மரணமடைந்ததால் இந்திய அரசிய ல் திடீர்த் திருப்பம் ஏற்பட்டது. இந்தியாவின் கவனம் இந்திரா காந்தியின் பக்கம் திரும்பியதில் வியப்பில்லை.

**முதல் பெண் பிரதமர்**
**பதவிப் போட்டி**

லால் பகதூர் சாஸ்திரியின் அகால மரணம் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சாஸ்திரியின் உறுதியான தலைமையால் ஓரம் கட்டப்பட்டிருந்த காங்கிரஸ் சிண்டிகேட் தன் செல்வாக்கை மீண்டும் நிலைநாட்டிக் கொள்ள முற்பட்டது. பிரதமர் பதவிக்குக் காமராஜர், மொரார்ஜி தேசாய், குல்சாரிலால் நந்தா, பட்டீல், சஞ்சீவ ரெட்டி, ஜெகஜீவன் ராம், இந்திரா காந்தி ஆகியோரின் பெயர்கள் பேசப்பட்டன. ***கா*மராஜருக்குப் பிரதமராக விரு**ப்பமில்லை. குல்சாரிலால் நந்தா போட்டியிலிருந்து விலகிக் கொண்டார். ஜெகஜீவன் ராம் ஷெடியூல்டு வகுப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை இந்திரா காந்திக்காகத் திரட்டத் துவங்கினார். துவக்கத்தில் தேசாயை ஆதரித்த விஜயலட்சுமி பண்டிட் பின்னர் இந்திரா காந்தி பக்கம் சாய்ந்தார். நேரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் பிரதமரானால் மக்கள் மகிழ்ச்சி அடைவர்' என்றார். காமராஜர் கடைசிவரை இந்திரா காந்தியைப் பிரதமராக்குவதில் குறியாக இருந்தார். மொரார்ஜி தேசாய் இம்முறை காமராஜரின் சாணக்கிய தந்திரத்தில் சிக்குவதில்லை

என்று தீர்மானித்துப் பிரதமர் பதவிக்கான போட்டிக்குத் தயாரானார். இறுதியில் மொரார்ஜி. தேசாயும் இந்திரா காந்தியும் பிரதமர் பதவிக்குப் போட்டியிட்டனர்.

## வங்கிகள் தேசியமயமாக்கப்படல்

## பொருளாதாரக் கொள்கை

பிரதமர் இந்திரா காந்தி 1969 ஜூலை 30-ஆம் தேதி பெங்களூரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் முதன் முதலாக அவரது அரசாங்கத்தில் பொருளாதாரக் கொள்கை பற்றிய குறிப்பை விவாதத்திற்கு வைத்தார். அக்கொள்கைக் குறிப்பில் காணப்பட்ட முக்கிய திட்டங்களாவன: 1) ஆடம்பரச் செலவுக்கு வரம்பு நிர்ணயித்தல்; 2) பொது நிதி நிறுவனங்களின் கடன் வழங்கும் முறையில் மாற்றம் செய்தல்; 3) புதிய தொழில் முனைவோருக்கும் பின்தங்கிய பகுதிகளுக்கும் அதிக நிதி ஒதுக்கீடு செய்தல்; 4) ஏகபோக உரிமைக் கமிஷனுக்கு (Monopolies Commissions) உறுப்பினர்களை நியமித்தல்; 5) பொதுத்துறை நிறுவனங்களுக்கு அதிக சுயாட்சி அதிகாரங்கள் அளித்தல்; 6) அந்நிறுவனங்களைத் திறம்பட நடத்துவதற்கான ஆட்களைக் கொடுத்தல்; 7)நுகர்வோர் தொழில்களில் பெரும்புள்ளிகள்' நுழைவதைத் தடை செய்து அவற்றைச் சிறு தொழில்கள் மற்றும் கூட்டுறவுத் துறைகளுக்கு ஒதுக்கல்; 8) படித்தோருக்கும் இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்புகளை அதிகரித்தல்; 9) நாட்டின் தொழில்நுட்பத் திறனுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய அந்நிய முதலீட்டைத் தடை செய்தல்; 10)பொருளாதாரக் குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டித்தல்.

## வங்கிகள் அரசுடைமையாக்கப்படல்

1967 அக்டோபர் 25-ஆம் தேதி நடைபெற்ற அமைச்சரவைக் குழு கூட்டத்தில் பிரதமர் இந்திரா காந்தி வங்கிகளைத் தேசிய மயமாக்கும்

'சோஷலிசத் திட்டத்தை'க் கொண்டு வந்தார். அத்திட்டத்தை ஜெகஜீவன்ராம், சவான், சுவரன் சிங் ஆகியோர் ஆதரித்தனர். ஆனால் மொரார்ஜி தேசாய், சத்ய நாராயண் சின்ஹா, சென்னா ரெட்டி ஆகியோர் கடுமையாக எதிர்த்தனர். தன்னை நிலைப்படுத்திக் கொள்வதற்குமுன் மொரார்ஜி தேசாயையும் அவரது ஆதரவாளர்களையும் விரோதித்துக் கொள்ள விரும்பாத இந்திரா காந்தி வங்கிகளை தேசியமயமாக்கும் திட்டத்தை வலியுறுத்தவில்லை. மாறாக, மொரார்ஜி தேசாயின் வங்கிகளின் மீதான சமூகக் கட்டுப்பாடு(Social Control of The Banks) பற்றிய திட்டத்தை ஏற்றுக் கொண்டார். பின்னர் பெங்களூர் காங்கிரஸ் கூட்டத்தின்போது (1969 ஜூலை 30) மொரார்ஜி தேசாயை நிதி அமைச்சர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, நிதி இலாகா பொறுப்பை அவரே எடுத்துக் கொண்டு, பொதுமக்கள் போட்ட வைப்புத் தொகை ஐம்பது கோடிக்குமேல் உள்ள 14 பெரிய வங்கிகளை தேசியமயமாக்கினார். அவசர சட்டத்தில் தற்காலிகக் குடியரசுத் தரால்வராக இருந்த வி.வி.கிரி கையொப்பமிட்டார்

**நெருக்கடி நிலைக்கான சூழ்நிலைகள்**

**கிளர்ச்சிக் காடு**

1974-ஆம் ஆண்டு அமைதியின்மையும், போராட்டங்களும், சட்டச் சீர்குலைவும் நிறைந்த ஆண்டு ஆகும். நாட்டின் பொருளாதார நிலை கவலைக்குரியதாக இருந்தது. வெள்ளமும் பஞ்சமும் போட்டி போட்டுக் கொண்டிருந்தன. விலைவாசிகள் உயர்ந்த வண்ணம் இருந்தன. அத்யாவசியப் பொருள்கள் பற்றாக்குறை மக்களின் அன்றாட வாழ்க்கையை வெகுவாகப் பாதித்தது. கடைக்குச் செல்வது கவலைக்குரிய **விஷயமாயி**ற்று. 1974-ஆம் ஆண்டில் அந்நியக் கடன் பர்க்கி 2,000 மில்லியன் டாலராக இருந்தது. அது இந்தியா பெற்ற நிகர அந்நிய உதவியைவிட அதிகம். நகர்ப்புறத் தொழிலாளர்கள் அமைதி இழந்து வந்தனர். வேலையின்மைப் பிரச்னையால் பெரிதும் பாதிக்கப்பட்ட கல்லூரி பல்கலைக்கழக மாணவர்கள் பொறுமை இழந்தனர். 1972 ஆகஸ்டு-

செப்டம்பரில் தொற்று நோய் போன்று தோன்றிய தொழிலாளர் வேலை நிறுத்தங்களும், மாணவர் ஆர்ப்பாட்டங்களும் 1974-இல் கொள்ளை நோய் போலாயிற்று சுருங்கக்கூறின், 1974-ஆம் ஆண்டில் இந்தியா கிளர்ச்சிக் காடாகக் காட்சியளித்தது.

**குஜராத் கிளர்ச்சி, 1974**

1974 பிப்ரவரி மாதம் குஜராத்தில் தோன்றிய கலவரம் நாட்டின் கவனத்தைக் கவர்ந்தது. நீருபூத்த நெருப்பாக இருந்த மக்களின் மனக்கொதிப்பு குஜராத்தில் கொந்தளிப்பாக உருவெடுத்தது. குஜராத்தின் 60 மில்லியன் மக்களில் ஐந்தில் நான்கு பேர் எழுத்தறிவற்றோர்; மூன்றில் இரண்டு பேர் வறுமையில் வாடினர்; ஐம்பது விழுக்காட்டுக்கு மேல் நிலமற்றோர்; பணவீக்கம் முப்பது விழுக்காடாக உயர்ந்தது. இரண்டாண்டுகளாக தொடர்ந்து பஞ்சம் நீடித்தது. குஜராத் முதலமைச்சராயிருந்த சிமன்பாய் பட்டேலின் மக்கள் விரோதப்போக்கு கலவரத்துக்குக் காரணமாயிற்று. முதலமைச்சர் பட்டேலின் யதேச்சதிகாரப் போக்கும், ஊழல் நடவடிக்கைகளும் உணவுப் பொருள்கள் பற்றாக்குறையும், விலைவாசி உயர்வும் கலவரத்துக்கான இடு பொருள்களாயின.

குஜராத் கலவரத்தை மாணவர்கள் துவக்கினர். ஒரு பொறியியல் கல்லூரியில் உணவுக் கட்டண உயர்வை எதிர்த்து மாணவர்களால் துவக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் மக்கள் இயக்கமாக விரிவடைந்தது. குறைகள் களையப்படாமையால் மாணவர்கள் குஜராத் மாநிலம் முழுவதும் 'இளைஞர் எழுச்சிக் குழுக்கள்' (Niman Yuvak Samithis) அமைத்தனர். இளைஞர் முன்னேற்றக் குழுக்கள் 'நவநிர்மாண் இயக்க'த்தின் குத்தீட்டிகளாயின. குஜராத் முதலமைச்சர் பதவி விலகவேண்டும், சட்டப் பேரவை கலைக்கப்பட வேண்டும், சட்டமன்றத்துக்கு மறுதேர்தல் நடத்த வேண்டும் என்று கோரி மக்கள் கிளர்ச்சி செய்தனர். கலவரம் காட்டுத் தீ போல் பரவியது. -

ஜெயப்பிரகாஷ் நாராயண் குஜராத் கிளர்ச்சியை ஆதரித்தார். இந்திய இளைஞர்கள் குஜராத்தை முன் மாதிரியாகக் கொண்டு நாடு தழுவிய புரட்சியைத் துவக்க வேண்டும் என்றார் மொரார்ஜி தேசாய். குஜராத் கிளர்ச்சியை ஆதரித்தும், முதலமைச். சிமன்பாய் பட்டேலின் காங்கிரஸ் அமைச்சரவை கலைக்கப்பட வேண்டும் என்று கோரி புதுடெல்லியில் சாகும் வரை அவர் உண்ணாவிரதம் மேற்கொண்டார். இந்திரா காம் வேறு வழியின்றி குஜராத் முதலமைச்சரைப் பதவி விலகச் செய்து, சட்டப் பேரவை கலைத்து, அம்மாநிலத்தைக் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தார் தேசாய் உண்ணாவிரதத்தைக் கைவிட்டார். அமைச்சரவை கலைக்கப்பட்டவுடன் சட்டம் பேரவைக்குத் தேர்தல் நடத்தக்கோரி மற்றொரு உண்ணா விரதம் மேற்கொண்டார் தேசாய். மறுதேர்தல் நடத்தப்பட்டது. குஜராத் கிளர்ச்சி, கட்சித் தாவல் இன்றியே மாரில் முதலமைச்சரைப் பதவி விலகச் செய்யலாம், சட்டப் பேரவையைக் கலைக்கச் செய்து மன தேர்தலுக்கு வழி வகுக்கலாம் என்ற பாடத்தைக் கற்றுக் கொடுத்தது. அப்பாடத்தைக் கற்று பீகார் குஜராத் வழி சென்றது.

## ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம், 1974

1974 மே மாதம் நாட்டில் நிலவிய அமைதியின்மையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு ரயில்வே ஊழியர்கள் நாடு தழுவிய வேலை நிறுத்தத்தில் இறங்கினர். ரயில்வே ஊழியர்கள் சங்கத் தலைவராயிருந்த ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஊதிய உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படும் வரை காலவரையற்ற வேலை நிறுத்தத்தைத் துவக்கினார். பிரதமர் இந்திரா காந்தி ரயில்வே தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை இரும்புக் கரம் கொண்டு முறியடித்தார். ஜார்ஜ் பெர்னாண்டஸ் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். 10,000 தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். அவர்களது குடும்பங்கள் அரசாங்கக் குடியிருப் புகளிலிருந்து வெளியேற்றப்பட்டன.

இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்குப் பணி முறிவு ஏற்பட்டு அதன் விளைவாக ஓய்வூதியம் மற்றும் பிற சலுகைகளை இழக்கும் நிலையில் இருந்தனர். இராணுவத்தின் உதவியோடு ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் ஒடுக்கப்பட்டது. "இந்திரா காந்தி இரக்கமின்மையின் உச்ச கட்டத்துக்கே சென்றுவிட்டார்" என்று குறிப்பிட்டுள்ளார் பூபுல் ஜெயகர்." குஜராத் கிளர்ச்சியின் போது மாணவர்களையும் மக்களையும் பகைத்துக் கொண்ட இந்திரா காந்தி ரயில்வே ஊழியர்களின் விரோதத்தைத் தேடிக் கொண்டார். இந்த வேலை நிறுத்தத்தின் போது தான் போக்ரானில் அணுகுண்டு சோதனை நடத்தப்பட்டது. அந்த சத்தத்தில் ரயில்வே வேலை நிறுத்தம் மறந்து போயிற்று என்று கூறுகிறார் கே.பிராங்க் (K. Frank).

**பீகார் கிளர்ச்சி , 1974**

குஜராத் கிளர்ச்சி, ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து 1974 ஜூன் மாதம் பீகார் கிளர்ச்சி துவக்கப்பட்டது. பீகார் கிளர்ச்சிக்கு ஜெயப்பிரகாஷ் நாராயண் தலைமை தாங்கினார். குஜராத்தில் ஊழல் ஆட்சியை அகற்றியதைப் போன்று பிகாரிலும் நிகழ வேண்டியது இன்றியமையாதது என்று கருதினார். நாட்டில் உணவும் பற்றாக்குறை; வேலையில்லாத் திண்டாட்டம்; கட்டுக் கடங்கா விலைவாசி உயாக பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் தட்டுப்பாடு; உயர்நிலை ஊழல்; கலவரம்; கிளாக வேலை நிறுத்தம்; நாசவேலை; அமைதியின்மை; சட்டச்சீர்குலைவு போன்ற எதிர்மறை **விளைவுகள்** பிரதமர் இந்திரா காந்தி விதைத்த விதைகளின் விளைச்சல் என்பது ஜெயப்பிரகாஷ் நாராயணின் கணிப்பாகும். எனவே, இந்தியப் புரட்சியின் துவக்கமாகப் பீகார் கிளர்ச்சியைத் துவக்கினார்.

பீகார் கிளர்ச்சி குஜராத் கிளர்ச்சியைப் போலன்றி வன்முறையாக உருவெடுத்தது. போலீஸ் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

தடியடிப் பிரயோகம்... கண்ணீர்க் குண்டு வெடிப்பு.. கைது செய்தல்... சிறையிலடைத்தல்.. பிரமாண்டமான ஊர்வலத்தில் கலந்து கொண்ட ஜெயப்பிரகாஷ் நாராயண் போலீஸ் தாக்குதலிலிருந்து தப்பினார். 1974 ஜூன் 5-ஆம் தேதி பாட்னாவில் கூடிய மாபெரும் பொதுக் கூட்டத்தில் முழங்கிய ஜெயப்பிரகாஷ் நாராயண் ஊழலின் உறைவிடமான பீகார் அமைச்சரவை நீக்கப்பட்டு சட்டப்பேரவை கலைக்கப்பட வேண்டும் என்று கோரினார். அக்கூட்டத்தில்தான் ஜெயப்பிரகாஷ் நாராயண் 'முழுப்புரட்சி' (Total Revolution) பற்றி பேசினார்.

நாட்டு நலனில் அக்கறை கொண்ட மக்களால் மிகவும் மரியாதையோடு மதிக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரரும் காந்தியவாதியுமான அச்யுத் பட்வர்த்தன் புரட்சித் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கும், பிரதமர் இந்திரா காந்திக்குமிடையே சமரசம் செய்ய முயன்றார். அவரது முயற்சியின் விளைவாக இரு தலைவர்களும் 1974 நவம்பர் மாதம் சந்தித்துப் பேசினர். இருசாராரும் தங்களது நிலைகளை விட்டுக் **கொடுக்காமையா**ல் அப்பேச்சு வார்த்தை தோல்வியுற்றது. பீகாரில் துவக்கப்பட்ட முழுப்புரட்சி' இந்திய மக்கள் இயக்கமாக விரிவடைந்தது.

## ஜெயப்பிரகாஷ் நாராயண் (1902-1979)

ஜெயப்பிரகாஷ் நாராயண் (ஜே.பி.) 1902 அக்டோபர் 11-ஆம் தேதி பீகார் மாநிலத்தில் சீதாப்தியாரா என்ற கிராமத்தில் ஒரு மத்தியதரக் குடும்பத்தில் பிறந்தார். சிறு வயதிலிருந்தே அளவுக்கு மீறிய அறிவாற்றலைப் பெற்றிருந்த ஜேபியாட்னா கல்லூரிப் பள்ளியில் பயின்றார். பள்ளிப் பருவத்திலேயே பாட்னாவில் தேசிய அரசியல் மையமாக விளங்கிய சரஸ்வதி பவன் நடவடிக்கைகளில் கலந்து கொண்டார். 1920 மே 16 ஆம் தேதி ஜே.பி. பிரபாவதியைத் திருமணம் செய்து கொண்டார்.

1922 அக்டோபர் 8-ஆம் தேதி ஜே.பி. அமெரிக்கா சென்றார். அங்கு

பகுதி நேர வேலை செய்து சம்பாதித்து கலிபோர்னிய, ஐயோவா, சிக்காகோ, ஓஹியோ பல்கலைக்கழகங்களில் மேற்படிப்பைத் தொடர்ந்தார். அறிவியல், கணிதம், பொருளாதாரம், சமூகவியல், உளவியல், வரலாறு, இலக்கியம், மொழியியல், உடற்கூறியல், நுண்ணுயிரியல் போன்ற பாடங்களை ஆர்வத்துடன் கற்றார். ஐரோப்பிய அறிவாளிகளுடன் தொடர்பு கொண்டு மார்க்சிய சித்தாந்தத்தில் ஆர்வம் கொண்டார். அமெரிக்காவில் ஏழாண்டுகளைக் கழித்த ஜே.பி. 1929 நவம்பர் மாதம் இந்தியா திரும்பினார்.

அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய ஜே.பி. இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டார். 1929 டிசம்பர் மாதம் வார்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொண்டபோது ஜே.பி. க்கு காந்தி, நேரு ஆகியோருடன் தொடர்பு ஏற்பட்டது. நேரு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது ஜே.பி. காங்கிரஸ் தொழிலாளர் துறையின் செயலராக நியமிக்கப்பட்டார். பின்னர் காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினரானார். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் சார்பாக தென் மாநிலங்களில் பயணம் செய்து கொண்டிருந்த ஜே.பி. 1932 செப்டம்பர் 7-ஆம் தேதி சென்னை ரயில் நிலையத்தில் கைது செய்யப்பட்டார். நாசிக் சிறையில் இருந்தபோது மினோ மசானி, அச்யுத் பட்வர்த்தன், அசோக் மேத்தா, என்.ஜி.கோரே, எஸ்.எம்.ஜோஷி, எம். எல்.தண்ட்வாலா போன்றோருடன் சோஷலிஸ்ட் கட்சியைத் துவக்குவது பற்றிக் கலந்தாலோசித்தார். அதன் விளைவாக 1934-ஆம் ஆண்டு காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி துவக்கப்பட்டது.

ஜே.பி. விடுதலைப் போராட்டத்தில் தீவிரப் பங்கேற்றமைக்காக 1937,1939.1nan ஆண்டுகளில் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். 1942 நவம்பர் மாதம் மேல ஹசாரிபாக் சிறையிலிருந்து தப்பிச் சென்றார். வெள்ளையனே வெளியேறு' இயக்கச்சி பங்கேற்றார். தலைமறைவாக இருந்து கொண்டு விடுதலைப் போராட்டத்தை ஊக்குவிக்க வந்த ஜே.பி. நேபாளத்தில் கைது செய்யப்பட்டு ஹனுமான் நகர் சிறையில் அடைக்கப்பட்ட (1943 மே). அச்சிறையிலிருந்து தப்பிய ஜே.பி. நேதாஜியின்

"அஸாத் ஹிந்த்" இராணுவத்துடன் தொடர்பு கொள்ள முயன்றார். 1943 செப்டம்பர் 18 ஆம் தேதி மோ அமிர்தசரசில் கைது செய்யப்பட்டு, லாகூர் கோட்டையில் சிறைவைக்கப்பட்டு, ஆக்ரா சிறைக்கு மாற்றப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டார் (1946 ஏப்ரல் 11).

1946-இல் நேரு இடைக்கால அரசாங்கத்தில் சேர சம்மதித்ததையும், அரசியலமைப்புச் சட்டசபையில் இடம் பெற இசைந்ததையும் ஜே.பி. கடுமையாக எதிர்த்தார். இந்தியாவை மற்றொரு போராட்டத்துக்குத் தயார் செய்ய வேண்டுமென்று கோரினார். 1947 பிப்ரவரி மாதம் ஜே.பி. யும் அவரது சகாக்களும் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி என்ற பெயரை சோஷலிஸ்ட் கட்சி என்று மாற்றினார். இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் ஜே.பி. பிரதமர் நேருவுடன் கருத்து மாறுபாடு கொண்டார். 1948 நாசிக் மாநாட்டில் சோஷலிஸ்ட் கட்சி தாய்க்கட்சியான காங்கிரசை விட்டுப் பிரிவதென்று தீர்மானித்தது. 1949 நவம்பர் மாதம் பாட்னாவில் ஜே.பி.யின் தலைமையில் பிரமாண்டமான விவசாயிகள் ஆர்ப்பாட்டம்' நடத்தப்பட்டது. 1952-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சோஷலிஸ்ட் கட்சி காங்கிரசுக்கு எதிராகப் போட்டியிட்டது. 1954-ஆம் ஆண்டு ஜே.பி. சோஷலிஸ்ட் கட்சியை விட்டு வந்து வினோபாவே அடிகள் துவக்கியிருந்த சர்வோதயா இயக்கத்தில் சேர்ந்தார்.

சர்வோதய இயக்கத்தில் சேர்ந்த ஜே.பி. வினோபாவே அடிகள் நடத்திய கிராமதான, பூதான, சம்பத்தான இயக்கங்களில் ஆர்வத்துடன் பங்கேற்றார். ஜே.பி. பௌனார் ஆசிரமத்தில் வினோபாவே அடிகளுடன் தங்கியிருந்தபோது முழு புரட்சி' (Total Revolution) யின் தேவை பற்றிக் குரல் கொடுத்தார். பீகார் நக்சலைட்டுகள் பிரச்னையும், முசாபர்பூரில் சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளைக்காரர்கள் ஜே.பி. யிடம் சரணடைந்ததும் முழுப்புரட்சியின் தேவையை உணர்த்தியது. 1974 இல் குஜராத்தில் வெடித்த கிளர்ச்சி ஜே.பி. யின் முழுப்புரட்சி துவக்கப்படுவதற்குத் தூண்டுகோலாக இருந்தது. பீகார் **கிளர்ச்சியி**ன் போது முழுப்புரட்சி துவக்கப்பட்டது. அதன் விளைவாக 1977-இல் ஜே.பி. யின் தலைமையில்

ஜனதா கட்சி துவக்கப்பட்டது. அக்கட்சி தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. ஜே.பி.யின் முழுப்புரட்சி 'ஜனதா புரட்சி' யாக உருவெடுத்தது.

# ஜனதா புரட்சி 1977-1979

### ஜனதா கட்சியின் எழுச்சி

1977-ஆம் ஆண்டு சமகால இந்திய வரலாற்றில் திருப்பு முனையை ஏற்படுத்திய ஆண்டாகும். அந்த ஆண்டில் நாடாளுமன்ற மக்களவைக்கு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வீ ழ்ச்சி அடைந்து ஜனதா கட்சி எழுச்சி பெற்று ஆட்சி அமைத்தது. ஜனதா கட்சியின் எழுச்சி 1) இந்தியாவின் நெருக்கடி நிலையை முடிவுக்குக் கொண்டு வந்தது; 2) நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் புதுப்பித்துப் புத்துயிர் அளித்தது; 3) நேரு-காந்தி குடும்ப ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது. “இது போன்ற புரட்சி கற்காலத்திலிருந்து தற்காலம் வரை இந்திய வரலாற்றில் நிகழ்ந்ததில்லை”-ஜே.என்.நாயக்.

## எழுச்சிக்கான பின்னணி

ஜனதா கட்சி ஒரு தெளிவான குறிக்கோளையோ, கொள்கையையோ, திட்டத்தையோ, அமைப்பையோ கொண்ட அரசியல் கட்சி அல்ல. மாறாக, அது பல குறிக்கோள்களையும், கொள்கைகளையும், திட்டங்களையும், அமைப்புகளையும் கொண்ட பல கட்சிகளின் இணைப்பாகும். இப்பலகட்சி இணைப்புக்கான பின்னணிக் **காரணங்களாவன**

**1. பாரதீய ஜனதா தளம் (Bharatiya Janata Dal)**

நான்காவது பொதுத்தேர்தலுக்குமுன் இந்திய தேசிய காங்கிரசிலிருந்து பிரிந்துவந்த சரண்சிங் பாரதீய கிரந்தி தளம் (Bharatiya Granti Dal) என்ற கட்சியைத் துவக்கினார். அக்கட்சியோடு சம்யுக்த சோஷலிட் கட்சி, உத்கல் காங்கிரஸ், ராஷ்ட்ரீய லோக் தந்திரிக் கட்சி, கிசான் மஸ்தூர் கட்சி (அரியானா) கேத்திபாரி கிசான் யூனியன் (பஞ்சாப்), சுதந்திரா கட்சி ஆகிய கட்சிகள் சேர்ந்து பாரதீய லோக் தளம் என்ற புதிய கட்சியை 1974ஆம் ஆண்டின் மத்தியில்

உருவாக்கின.

## 2. பாரதீய லோக் தளத்தின் நோக்கங்களாவன:

1) ஒருமித்த கருத்துடைய காங்கிரசல்லாத, கம்யூனிஸ்டல்லாத எதிர்க்கட்சிகளை ஒரு குடையின்கீழ்க் கொண்டுவருதல்; 2) இந்திரா காங்கிரசுக்கு பதில் தேசிய மாற்றுக் கட்சியை உருவாக்குதல்; 3) நடைமுறை சாத்தியமான பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றல்; 4) சிதறிக் கிடந்த வாக்குகளை ஒன்று திரட்டி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அரசாங்கத்தையும், நிர்வாகத்தையும் உறுதி செய்தல். சுருங்கக்கூறின், இந்திரா காங்கிரசுக்கு மாற்று அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற பாரதீய லோக் தளத்தின் நோக்கம் ஜனதா கட்சியின் அடித்தளமாயிற்று.

## 3 ஜே.பி. இயக்கம் (The J.P. Movement)

ஜெயப்பிரகாஷ் நாராயணின் மக்கள் இயக்கம் (People's Movernment) பாரதிய லோக் தளத்தின் நோக்கம் தேசிய அங்கீகாரம் பெருவதற்குக் காரணமாகவும், கருவியாகவும் இருந்தது. ஓரணியாகத் திரண்ட காங்கிரஸ் கம்யூனிஸ்ட் அல்லாத எதிர்க் கட்சிகளின் அமைப்பு ஜே.பி.இயக்கத்தின் செல்வாக்கின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. அதன் விளைவாக எதிர்க் கட்சிகளிடையே இருந்த கொள்கை வேறுபாடுகளும், மாறுபாடுகளும் நடைமுறைக்குச் சாத்தியமான ஒருமித்த கருத்து' (Pragrnatic consen sus) என்ற கடலில் கரையலாயின. எதிர்க்கட்சிகள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தேசிய ஒருங்கிணைப்புக் குழு (A National Coordination committee) அமைக்கப்பட்டது. அக்குழுவில் பாரதீய லோக் தளம், ஜன சங்கம், ஸ்தாபன காங்கிரஸ் மற்றும் சோஷலிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகள் இடம்பெற்றன. அக்குழுவின் தலைவரான மது லிமாயே புதிய கட்சி பின்பற்றுவதற்கான சமூக-பொருளாதாரத் திட்டத்தைத் தயாரித்தார். அத்திட்டத்துக்குப் பரவலான வரவேற்பு இருந்தது. எனவே ஜே.பி. இயக்கம் ஜனதா கட்சி உருவாவதற்கு உந்துகோலாக இருந்தது.

## 4 ஜனதா மோர்ச்சா (Janata Morcha)

குஜராத் கிளர்ச்சியின் தாக்கத்தாலும், மொரார்ஜி தேசாயின் உறுதியான உண்ணாவிரதத்தின் விளைவாகவும் சிமன்பாய் பட்டேலின் அமைச்சரவை

கலைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து குஜராத்தில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் ஜே.பி. இயக்கத்தை ஆதரித்த கட்சிகள் ஒன்று சேர்ந்து ஜனதா மோர்ச்சா என்ற முன்னணியை உருவாக்கின. ஜனதா மோர்ச்சா பொதுத் திட்டத்தை (Common Programme)த் தயாரித்து அதை முன்வைத்துத் தேர்தலில் போட்டியிட்டு வென்றது. குஜராத்தில் காங்கிரசல்லாத பாபுராவ் பட்டேலின் தலைமையில் ஜனதா மோர்ச்சா அரசாங்கம் அமைக்கப்பட்டது. அப்புதிய புரட்சிகரமான மாநிலப் பரிசோதனை மத்தியிலும் சாத்தியம் என்ற நம்பிக்கை எதிர்க்கட்சிகளிடையே எழுந்தது. எனவே ஜனதா மோர்ச்சாவின் குஜராத் வெற்றி ஜனதா கட்சி எழுவதற்கு முன்னுதாரணமாக இருந்தது.

**5 கூட்டுக் கட்சி முயற்சிகள் (Efforts Towark A Federal Party)**

தேசிய மாற்றுக் கட்சியின் தேவை, ஜே.பி. இயக்கத்தின் தாக்கம், ஜனதா மோர்ச்சா முயற்சி வெற்றி ஆகியவற்றை மனதில் கொண்டு முக்கிய எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் ஒருதேசிய கூட்டுக் கட்சியை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். உதாரணமாக ஜன சங்கத்தின் வாஜ்பாயி மற்றும் குவாலியர் ராஜ மாதா, ஸ்தாபன காங்கிரசின் அசோக் மேத்தா, சோஷலிஸ்ட் கட்சியின் என்.ஜி.சோரே ஆகியோர் கட்சிகள் இணைப்பு நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டனர். அவர்களுடைய முயற்சி வீ ண்போகவில்லை

1975 ஜூன் 20-லிருந்து 24 தேதிகளில் பாரதீய லோக்தளம், ஸ்தாபன காங்கிரஸ், சோஷலிஸ்ட் கட்சி, அகாலி தளம் ஆகிய கட்சிகளின் ஆட்சிக் குழுவினர் புது டெல்லியில் ஒன்று கூடி ஒரு தேசிய கூட்டுக்கட்சி அமைப்பது பற்றி ஆலோசித்தனர். எதிர்க்கட்சிகளின் ஆட்சிக் குழுவினர் கூட்டுக் கூட்டத்துக்கு மொரார்ஜி தேசாய் தலைமை தாங்கினார். ஜெயப்பிரகாஷ் நாராயண் பாட்னாவிலிருந்து வந்து சிறப்புரையாற்றினார். மது லிமாயே கூட்டுக் கட்சித் திட்டத்தை நிகழ்ச்சி நிரலாகக் கொண்டு வந்தார். அத்திட்டம் பிரதிநிதியாளர்களால் அங்கீகரிக்கப்பட்டது. கூட்டுக் கட்சி அமைப்பது பற்றிய விவாதத்தின் போதுதான் இந்திரா காந்திக்கு எதிரான அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்புவெளியாயிற்று. அத்தீர்ப்பும், அதைத் தொடர்ந்து பிரகடனப்படுத்தப்பட்ட நெருக்கடி நிலையும் எதிர்க் கட்சிகளின் கூட்டுக் கட்சி முயற்சிக்கு உத்வேகத்தைக் கொடுத்தது.

**6 நெருக்கடி நிலை அனுபவம் (Emergency Experience)**

எதிர்க்கட்சித் தலைவர்கள் புது டெல்லியில் புதுக்கட்சி அமைப்பது முடிவெடுத்த அன்று நள்ளிரவில் கைது செய்யப்பட்டனர் (1975 ஜூன் 24). அடுக்க நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. நாடு முழுவதும் எஞ்சியிருந்த எதிர்க் கட்சி தலைவர்களும் பல்லாயிரக்கணக்கான கட்சித் தொண்டர்களும் கைது செய்யப்பட்ட விசாரணையின்றி சிறையிலடைக்கப் பட்டனர். பத்திரிக்கை சுதந்திரம் பறி செய்யப்பட்டது. நானாஜி தேஷ்முக், ஜார்ஜ் பெர்னாண்டர்ஸ், கர்ப்பூரி தாக்கூர் போன்றோர் தலைமறைவாயினர். நெருக்கடி நிலையை எதிர்த்து மேற்கொள்ளப் பட்ட சத்யாகிரகப் போராட்டங்கள் ஒடுக்கப்பட்டன. அத்தகைய சூழ்நிலையில் சிறைப்பட்டிருந்த தலைவர்கள் சர்வாதிகாரக் காங்கிரசை ஆட்சியிலிருந்து அகற்றிவிட்டு இந்திய நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சியை மீட்கத் தீர்மானித்தார். "ஸ்ரீகிருஷ்ணனைப் போன்று பல கட்சியும் சிறையில் பிறந்தது" என்று குறிப்பிட்டுள்ளார் ஜே.ஏ.நாயக், எனவே. எதிர்க்கட்சித் தலைவர்களின் நெருக்கடி நிலைச் சிறை அனுபவம் ஜனதா கட்சி தோன்றப் பெரிதும் காரணமாக இருந்தது.

**7 ஜனதா கட்சியின் தோற்றம்**

1977 ஜனவரி 18-ஆம் தேதி பொதுத் தேர்தல் நடத்தப்படுவதைப் பற்றி அறிவிக்கப்பட்டதேயன்றி நெருக்கடி நிலை விலக்கிக் கொள்ளப்படவில்லை. தேர்தலை சந்திக்க இரண்டுமாதகால அவகாசம்கூட இல்லை. கட்சித் தொண்டர்கள் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட வில்லை. விடுதலை செய்யப்பட்ட தலைவர்களும் நெருக்கடி நீக்கம் "கண் துடைப்புச் செயல்" என்றே கருதினர். எனினும் அவர்கள் தயக்கத்தைக் கைவிட்டுத் துணிந்து செயல்படத் துவங்கினர்.

"சிறையில் பிறந்த கட்சி"க்கு முறையான வடிவம் கொடுக்கப்பட்டது. மொரார்ஜி தேசாய் தலைவராகவும், சரண் சிங் துணைத் தலைவராகவும் புதியதாக உருவாக்கப்பட்ட ஜனதா கட்சி (Janata Party) க்குப் பொறுப்பேற்றனர். ஜன சங்கம், ஸ்தாபன காங்கிரஸ், சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்கள் பொதுச் செயலாளார்கள் ஆனார்கள். பின்னர் 1977 மே மாதம் முதல் தேதி எஸ்.சந்திரசேகரைத் தலைவராகக் கொண்ட ஜனதா கட்சி அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஜனதா கட்சி தேர்தலை சந்தித்தபோது 'கட்சிகளின் கலவை' யாக அவசர அரசியல் ஏற்பாடாக இருந்ததேயன்றி சம்மந்தப்பட்ட கட்சிகளின் பொதுக்குழுக்களால் முறைப்படி அங்கீகரிக்கப்பட்ட தனிக்கட்சியாக இல்லை. ஜனதா கட்சி அரசியல் இயற்பியல் மாற்றமே (Physical Change) யன்றி வேதியில் மாற்ற (Chemical Change)மல்ல. சுருங்கக் கூறின், நெருக்கடி நிலையால் எற்பட்ட பிரசவ வலியால் குறைப்பிரசவக் குழந்தையாகப் பிறந்ததே ஜனதா கட்சி ஆகும்.

## பொதுத் தேர்தல்

## தேர்தல் அறிவிப்பு

1977 ஜனவரி 18 ஆம் தேதி பொதுத் தேர்தல் பற்றிய அறிவிப்பு வெளியான அன்றே, குடியரசுத் தலைவர் நாடாளுமன்ற மக்களவையைக் கலைத்து விட்டதாகவும் அறிவித்தார். ஐந்தாண்டு காலம் முடிவதற்கு முன்பே மக்களவை கலைக்கப்பட்டது. நெருக்கடி நிலையின் போது மக்களவையின் காலம் ஆறு ஆண்டுகளாக நீடிக்கப்பட்டது. பின்னர் அந்த ஆறாண்டு காலம் முடிவதற்கு முன்பே மக்களை மீண்டும் கலைக்கப்பட்டது. தேர்தல் அறிவிக்கப்பட்டது.

### ஜனதா கட்சியின் தேர்தல் அறிக்கை

1977 பிப்ரவரி 10 ஆம் தேதி ஜனதா கட்சியின் தேர்தல் அறிக்கை (Election Manifesto) வெளியிடப்பட்டது. ஜனதா கட்சி காந்திய மதிப்புகளுக்கு (Gandhian values)த் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது. இந்தியாவின் பண்பாட்டு மரபைப் போற்றி, விடுதலைப் போராட்டத்தின் உன்னதமான நோக்கங்களை மனதில்கொண்டு, ஜனநாயக சோஷலிச சமுதாயத்தை உருவாக்கும் என்று தேர்தல் அறிக்கை கூறியது.

### தேர்தல் முடிவுகள்

பொதுத் தேர்தல் பற்றிய அறிவிப்பு நாட்டில் மிகுந்த பரபரப்பையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியது. 1977 மார்ச் 21-ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் 320 மில்லியன் மக்கள் வாக்களிக்கும் தகுதியைப் பெற்றிருந்தனர். 200 மில்லியன் வாக்காளர்கள் வாக்களித்தனர். இந்த எண்ணிக்கை 1971 தேர்தலில் "இந்திரா அலை" வேகமாக வீ சியபோது வாக்களித்தோரின் எண்ணிக்கையைவிட அதிகம். உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயகத் தேர்தல் அது. சமகால இந்தியாவில் மிக

அதிகமான வாக்களார்கள் பங்கேற்றத் தேர்தலும் இதுதான்.

1977 தேர்தலின் "கதாநாயகக் கட்சி" யான ஜனதா கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் போட்டியிட்ட 493 இடங்களில் 270 இடங்களைக் கைப்பற்றின. வாக்களித்தோரில் 43 விழுக்காடு இடங்கள் இவற்றுக்குக் கிடைத்தன. இத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் படுதோல்வி அடைந்தது. அக்கட்சியால் மொத்தம் 35 விழுக்காடு இடங்களில் மட்டுமே வெற்றிபெற முடிந்தது. காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்ட 49 அமைச்சர்களில் 15 பேர் மட்டுமே வெற்றி பெற்றனர். உத்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார், அரியானா ஆகிய வடஇந்திய மாநிலங்களில் இந்திரா காங்கிரசுக்கு ஒரு இடம் மட்டுமே கிடைத்தது.

ரேபரேலியில் போட்டியிட்ட இந்திரா காந்தி, ராஜ் நாராயணிடம் தோற்றுப் போனார். அதேபோன்று அமேதி தொகுதியில் சஞ்சய் காந்தி தோற்றார். காங்கிரசின் தோழமைக் கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியையும் வாக்காளர்கள் நிராகரித்தனர். அக்கட்சியால் 7 இடங்களை மட்டுமே பெற முடிந்தது. மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியால் மேற்கு வங்காளத்தில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. வட மாநிலங்களில் வீ ழ்ச்சியடைந்த காங்கிரசால் ஆந்திரா, கர்நாடகா, தமிழ் நாடு, கேரளா ஆகிய தென் மாநிலங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. புதிய நாடாளுமன்றத்தில் பாதி இடங்களைப் பிடித்த ஜனதா கட்சிக் கூட்டணி ஜெகஜீவன் ராமின் ஜனநாயகக் காங்கிரஸ் மற்றும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவோடு ஆட்சியை அமைப்பதற்குப் போதிய பலத்தைப் பெற்றது.

1977 தேர்தலில் இந்திரா காந்தி கொண்டு வந்த நெருக்கடி நிலையை மையமாகக் கொண்டு எதிர்க் கட்சிகள் போட்டியிட்டன. இத்தேர்தல் நெருக்கடி நிலை பற்றிய மக்களின் ஒப்புதல் வாக்கெடுப்பு (Referendum) என்றே கூறலாம். மக்களின் அடிப்படை உரிமை பற்றிய கருத்துக்கணிப்பாகும். வாக்காளர்கள் நெருக்கடி நிலையை இந்திரா காக்க இணைத்துப் பார்த்ததால் அவரையும் அவரது கட்சியையும் நிராகரித்தனர். கடுமையாகக் தண்டித்தனர். இத்தேர்தல் இந்திய நாடாளுமன்ற ஜனநாயகம் நிலைமைக்குத் தக்கம் மாறுதலடையக் கூடிய தன்மைக்கு (resilience) நல்ல முன்னுதாரணமாகும். இந்திரா காந்தியின் அரசியல் ஆளுமைக் கவர்ச்சியும் (charisma), சாணக்கியத்

தந்திரங்களும். நேரு-காந்தி குடும்பப் பின்னணியும், சூறாவளி சுற்றுப் பயணமும் எடுபடவில்லை .

இந்த அரசியல் தேர்தல்கொந்தளிப்பு காங்கிரசின் பிரளயப் பேரழிவாயில் நெருக்கடி நிலை நீக்கம் இந்திரா காந்திக்கு மக்களின் ஆதரவைப் பெற உதவவில்லை. தேர்தல் முடிவு அவருக்கு "மோசமான அழிவு", "முழுமையான இழப்பு" என். குறிப்பிட்டுள்ளார் பூபுல் ஜெயகர். இத்தேர்தல் முப்பதாண்டு கால இடையறா காங்கிரஸ் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தது என்று கருதுகிறார் வால்பெர்ட் "1937-இல் உருவான காங்கிரஸ் மரபு 1977-இல் நிலை குலைந்தது. "இந்திரா காந்தியின் தனிப்பட்ட தோல்வி நேரு குடும்ப வரலாற்றின் மிகவும் மோசமான நிலையைக் குறிக்கிறது" என்று எழுதியுள்ளார் தாரிக் அலி. "பத்தொன்பது மாதகால நெருக்கடிக் கொடுமை ஜனதா சூறாவளியால் அடித்துச் செல்லப்பட்டது; மக்களின் மனக்குமுறல் மகிழ்ச்சியற்ற ஆச்சர்யமாக வெளிப்பட்டது" என்று விமரிச்சித்தார் குஷ்வந்த் சிங்.

## ராஜ் நாராயண்

1977 தேர்தலில் ரே பரேலி தொகுதியில் ராஜ் நாராயண் இந்திரா காந்தியை எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெற்றதால் மக்களால் பெரிதும் பேசப்பட்டார். இந்திரா காந்தி இவரிடம் தோல்வி காணும் அளவுக்கு மக்களிடையே செல்வாக்கு இழந்திருந்தார். ராஜ் நாராயண் வாரனாசிக்காரர். மண்ணின் மைந்தர். இளவயதில் குத்துச் சண்டை வீ ரராக இருந்தவர். இவர் விவசாயிகள் மற்றும் கைவினைஞர்களின் வாழ்க்கைச் சந்தங்களை நன்கறிந்தவர். அவர்களின் பாடல்கள், புராணக் கதைகள், விருப்பு வெறுப்புகள் கோபதாபங்கள், வேண்டுதல், வேண்டாமைகள் ஆகிய அனைத்தும் அவருக்கு அத்துபடி. ராஜ் நராயண் பழமைக் கருத்துகளிலும் மூடநம்பிக்கைகளிலும் ஊறிப்போனவர் அனுமார் உபாசகர்.

ராஜ் நாராயணனின் அரசியல்பிரவேசம் விளையாட்டுத் தனமானது. 1971 பொதுத் தேர்தலில் இவர் இந்திரா காந்திக்கு எதிராகப் போட்டியிட்டு ஒரு இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் தோற்றார். இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று இவர் அலகாபாத் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்; வெற்றி பெற்றார். பின்னர் நாட்டு நெருக்கடி நிலை நீக்கப்பட்டுப் பொதுத் தேர்தல் நடைபெற்ற போது ராஜ் நாராயண் மீண்டும் இந்திரா காந்திக்கு

எதிராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். மொரார்ஜி தேசாய் அமைச்சரவையில் இடம் பெற்றார். அதன்பின் இவரும் ஜார்ஜ்பெர்னாண்டசும் ஜனதா அமைச்சரவையிலிருந்து ராஜினாமா செய்தனர். சோஷலிஸ்ட் தலைவர்களில் ஒருவரானார். ராஜ் நாராயண் "அரசியல் கோமாளி" என்று அறியப்பட்டார்.

## இரத்தம் சிந்தாப் புரட்சி

1977 பொதுத் தேர்தலின் விளைவாகச் சமகால இந்தியாவில் மாபெரும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. முப்பதாண்டு காலம் தொடர்ந்து ஆட்சி செய்து வந்த காங்கிரஸ் கட்சிக்கு பதில் ஜனதா கட்சி ஆட்சியைப் பிடித்தது. தேர்தலில் தோல்வியுற்ற இந்திரா காந்தி ஜனநாயக மரபுப்படி ஜனதா ஆட்சிக்கு வழிவிட்டு விலகினார். "தேர்தல் அறிவிக்கப்பட்டபின் இந்திரா காந்தி எதிர்க்கட்சிகளின் பிரச்சாரத்துக்கு எவ்வித கட்டுப்பாடும் விதிக்கவில்லை. மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதித்தார். இது இவரது தகுதிக்குரிய தனிச்சிறப்பாகும்" என்று குறிப்பிட்டுள்ளார் வி.கே.நரசிம்மன். 1977 துவக்கத்தில் பாகிஸ்தானில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் புட்டோ பெரிய அளவில் ஆள்மாறாட்டத் தில்லுமுல்லுகள் (rigging) செய்து எதிர்க்கட்சிகளைத் தலைதூக்கவிடாமல் செய்து விட்டார். அதோடு ஒப்பிட அதே ஆண்டு இந்தியாவில் நடத்தப்பட்ட தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும் இருந்தது என்பதில் ஐயமில்லை. ஆளும் கட்சி நெருக்கடிக் கால அதிகாரங்கள் அனைத்தையும் வைத்துக் கொண்டு, தேர்தலை நியாயமாக நடத்தி, அமைதியான ஆட்சிமாற்றத்துக்கு வழிவகுத்தமைக்கு இணையான முன்னுதாரணம் உலக வரலாற்றில் இல்லை. இந்த ஆட்சி மாற்றம் நாடாளுமன்ற ஜனநாயக வரலாற்றில் நிகழ்ந்த "இரத்தம் சிந்தாப் புரட்சி" (Bloodless Revolution) ஆகும்.

## ஜனதா அரசாங்கம்

## ஆட்சி மாற்றம்

இந்தியா சுதந்திரம் பெற்று முப்பதாண்டுகள் கழித்து காங்கிரஸ் ஆட்சிக்குப் பதில் ஜனதா ஆட்சி ஏற்பட்டது. 1977 மார்ச் 22-ஆம் தேதி தேர்தலில் தோல்வியுற்ற இந்திரா காந்தி தனது பிரதமர் பதவி விலகல் கடிதத்தைக் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்தார். சம்பிரதாயப்படி அவர் புதிய பிரதமர்

பதவிப் பொறுப்பேற்கும் வரை பதவியில் நீடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். தேர்தலில் வெற்றி வாகை சூடிய ஜனதாத் தலைவர்களும் உறுப்பினர்களும் தேசபிதா காந்தியடிகளின் சமாதியில் கூடி (மார்ச் 24) காந்தி காட்டிய வழி சென்று, ஒற்றுமையுடன் செயல்பட்டு, பொதுவாழ்வில் நேர்மையையும், வாய்மையும் தூய்மையையும் கடைபிடிப்பதென்று சூளுரை எடுத்துக் கொண்டனர். அதன்பின் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட ஜெயப்பிரகாஷ் நாராயணும், ஆச்சார்ய கிருபளாணியும் ஜனதா கட்சித் தலைவர்களின் ஒருமித்த கருத்தறிந்து மொரார்ஜி தேசாயின் பெயரை நாடாளுமன்ற மக்களவைத் தலைவராகப் பரிந்துரை செய்தனர். அவர்களது பரிந்துரை ஒருமித்த ஒப்புதலைப் பெற்றது. மொரார்ஜி தேசாய் பிரதமர் பொறுப்பேற்று அரசாங்கத்தை அமைக்குமாறு குடியரசுத் தலைவரால் அழைக்கப்பட்டார்.

**பிரதமர் மொரார்ஜி தேசாய்**

1977 மார்ச் 23-ஆம் தேதி பிற்பகல் மொரார்ஜி தேசாய்க்கு ராஷ்டிரபதி பவனில் பிரதமர் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. தேசாய் இந்தியாவின் நான்காவது பிரதமராகப் பொறுப்பேற்றார். 19 மாதகால வனவாசத்துக்குப்பின் இந்திய நாடாளுமன்ற ஜனநாயகம் மீண்டும் அரியணை ஏறியது. இந்நிகழ்ச்சியை "மூச்சுத் திணறிக் கொண்டிருந்த நாட்டின் ஜனநாயக மறுபிறப்பு" என்று குறிப்பிட்டுள்ளார் வி.கே.நரசிம்மன். பிரதமர் மொரார்ஜி தேசாய் ஜனதா கட்சியின் தேர்தல் பிரகடன வாக்குறுதிகளை நிறைவேற்றத் தயாரானார். 81 வயதான பிரதமர் மொரார்ஜி தேசாய் காந்தி ராஜ்யத்தை ஏற்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஜனதா அரசாங்க நடவடிக்கைகள்

**ஜனநாயக முறையை மீட்டல்**

சமகால இந்திய வரலாற்றில் முதல் காங்கிரசல்லாத ஜனதா அரசாங்கத்தின் முதல் முக்கியப் பணி நெருக்கடிக்கால யதேச்சதிகார ஆட்சி முறையை அகற்றி மக்கள் ஜனநாயக முறையை மீட்டதாகும். 1977 மார்ச் 27-ம் தேதி 1971ல் பிறப்பிக்கப்பட்ட 'வெளி நெருக்கடி' (External Emergency) நீக்கப்பட்டது. மக்களின் 'அடிப்படை உரிமைகள்' முழுமையாக மீட்கப்பட்டன. அரசியலமைப்புச்

சட்டத்தின் கட்டமைப்பைக் குலைத்த 42வது சட்டத்திருத்தம் 44வது சட்டத் திருத்தத்தின் மூலம் ரத்து செய்யப்பட்டது. மத்திய மாநிலச் சட்டங்களின் 'சட்டத் தகுதி'யைத் தீர்மானிக்கும் உரிமை உச்ச நீதிமன்றத்துக்கு மீண்டும் வழங்கப்பட்டது. நெருக்கடி காலத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி நிவர்த்திக்கப்பட்டது. பத்திரிக்கைச் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டது. நாடாளுமன்ற நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகளை வெளியிடுவதற்கு விதிக்கப்பட்ட தடை விலக்கிக் கொள்ளப்பட்டது. அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன் சுதந்திரமாகச் செயல்படுவதற்கான வழிவகைகளைப் பரிந்துரைக்க வர்க்கீஸ் குழு (Verghese Committee) அமைக்கப்பட்டு அதன் அறிக்கையின் மீது பிரசார் பாரதி மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது (1976, மே 17). சுருங்கக்கூறின் நெருக்கடிகால யதேச்சதிகார அத்துமீறல்களை அகற்றி மீண்டும் முழு மக்களாட்சி முறையை மீட்டது ஜனதா ஆட்சியின் மகத்தான சாதனையாகும்.

## மாநில சட்டப் பேரவைகள் கலைப்பு

ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த ஒரு மாதத்துக்குள் 1977 தேர்தலில் காங்கிரஸ் தோல்வி கண்ட 9 மாநிலங்களின் சட்டப் பேரவைகளைக் கலைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டது. மத்திய உள்துறை அமைச்சராயிருந்த சவுத்திரி சரண் சிங் (Choudri Charan Singh) பஞ்சாப் அரியானா, இமாச்சல பிரதேசம் உத்திர பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்களுக்குச் சட்டப்பேரவைகளைக் கலைத்துவிடுமாறு கடிதம் எழுதினார் (ஏப்ரல் 9). சம்பந்தப்பட்ட முதலைமைச்சர்கள் மத்திய அரசாங்க நடவடிக்கையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் நீதி ஆணை விண்ண ப்பம் (Writ Petition) செய்தனர். ஏழு நீதிபதிகளைக் கொண்ட "பெஞ்ச்' ஐந்து நாட்கள் வழக்கை விசாரித்து மாநில விண்ணப்பங்களைத் தள்ளுபடி செய்தது.(ஏப்ரல் 29) உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப்பின் ஜனதா அரசாங்கம் மாநில சட்டப்பேரவைகளைக் கலைப்பதில் முனைப்புடன் செயல்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 356 சரத்துப்படி 9 சட்டப் பேரவைகளைக் கலைத்துவிடுமாறு பிரதமர்மொரார்ஜி தேசாய் பொறுப்புக்

குடியரசுத் தலைவர் ஜாட்டியைக் கேட்டுக்கொண்டார். 1977 ஏப்ரல் 30 ஆம் தேதி 9 மாநிலச் சட்டமன்றப் பேரவைகள் கலைக்கப்பட்டு, அம்மாநிலங்கள் குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்டன.

நாடாளுமன்றத் தேர்தலில் தோற்ற 9 சட்டப் பேரவைகளும் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது என்ற காரணத்தைக் காட்டி அச்சட்டப்பேரவைகளைக் கலைத்த ஜனதா அரசாங்கத்தின் செயல் சர்ச்சைக்குள்ளானது.அந்நடவடிக்கையின் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் அரசியல் விளைவுகள் பற்றி விவாதிக்கப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல் முடிவை அளவுகோலாக் கொண்டு மாநில சட்டப்பேரவையைக் கலைப்பது "விசித்திரமான கொள்கை " (Strange Doctrine) ஆகும் என்று கருதுகிறார் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன். ஜனதா அரசாங்கத்தின் நடவடிக்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 356 வதுசரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதற்கான வெளிப்படையான சட்டமீறலாகும். இச்செயல் ஜனநாயக விரோதமானது. அரசியலமைப்புச் சட்ட உணர்வுக்கு எதிர்மறையானது.

ஜனதா அரசாங்கம் 9 மாநில சட்டப் பேரவைகளை ஒட்டுமொத்தமாகக் கலைத்தது அரசியல் உள்நோக்கம் கொண்டது. ஏனெனில் ஜனதா கட்சிக்கு நாடாளுமன்ற மக்களவையில் பெரும்பான்மை பலம் இருந்ததேயன்றி மாநிலங்கள் அவையில் இல்லை. எனவே, வரவிருந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் ஜனதா கட்சியின் வேட்பாளர் வெற்றி பெற வாய்ப்பில்லை. ஜனதா கட்சி கலைக்கப்பட்ட சட்டப் பேரவைகளைக் கைப்பற்றி அவைகளின் கூடுதலான ஆதரவுடன் அதன் வேட்பாளரின் வெற்றி வாய்ப்பை உறுதி செய்யும் உள்நோக்கத்துடன் சட்டப் பேரவைக் கலைப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஜனதா கட்சி எதிர்பார்த்ததைப் போன்றே கலைக்கப்பட்ட மாநிலங்களைக் கைப்பற்றி ஜனதா கட்சி வேட்பாளரான சஞ்சீவ் ரெட்டியை வெற்றி பெறச் செய்தது.

அரசியலமைப்புச் சட்டத்தைச் செயல்படுத்தமுடியாத அளவுக்குச் சட்டச் சீர்குலைவு எதுவும் இல்லாத போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 9 மாநிலச் சட்டப் பேரவைகளைக் கலைத்தது ஜனதா கட்சி ஏற்படுத்திய மோசமான முன்மாதிரியாகும். இது அரசியல் ஆரோக்கியமற்ற செயல். ஜனதா அரசாங்கத்தின் சட்டமன்றக் கலைப்பு நடவடிக்கையில் காந்திய வாய்மையோ அரசியல்

நேர்மையோ இல்லை. இச்செயலை "முதல் அரசியலமைப்பு ரீதியான வெற்றி" எனக் கூறுவது வஞ்சப் புகழ்ச்சி ஆகும். மாநில சட்டமன்றக் கலைப்பு ஜனதா ஆட்சியின் துவக்கத்திலேயே ஏற்பட்ட நிரந்தர களங்கமாகும். தேசாயின் காந்தியவாதம் கேள்விக்குறியாயிற்று.

## சுருள் திட்ட ம் (Rolling Plan)

ஒன்பது மாநிலங்கள் சட்டப் பேரவைகளைக் கலைத்த பின் நேருவின் திட்டமிட்டப் பொருளாதார முறையில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்த முற்பட்டது ஜனதா அரசாங்கம். ஐந்தாண்டுத் திட்டத்துக்குப் பதில் "சுருள் திட்டத்"தைக் கொண்டு வந்தது. ஐந்தாண்டுத் திட்ட வடிவத்தை வைத்துக் கொண்டு அதன் உள்ளீ ட்டை மாற்றுவதே சுருள் திட்டத்தின் நோக்கமாகும். சுருள் திட்டம் ஆண்டுத் திட்டமாகும். அரசாங்கத் துறைவாரியான செயல் நிறைவேற்றத்துக்கு ஏற்றவாறு திட்ட இலக்குகள், பொருள் ஆதாரங்கள் போன்றவை ஒவ்வொரு ஆண்டும் மாற்றி அமைக்கப்படும். வறுமை ஒழிப்பு வேலை வாய்ப்பை அதிகரித்தல், வருமான ஏற்றத்தாழ்வைக் குறைத்தல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு ஆண்டு இலக்குகளை நிர்ணயிப்பதே சுருள் திட்டத்தின் சாரமாகும். அதற்கேற்ப 1978-79 ஆம் ஆண்டுக்கான திட்ட வழிகாட்டு விதிகள் (Plan Guidelines) தயாரிக்கப்பட்டன (1977 செப்டம்பர் 10). அதற்கேற்ப விவசாயத்துக்கு முன்னுரிமை கொடுத்து சுருள் திட்டத்தை தயாரித்து செயல்படுத்துமாறு மாநில அரசாங்கங்கள் ரூ.1,16,240 கோடி முதலீட்டுக்கான 1978-1983க்கான ஐந்தாண்டுத் திட்டமும் தயாரிக்கப்பட்டது.

சுருள் திட்டக் கருத்து ஜனதா அரசாங்கத்தின் கண்டுபிடிப்பு அல்ல. இத்தகைய சுருள் திட்டக் கோட்பாட்டை பர்பின் (Durbin) கேர்ன்கிராஸ் (caimcross), மிர்தால் (Myrdal) போன்ற பொருளாதார வல்லுனர்கள் வளரும் நாடுகளுக்குப் பொருத்தமானது என்று கூறியுள்ளனர். போலந்து போன்ற நாடுகளில் சுருள் திட்டச் செயல்பாங்கு நடைமுறையில் உள்ளது. நெகிழ்வுத் தன்மையும் (Flexibility), யதார்த்தமும் (realism) சுருள் திட்டத்தின் பலமாகும். எனினும் சுருள் திட்ட முறையில் பலத்தைவிடப் பலவீ னங்களே அதிகம். 1)நெகிழ்வுத் தன்மை தற்காலிகத் திட்டத்தை (Adhoc Planning) ஊக்குவிக்கும்; 2) இலக்கு நிறைவேற்றத்தில் ஆர்வமும் முனைப்பும் குறையும்; 3) செயல் நிறைவேற்றத்துக்கான பொறுப்பு

தட்டிக் கழிக்கப்படும், “தள்ளிப் போடும் மனப்பான்மை” வளரும்; 4) ஆண்டுத் திட்ட மாற்றத்துக்குத் தேவையான புள்ளி விவரத் தகவல்கள் கிடைப்பது கடினம்; 5)இத்திட்டத்தை நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்துவதில் பல நிர்வாகச் சிக்கல்கள் உண்டு; 6) மத்திய சுருள் திட்டத்தை மாநில சுருள் திட்டங்களோடு ஒருங்கிணைப்பது இந்தியா போன்ற பெரிய நாட்டில் சாத்தியமல்ல. சுருள் திட்டத்தின் புதுமை (Novelty) மக்களின் மனதை வெகுவாகக் கவர்ந்தது. ஆனால் நடைமுறைச் சிக்கல்கள் சுருள் திட்டத்தை எட்டுத் திட்டமாக்கிவிட்டன. வறுமையும் வேலையின்மையும் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்தன. ஜனதா அரசாங்கம் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளை எதிர்கொண்டு தீர்ப்பதற்குப் பதிலாக "சுருள் திட்டம்" என்ற பிரச்சாரப் பயனுடைய "வாசனைத் திரவத் திட்டத்தை " (Cosmetic Plan) விளம்பரப்படுத்துவதில் நேரவிரயம் செய்தது. ஜனதா அரசாங்கம் தயாரித்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தை (1978 - 1983) சுருள் திட்டங்களாக்கி நிறைவேற்றுவதற்குள் சுருண்டுவிட்டது. ஜனதா கட்சி ஆட்சியை இழந்தது.

# UNIT-IV

# ராஜீவ் காந்தியின் ஆட்சி 1984 1989

## வாழ்க்கைக் குறிப்பு

ராஜீவ் காந்தி 1944 ஆகஸ்டு மாதம் 20 ஆம் தேதி இந்திரா காந்திக்கும் பெராஸ் காந்திக்கும் அலகாபாத் ஆனந்த் பவனில் முதல் மகனாகப் பிறந்தார். அக்குழந்தைக்குப் பாட்டி கமலா மற்றும் தாத்தா ஜவஹரை நினைவுபடுத்தும் வகையில் ராஜீவ் ரத்னா என்று பெயர் சூட்டப்பட்டது. ராஜீவ் தனது 12 வது வயதில் டேராடூனில் உள்ள 'டுன் பள்ளி' (Doon School)யில் சேர்க்கப்பட்டார் (1955). டூன் பள்ளியில் படிப்பை முடித்த ராஜீவ் இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் டிரினிட்டி கல்லூரியில் மோட்டார் தொழிற்கல்வி (Automobile Engineering) பயின்றார். அங்கு மாணவராக இருந்தபோதுதான் ராஜீவ் இத்தாலிய மாணவி சோனியா (Sonia)வைக் காதலித்தார்.

ராஜீவ் காந்தி இந்தியா திரும்பியவுடன் விமானம் ஓட்டுவதற்குப் பயிற்சி பெற்று இந்தியன் ஏர்லைன்சில் விமான ஒட்டியாக வேலையில் சேர்ந்தார். 1968 பிப்ரவரி 25-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை பெற்றோரின் சம்மதத்தோடு சோனியாவைத் திருமணம் செய்து கொண்டார். சலனமற்றத் தெளிந்த நீரோடையாகச் சென்று கொண்டிருந்த ராஜீவ் சோனியா வாழ்க்கையில் திடீர்த் திருப்பம் ஏற்பட்டது. 1980 ஜுன் 23 ஆம் தேதி ராஜீவின் இளைய சகோதரர் சஞ்சய் காந்தி விமான விபத்தில் இறந்தார். "ஒரு நேரு-காந்தி" தன் அருகில் இருக்க வேண்டியதன் தேவையை உணர்ந்த இந்திரா காந்தியின் விருப்பத்துக்கேற்ப ராஜீவ் தனது விமானி வேலையை ராஜினாமா செய்தார். சூழ்நிலைக் கட்டாயத்தால் ராஜீவ் காந்தி அமேதி தொகுதியில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்றார் (1981 ஜூன்) ராஜீவ் காந்தி 1981 இல் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராகி 1983 இல் காங்கிரஸ் பொதுச் செயலாளர்களில் ஒருவராகப் பதவி உயர்வு பெற்றார். 1983 டிசம்பர் மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் ராஜீவ் காந்தி நாட்டின் வருங்காலத் தலைவராக அறிமுகப்படுத்தப்பட்டார். 1984 அக்டோபர் 31 ஆம் தேதி இந்திரா காந்தி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதால் குடியரசுத் தலைவர் மரபை மீறி ராஜீவ் காந்தியைப் பிரதமராக நியமித்தார்) இந்திரா காந்தி இறந்த அன்று மாலையே ராஜீவ்காந்தி பிரதமராக்கப்பட்டார் என்று விரிவாகக் கூறியுள்ளார் பி.சி. அலெக்சாண்டர்.

## சாதனைகள்

### சீக்கியர் எதிர்ப்புக் கலவரங்கள் (Anti-Sikha Riots)

1981- 84ல் வட இந்தியாவில் மதவாதம் கொதி நிலையில் இருந்த போது பிரதமர் வாகாந்தி இரண்டு சீக்கியப் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் (1984. அக்டோபர் 31). இக்கொடூரக் கொலை மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. தலைநகர் வியில் சீக்கியர்களுக்கு எதிரான கலவரங்கள் காட்டுத் தீ போல் பரவியது. சீக்கியர் கடும்பங்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டன; கடைகளும், கிடங்குகளும் சூறையாடப்பட்டன; தீக்கிரையாக்கப்பட்டன; வாகனங்கள் கொளுத்தப்பட்டன. சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். நான்கு நாட்கள் நீடித்த இக்கலவரங்களில் 3,000க்கும் மேற்பட்ட சீக்கியர்கள் உயிரிழந்தனர்; 25,000க்கும் மேற்பட்ட சீக்கியர்கள் வீ டிழந்து அகதிகளாயினர்! இந்த இனக்

கலவரம் திட்டமிட்ட செயலா? அல்லது தற்செயல் நிகழ்வா? இக்கலவரத்தில் காங்கிரசாரின் பங்கு என்ன? சமூக விரோத சக்திகளின் பங்கு என்ன?

இந்திரா காந்தியின் உடல் எரிந்து கொண்டிருந்த போது டெல்லியில் சீக்கியர் வாழ் பகுதிகள் எரிந்து சாம்பலாயின. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது. புதிதாகப் பிரதமர் பொறுப்பேற்ற ராஜீவ் காந்தி இராணுவத்தின் துணை கொண்டு இனக் கலவரத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். இரண்டு சீக்கியப் பாதுகாவலர்கள் இந்திரா காந்தியை கொன்றதற்காக அவர்கள் சார்ந்த சமுதாயமே தண்டிக்கப்பட்டது! இக்கலவரங்களை இந்திரா காங்கிரஸ்காரர்களே தூண்டிவிட்டுப் பங்கேற்றிருக்க வேண்டும் என்ற குற்றச்சாட்டு எழுந்ததால் விசாரணைக் கமிஷன்கள் நியமிக்கப்பட்டன. தாயைப் பறிகொடுத்த சோகத்தில் இருந்த பிரதமர் வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டார்: "இந்திரா காந்தி இறந்து விட்டார்; இந்தியா வாழ்ந்து கொண்டிருக்கிறது".

**நம்பிக்கை நட்சத்திரம்**

ராஜீவ் காந்தி நாட்டின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தார் அவர் இந்தியாவின் 'எதிர்பார்ப்பு சகாப்த' (Era of Expectation) த்தைத்தோற்றுவித்தார். இந்தியா தடைகளைத்தாண்டி 21 ஆம் நூற்றாண்டுக்குள் பெருமையுடன் நுழைய வேண்டும் என்ற எண்ணத்தை விதைத்தார். உயரத்தாண்டி அடுத்த நூற்றாண்டுக்குள் குதிக்க வேண்டும் என்றார். மக்களின் உள்ளங்களில் நம்பிக்கை அலைகள் அடுக்கடுக்காக எழுந்தன. புதிய ஆட்சி புதிய புரட்சிப் பாதையைப் போட்டுக் கொடுக்கும் என்ற எதிர்பார்ப்பு அனைத்துத் தரப்பாரிடையேயும் எழுந்தது. நேரு 'சோஷலிச சமுதாயம்' அமைப்பதற்காகப் பாடுபட்டார். இந்திரா காந்தி வறுமையை ஒழிப்போம் என்று சூளுரைத்தார். ராஜீவ் காந்தி தொழிநுட்ப ஜனநாயக' த்தை ஏற்படுத்த உறுதி பூண்டார்.

பிரதமர் ராஜீவ் காந்தி கொள்கைப் பிரகடனம்' எதையும் செய்யவில்லை. எனினும் அவரது பேச்சுக்களிலிருந்தும், பேட்டிகளிலிருந்தும் பின்வரும் கொள்கைக் கூறுகளை அடையாளம் காட்டலாம்; 1) அரசியல் மரபுகளாகப் பெற்ற பஞ்சாப், அஸ்ஸாம், மிஸோரம் பிரச்னைகளைத் தீர்த்தல்; 2) கட்சித் தாவல் ஊழலுக்குத் தீர்வு காணல்; 3) கருப்புப் பண ஊழலை ஒழித்து தூய்மையான, நேர்மையான, திறமையான நிர்வாகத்தைக் கொடுத்தல்; 4) மத்தியிலும்

மாநிலங்களிலும் சாதனைகளைச் செய்யக்கூடிய அரசாங்கங்கள் அமைவதற்கான முயற்சியை மேற்கொள்ளல்; 5) புதிய கல்விக் கொள்கையின் மூலம் இளைய சமுதாயத்தினரின் ஆளுமையையும் நடத்தை நிலையையும் உயர்த்தல்; 6)தொழில் நுட்ப உத்திகளைக் கையாண்டு, அதிகாரப் பரவல் முறையை ஊக்குவித்து, நாட்டைச் தன்னிறைவுடைய தேசமாக்குதல்.

## புதிய பொருளாதாரக் கொள்கை

ராஜீவ் காந்தி இந்தியப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப் படுத்துவதில் முனைப்பாக இருந்தார். இந்தியா விடுதலை அடைந்தததிலிருந்து நேருவின் நன்கொடையான கூட்டுப் பொருளாதார' த்தை வேத வாக்காகப் பின்பற்றி வந்தது. இந்திரா காந்தியின் இடதுசாரி தேசியமயக் கொள்கை 'பொதுத்துறை' யை சலுகைத் துறையாக்கி விட்டது. நேருவும் இந்திரா காந்தியும் அரசாங்கக் கட்டுப்பாடுகளை நெம்புகோல்களாகக் கொண்டு தனியார் துறையைக் கட்டுப்படுத்திப் பொதுத்துறையைப் பேணிக் காத்து வந்தனர். ஆனால் பிரதமர் ராஜீவ் காந்தி, நேரு - இந்திரா சோஷலிசப் பொருளாதார அணுகுமுறையில் அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவரத் தீர்மானித்தார். அதற்குக் காரணம் அரசாங்கத்தால் நடத்தப்படும் பொருளாதார நிறுவனங்கள் திறமையற்றதாகத்தான் இருக்கும் என்பது ராஜீவ் காந்தியின் துணிவு. அதிக மூலதனம், அதிகத் தொழிலாளர்கள், குறைவான உற்பத்தித் திறன் என்பதே பொதுத்துறையின் சிறப்பியல்புகளாக இருந்தன. பொதுத் துறையும் திறமையின்மையும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள். போட்டி (Competition) தான் திறமையான பொருள் அல்லது சேவை உற்பத்தியின் அடிப்படைத் தத்துவம். எனவே, பொதுத்துறைப் பொருளாதாரத்துக்கு பதில் போட்டிச் சந்தைப் பொருளாதாரமே (Market Economy) ராஜீவ் காந்தியின் புதிய பொருளாதாரக் கொள்கையின் குவிமையமாக இருந்தது.

தாராளமயமாக்கல் (Liberaliszation), உலக மயமாக்கல் (Globalisation), நவீனமயமாக்கல் (Modernisation), நகர்மயமாக்கல் (Urbanisation) ஆகியவை ராஜீவ் காந்தியின் புதிய பொருளாதாரக் கொள்கையின் பரிமாணங்களாகும். 1) சுதந்திர தொழில் முனைவின் மூலம் திறந்த வெளிப் பொருளாதாரம்; 2) நவீன மேலாண்மை முறை; 3) புத்துணர்ச்சி யூட்டப்பட்ட ஆட்சி; 4)ஊழலற்ற திறமையான நிர்வாகம் ஆகியவை ராஜீவின் புதிய மாற்றம் (Rajiv's Perestroika) ஆகும்.

ராஜீவ் காந்தி பிரதமர் பொறுப்பேற்றவுடன் அரசாங்கத் துறைகளைத் தூய்மைப்படுத்தும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டார். அவரது புதிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான வி.பி.சிங்கை நிதி அமைச்சராக நியமித்தார். வி.பி.சிங்கும் ராஜீவ் காந்தியைப் போன்றே பொருளாதாரப் புரட்சி செய்வதில் பேரார்வம் கொண்டிருந்தார். எனவே, வி.பி.சிங் நிதி அமைச்சரானவுடன் இந்தியப் பொருளாதாரத்தைச் சலவை செய்யத் தீர்மானித்தார். கருப்புப் பணக்காரர்கள், கள்ளக்கடத்தல்காரர்கள், அன்னியச் செலாவணி மோசடிக்காரர்கள், வரிஏய்ப்பாளர்கள், சட்டப்புறம்பாக இரகசிய வங்கிக் கணக்குகள் வைத்திருப்போர், முறையான உரிமம் பெறாமல் இறக்குமதி செய்வோர், கொள்ளை இலாபம் பெறும் வர்த்தகர்கள் ஆகியோர் மீது போர் தொடுத்தார்.

வி.பி.சிங் பொருளாதாரச் சீர்திருத்தத்தைத் தீவிரமாக மேற்கொண்டார். சந்தேகிக்கப்பட்ட வர்த்தகப் பேரரசுகளின் தலைவர்கள் வீ டுகளும் சோதனை செய்யப்பட்டன. சிலர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். பொருளாதாரக் குற்றவாளிகளைத் தண்டிப்பதன் மூலம் வர்த்தக தொழில்-வியாபார சமூகத்தைத் திருத்துவதற்காக வி.பி.சிங் மேற்கொண்ட முயற்சிகள் தொழிலதிபர்களுக்கு அதிர்ச்சியைத் தந்தன; மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். வி.பி.சிங்கின் அதிரடி நடவடிக்கைகள் தடையின்றி மேற்கொள்ளப்பட்டால் இந்தியப் பொருளாதாரம் புதுபலத்துடன் முன்னேறும் என்ற நம்பிக்கை மக்களிடையே எழுந்தது. வி.பி.சிங், ராஜீவ் காந்திக்கு அடுத்தபடியாக தேசத் தலைவர் அந்தஸ்தைப் பெற்றார். 'பொருளாதார சவோ நாரோலா' (Girloamo Savonarola) என்ற பெயரைப் பெற்றார். இத்தாலிய இளவரசரான சவோநாரோலா (1452-1498) புளோரன்ஸ் நகரம் பாபத்தில் திளைப்பதை விட அந்நகரத்தை எரித்துவிடுவதே மேல் என்று கருதியவர்.

### புதிய கல்விக் கொள்கை (New Education Policy)

1985 ஆகஸ்டு 15 ஆம் தேதி இந்திய விடுதலை நாளன்று பிரதமர் ராஜீவ் காந்தி செங்கோட்டையில் தேசியக் கொடியேற்றி உரையாற்றுகையில் புதிய கல்விக் கொள்கையை அறிவித்தார். ஒரு மாதத்துக்குள் அக்கொள்கையை நாட்டுக்கு அளிப்பதாக அறிவித்தார். அவ்வாறே கல்வி அமைச்சர் கே.சி. பந்த் புதிய கல்விக்

கொள்கை பற்றிய அரசாங்க ஆவணத்தை மக்களவையில் சமர்ப்பித்தார். ராஜீவ் காந்தி அரசாங்கத்தின் புதிய கல்விக் கொள்கை நான்கு பகுதிகளைக் கொண்டது. 1) கல்வி, சமுதாயம், வளர்ச்சி; 2) இந்தியக் கல்வி வளர்ச்சி பற்றிய கண்ணோட்டம்; 3) கல்வி முறை பற்றிய மதிப்பீடு; 4) கல்விச் சீரமைப்புக்கான அணுகுமுறை.

1968-ல் உருவாக்கப்பட்ட தேசிய கல்விக் கொள்கை நடைமுறைச் சிக்கல்களால் சரியாகச் செயல்படவில்லை. துவக்கக் கல்வி நிலையிலிருந்து முதுநிலை மற்றும் ஆராய்ச்சி நிலை வரை இந்திய கல்வி முறை குழப்பத்தில் இருந்தது. எனவே ராஜீவ் காந்தி அரசாங்கம் இந்தியக் கல்வி விதிமுறைளைச் சீரமைக்கும் நோக்கத்தோடு புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. வளர்ச்சி (Development), ஒருமைப்பாடு (Integration), நடுநோக்கு (Equity), தரம் (Quality), பொருத்தம் (Relevance), முதன்மை நிலை (Excellence) ஆகியவை புதிய கல்விக் கொள்கையின் சிறப்பு அம்சங்களாகும்.

## புதிய கல்விக் கொள்கையின் நோக்கங்களாவன:

1) அனைவருக்கும் ஆரம்பக்கல்வி (Universalisation of Primary Education). 1995 ஆண்டுக்குள் 100 விழுக்காடு எழுத்து அறிவை (Literacy) எட்டுதல்; 2) மேல்நிலைக்கல்வி நிலையில் தொழிற் கல்விக்கு (Vocationalisation at Higher Secondary level) முக்கியத்துவம் கொடுத்தல்; 3) உயர் மற்றும் தொழில் நுட்பக் கல்வியை நவீ னமயமாக்கல் (Modernisa tion of Higer and Technical Education); 4)இந்திரா காந்தி பெயரால் ஒரு திறந்த வெளிப் பல்கலைக் கழகம் (Indira Gandhi Open University) எற்படுத்தல்; 5) நடுநோக்கு சமத்துவ நோக்கத்தை நிறைவேற்ற ஒவ்வொரு மாவட்டத்திலும் மத்திய மாதிரி நவோதயா பள்ளிகளை (Navodaya Schools)த் துவக்கல்; 6) ஜம்மு-காஷ்மீர் கல்வி முறை அனுபவத்தை வழிகாட்டியாகக் கொண்டு மாவட்ட கல்வி மையங்களை (District Educa tion Centres) ஏற்படுத்தல்; 7) உயர் கல்விக்கு அளிக்கப்படும் மானியத்தைக் குறைத்தல்; ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தல்; தொழிற் கல்விக்கான வசதிகளை விரிவுபடுத்தல்; உயர்நிலைக் கல்வி நிறுவனங்களைப் பொருத்தமானவையாகச் செயல்படச் செய்தல்.

புதிய கல்விக் கொள்கை நாடு முழுவதும் விவாதிக்கப்பட்டது. கல்வியாளர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகளின் கருத்தரங்கங்களும், பட்டறைகளும், மாநாடுகளும்

நடத்தப்பட்டன. 1986 ஆம் ஆண்டு நாடாளுமன்றம் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டது. அதன் அடிப்படையில் செயல் திட்டம் (Programme of Action) தயாரிக்கப்பட்டது. 23 செயல்குழுக்கள் (Task Forces) நியமிக்கப் பட்டன. புதிய கல்விக் கொள்கை திறமையாகச் செயல்படுவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. துவக்கப் பள்ளிகளைச் சீரமைக்கக் கரும்பலகை நடவடிக்கை' (Operation Black Board) மேற்கொள்ளப்பட்டது. மாவட்டங்களில் தரமான நவோதயப் பள்ளிகள் துவக்கப்பட்டன. மேல்நிலைக் கல்வி நிலையில் தொழிற் படிப்புகள் (Vocational courses) அறிமுகப்படுத்தப்பட்டன. கல்லூரி - பல்கலைக்கழக- தொழிற்கல்வி நிறுவனங்கள் நவீ னமயமாக்கப்பட்டன கல்லூரி ஆசிரியர் பயிற்சி மையங்கள் (Academic staff colleges) நாடெங்கிலும் துவக்கப்பட்டன. சுயாட்சிக் கல்லூரிகள் (Autonomous colleges) துவங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. உயர் மற்றும் தொழிற் கல்வியின் தரக்கட்டுப்பாடு (Accreditation) செய்ய வேண்டியதன் இன்றியாமை வலியுறுத்தப்பட்டது. இக்கல்விப் புரட்சி ராஜீவ் காந்தி அரசாங்கத்தின் தனிப்பெரும் சாதனையாகும். இது சமகால இந்தியக் கல்வி வரலாற்றில் முக்கிய மைல்கள் ஆகும்.

## ராஜீவ் காந்தியின் ஆட்சி (1984-1989)

### வாழ்க்கைக் குறிப்பு

ராஜீவ் காந்தி 1944 ஆகஸ்டு மாதம் 20 ஆம் தேதி இந்திரா காந்திக்கும் பெராஸ் காந்திக்கும் அலகாபாத் ஆனந்த் பவனில் முதல் மகனாகப் பிறந்தார். அக்குழந்தைக்குப் பாட்டி கமலா மற்றும் தாத்தா ஜவஹரை நினைவுபடுத்தும் வகையில் ராஜீவ் ரத்னா என்று பெயர் சூட்டப்பட்டது. ராஜீவ் தனது 12 வது வயதில் டேராடூனில் உள்ள டுன் பள்ளி' (Doon School)யில் சேர்க்கப்பட்டார் (1955). டூன் பள்ளியில் படிப்பை முடித்த ராஜீவ் இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் டிரினிட்டி கல்லூரியில் மோட்டார் தொழிற்கல்வி (Automobile Engineering) பயின்றார். அங்கு மாணவராக இருந்தபோதுதான் ராஜீவ் இத்தாலிய மாணவி சோனியா (Sonia)வைக் காதலித்தார்.

ராஜீவ் காந்தி இந்தியா திரும்பியவுடன் விமானம் ஓட்டுவதற்குப் பயிற்சி பெற்று இந்தியன் ஏர்லைன்சில் விமான ஓட்டியாக

வேலையில் சேர்ந்தார். 1968 பிப்ரவரி 25-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை பெற்றோரின் சம்மதத்தோடு சோனியாவைத் திருமணம் செய்து கொண்டார். சலனமற்றத் தெளிந்த நீரோடையாகச் சென்று கொண்டிருந்த ராஜீவ்சோனியா வாழ்க்கையில் திடீர்த் திருப்பம் ஏற்பட்டது. 1980 ஜூன் 23 ஆம் தேதி ராஜீவின் இளைய சகோதரர் சஞ்சய் காந்தி விமான விபத்தில் இறந்தார். "ஒரு நேரு-காந்தி" தன் அருகில் இருக்க வேண்டியதன் தேவையை உணர்ந்த இந்திரா காந்தியின் விருப்பத்துக்கேற்ப ராஜீவ் தனது விமானி வேலையை ராஜினாமா செய்தார். சூழ்நிலைக் கட்டாயத்தால் ராஜீவ் காந்தி அமேதி தொகுதியில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்றார் (1981 ஜூன்) ராஜீவ் காந்தி 1981 இல் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராகி 1983 இல் காங்கிரஸ் பொதுச் செயலாளர்களில் ஒருவராகப் பதவி உயர்வு பெற்றார். 1983 டிசம்பர் மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் ராஜீவ் காந்தி நாட்டின் வருங்காலத் தலைவராக அறிமுகப்படுத்தப்பட்டார். 1984 அக்டோபர் 31ஆம் தேதி இந்திரா காந்தி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதால் குடியரசுத் தலைவர் மரபை மீறி ராஜீவ் காந்தியைப் பிரதமராக நியமித்தார்,

**சாதனைகள்**

**சீக்கியர் எதிர் எதிர்ப்புக் கலவரங்க ள் (Anti sikha Riotsy)**

1981-84ல் வட இந்தியாவில் வத்திரா காந்தி இரண்டு சீக்கியர் கடாபர் 31). இந்தியாவில் மதவாதம் கொதி நிலையில் இருந்த போது பிரதமர் க்கியப் பாதுகாவலர்களால் கட்டுக் கொல்லப்பட்டார் (1984, கார் கொலை மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. தலைநகர் ரொன கலவரங்கள் காட்டுத் தீ போல் பரவியது. சீக்கியர் தெனமாகத் தாக்கப்பட்டன; கடைகளும், கிடங்குகளும் யாக்கப்பட்டன; வாகனங்கள் கொளுத்தப்பட்டன. தலை செய்யப்பட்டனர். நான்கு நாட்கள் நீடித்த இக்கலவரங்களில் சீக்கியர்கள் உயிரிழந்தனர்; 25,000க்கும் மேற்பட்ட சீக்கியர்கள் வயினர் இந்த இனக் கலவரம் திட்டமிட்ட செயலா? அல்லது தற்செயல் வக்கலவரத்தில் காங்கிரசாரின் பங்கு என்ன? சமூக விரோத சக்திகளின் உல்லியில் சிக்க இம்பங்கள் மிருகத்தனமாகக் குறையாடப்பட்டன: சக்கியர்கள் படுகொலை செய்ய 3.000க்கும்

மேற்பட்ட சீக்கி வீ டிழந்து அகதிகளாயினர் நிகழ்வா? இக்கல்லா பங்கு என்ன?

வாழ் பகுதிகள் எரிந்து சாம்பலா பொறுப்பேற்ற ராஜிவ் காந்தி முடிவுக்குக் கொண்டுவ கா காந்தியின் உடல் எரிந்து கொண்டிருந்த போது டெல்லியில் சீக்கியர் எரிந்து சாம்பலாயின. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது. புதிதாகப் பிரதமர் ராஜிவ் காந்தி இராணுவத்தின் துணை கொண்டு இனக் கலவரத்தை * கொண்டு வந்தார். இரண்டு சீக்கியப் பாதுகாவலர்கள் இந்திரா காந்தியை க்காக அவர்கள் சார்ந்த சமுதாயமே தண்டிக்கப்பட்டது! இக்கலவரங்களை காங்கிரஸ்காரர்களே தூண்டிவிட்டுப் பங்கேற்றிருக்க வேண்டும் என்ற சச்சாட்டு எழுந்ததால் விசாரணைக் கமிஷன்கள் நியமிக்கப்பட்டன. தாயைப் கொடுத்த சோகத்தில் இருந்த பிரதமர் வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டார்: “இந்திரா காந்தி இறந்து விட்டார்; இந்தியா வாழ்ந்து கொண்டிருக்கிறது”.

## நம்பிக்கை நட்சத்திரம்

ராஜீவ் காந்தி நாட்டின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தார் அவர் இந்தியாவின் 'எதிர்பார்ப்பு சகாப்த' (Era of Expectation) த்தைத்தோற்றுவித்தார். இந்தியா தடைகளைத்தாண்டி 21 ஆம் நூற்றாண்டுக்குள் பெருமையுடன் நுழைய வேண்டும் என்ற எண்ணத்தை விதைத்தார். உயரத்தாண்டி அடுத்த நூற்றாண்டுக்குள் குதிக்க வேண்டும் என்றார். மக்களின் உள்ளங்களில் நம்பிக்கை அலைகள் அடுக்கடுக்காக எழுந்தன. புதிய ஆட்சி புதிய புரட்சிப் பாதையைப் போட்டுக் கொடுக்கும் என்ற எதிர்பார்ப்பு அனைத்துத் தரப்பாரிடையேயும் எழுந்தது. நேரு 'சோஷலிச சமுதாயம்' அமைப்பதற்காகப் பாடுபட்டார். இந்திரா காந்தி வறுமையை ஒழிப்போம் என்று சூளுரைத்தார். ராஜீவ் காந்தி தொழிநுட்ப ஜனநாயக த்தை ஏற்படுத்த உறுதி பூண்டார்.

பிரதமர் ராஜீவ் காந்தி கொள்கைப் பிரகடனம்' எதையும் செய்யவில்லை . எனினும் அவரது பேச்சுக்களிலிருந்தும், பேட்டிகளிலிருந்தும் பின்வரும் கொள்கைக் கூறுகளை கடயாளம் காட்டலாம்; 1) அரசியல் மரபுகளாகப் பெற்ற பஞ்சாப், அஸ்ஸாம்,

மிஸோரம் பிரச்னைகளைத் தீர்த்தல்; 2) கட்சித் தாவல் ஊழலுக்குத் தீர்வு காணல்; 3) கருப்புப் பண ஒலை ஒழத்து தூய்மையான, நேர்மையான, திறமையான நிர்வாகத்தைக் கொடுத்தல்; தயலும் மாநிலங்களிலும் சாதனைகளைச் செய்யக்கூடிய அரசாங்கங்கள்

## புதிய பொருளாதாரக் கொள்கை

ராஜீவ் காந்தி இந்தியப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப் முனைப்பாக இருந்தார். இந்தியா விடுதலை அடைந்தததிலிருந்து நன்கொடையான 'கூட்டுப் பொருளாதார த்தை வேத வாக்காகப் பின்பற்றி இந்திரா காந்தியின் இடதுசாரி தேசியமயக் கொள்கை 'பொதுத்துறை துறையாக்கி விட்டது. நேருவும் இந்திரா காந்தியும் அரசாங்கக் கட்டுப்பாடு நெம்புகோல்களாகக் கொண்டு தனியார் துறையைக் கட்டுப்படுத்திப் பொதுத்துறை பேணிக் காத்து வந்தனர். ஆனால் பிரதமர் ராஜிவ் காந்தி, நேரு - இந்திரா சோவியம் பொருளாதார அணுகுமுறையில் அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவரத் தீர்மானிக்கார் அதற்குக் காரணம் அரசாங்கத்தால் நடத்தப்படும் பொருளாதார நிறுவனங்கள் திறமையற்றதாகத்தான் இருக்கும் என்பது ராஜீவ் காந்தியின் துணிவு, அதிக மூலதனம் அதிகத் தொழிலாளர்கள், குறைவான உற்பத்தித் திறன் என்பதே பொதுத்துறையின் சிறப்பியல்புகளாக இருந்தன. பொதுத் துறையும் திறமையின்மையும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள். போட்டி (Competition) தான் திறமையான பொருள் அல்லது சேவை உற்பத்தியின் அடிப்படைத் தத்துவம். எனவே, பொதுத்துறைப் பொருளாதாரத்துக்கு பதில் போட்டிச் சந்தைப் பொருளாதாரமே (Market Economy) ராஜீவ் காந்தியின் புதிய பொருளாதாரக் கொள்கையின் குவிமையமாக இருந்தது.

தாராளமயமாக்கல் (Liberaliszation), உலக மயமாக்கல் (Globalisation), நவீ னமயமாக்கல் (Modernisation), நகர்மயமாக்கல் (Urbanisation) ஆகியவை ராஜிவ் காந்தியின் புதிய பொருளாதாரக் கொள்கையின் பரிமாணங்களாகும். 1) சுதந்திர தொழில் முனைவின் மூலம் திறந்த வெளிப் பொருளாதாரம்; 2) நவீ ன மேலாண்மை முறை 3) புத்துணர்ச்சி

யூட்டப்பட்ட ஆட்சி; 4)ஊழலற்ற திறமையான நிர்வாகம் ஆகியவை ராஜீவின் புதிய மாற்றம் (Rajiv's Perestroika) ஆகும்.

ராஜீவ் காந்தி பிரதமர் பொறுப்பேற்றவுடன் அரசாங்கத் துறைகளைத் தூய்மைப்படுத்தும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டார். அவரது புதிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான வி.பி.சிங்கை நிதி அமைச்சராக நியமித்தார். வி.பி.சிங்கும் ராஜீவ் காந்தியைப் போன்றே பொருளாதாரப் புரட்சி செய்வதில் பேரார்வம் கொண்டிருந்தார். எனவே, வி.பி.சிங் நிதி அமைச்சரானவுடன் இந்தியப் பொருளாதாரத்தைச் சலவை செய்யத் தீர்மானித்தார். கருப்புப் பணக்காரர்கள், கள்ளக்கடத்தல்காரர்கள், அன்னியச் செலாவணி மோசடிக்காரர்கள், வரிஏய்ப்பாளர்கள், சட்டப்புறம்பாக இரகசிய வங்கிக் கணக்குகள் வைத்திருப்போர், முறையான உரிமம் பெறாமல் இறக்குமதி செய்வோர், கொள்ளை இலாபம் பெறும் வர்த்தகர்கள் ஆகியோர் மீது போர் தொடுத்தார். வி.பி.சிங்கின் அதிரடி நடவடிக்கைகள் தடையின்றி மேற்கொள்ளப்பட்டால் இந்தியப் பொருளாதாரம் புதுபலத்துடன் முன்னேறும் என்ற நம்பிக்கை மக்களிடையே எழுந்தது. வி.பி.சிங், ராஜீவ் காந்திக்கு அடுத்தபடியாக தேசத் தலைவர் அந்தஸ்தைப் பெற்றார். பொருளாதார சவோ நாரோலா' (Girloamo Savonarola) என்ற பெயரைப் பெற்றார். இத்தாலிய இளவரசரான சவோநாரோலா (1452-1498) புளோரன்ஸ் நகரம் பாபத்தில் திளைப்பதை விட அந்நகரத்தை எரித்துவிடுவதே மேல் என்று கருதியவர்.

**நாடாளுமன்றத் தேர்தல், 1984**

ராஜீவ் காந்தி காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர்களில் ஒருவரும், மக்களை உறுப்பினராகவும் இருந்தபோது தனது தனித்தன்மையை நிலைநாட்டிக் கொள்வதில் குறியாக இருந்தார். சஞ்சய் காந்தி செய்த தவறுகளை மனதில் கொண்டு அரசியலில் நேர்மையையும், அரசாங்கத்தில் திறமையையும், நிர்வாகத்தில் கட்டுப்பாட்டையும் கொண்டு வர வேண்டும் என்று விரும்பினார். திருவாளர் பரிசுத்தம் (Mr.Clean) என்று மக்களால் பாராட்டப் பட்டார். ஒத்த மனதுடைய அறிவும் ஆற்றலுமிக்க இளைஞர்களைத் துணை

சேர்த்துக் கொண்டார். டூன் பள்ளியிலும், டிரினிட்டி கல்லூரியிலும் அறிமுகமான நண்பர்கள் பலர் ராஜீவுக்குக் கைகொடுத்தனர். குறிப்பாக ராஜீவ் தார், அருண்சிங், அருண்நேரு போன்றோர் ராஜீவ் காந்தியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானார்கள். ராஜீவ் காந்தியின் தொலைநோக்கும் தூயமுயற்சியும் (vision and Mission) மக்களின் பேராதரவைப் பெற்றுத்தந்தன.

இந்திரா காந்தி பதவியிலிருந்தபோது கொலை செய்யப்பட்டதால் ராஜீவ் காந்தி பிரதமராக நியமிக்கப்பட்டார். மக்களின் ஆதரவோடும் ஒப்புதலோடும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராக வேண்டும் என்று தீர்மானித்தார். ராஜீவ் காந்தி தனது பிரதமர் பதவியை சட்டப்படி முறைப்படுத்த (legitimacy) முடிவு செய்தார். அதன் விளைவாக 1984 டிசம்பர் மாதம் மக்களவைத் தேர்தல் நடத்தப்பட்டது. அத்தேர்தலுக்காக ராஜீவ் காந்தி இந்திரா காந்தியைப் போன்றே 'சூறாவளிச் சுற்றுப் பயணம்' மேற்கொண்டார். தேர்தல் பிரச்சாரத்துக்குத் திரைப்பட நட்சத்திரங்களைத் திறமையாகப் பயன்படுத்தினார். குறிப்பாக வட இந்திய திரைப்பட உலகின் 'சூப்பர் ஸ்டாராக'த் திகழ்ந்த அமிதாப்பச்சன் தன்டூன் பள்ளித் தோழனுக்காக அரசியல் பிரவேசம் செய்தார். அலகாபாத் தொகுதியில் போட்டியிட்டார். சுனில் தத் பம்பாயில் போட்டியிட்டார்.

1984 தேர்தலில் இந்திரா காங்கிரஸ் மக்களவையின் 508 இடங்களில் 401 இடங்களில் வெற்றி பெற்றது. அதாவது மக்களவையில் ஐந்தில் நான்கு இடங்கள் காங்கிரசுக்குக் கிடைத்தன. இது நேருவும், இந்திராவும் பெற்ற அதிகபட்ச இடங்களை விட அதிகம். இத்தேர்தலின் மூலம் நேரு-காந்தி வாரிசு பாத்யதைக்கு மக்களின் அங்கீகாரம் கிடைத்தது. மக்களாட்சியில் தேர்தல் மூலம் குடும்ப வாரிசு பாத்யதையை நிலைநாட்டிக் கொள்ள முடியும் என்பதற்கு 1984 தேர்தல் சிறந்த எடுத்துக்காட்டாகும். இடைக்கால மன்னர் குடும்ப வாரிசு மரபு தற்காலத் தேவைக்கேற்ப அரசியல் உருமாற்றம் அடைந்தது.

### போபால் பேரழிவு

ராஜீவ் காந்தி தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த போது மத்தியப் போப்பாலில் யூனியன் கார்பைடு (Union Carbid) என்ற

விஷவாயுப் பேரழிவு பற்றி கக்கு விரைந்து வந்தார். இறந்தோர் கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல். பச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் பன்னாட்டுத் தொழிற்சாலையின் கம் கசிந்து பரவிய நச்சு வாயுவால் (Methyl-isocyanate gas) 3,000 பேருக்கும் மேல் பல்லாயிரக்கணக்கானோர் உடல் ஊனமுற்றனர். போப்பால் விஷவாயப் போ அறிந்த பிரதமர் ராஜீவ் காந்தி விபத்து நடந்த இடத்துக்கு விரைந்து வந்தார். இற மற்றும் உடல் நிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கூறினார். உடனடியாக இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்று உக்க எனினும் ராஜீவ் காந்தி போப்பால் பேரழிவின் பரிமாணங்கள் வெளி , தெரியாமல் கடுக்து விட்டார்: கைகளைக் கழுவிக் கொண்டு தேர். பிரசாரத்துக்குக்காகப் பறந்து சென்று விட்டார் என்று குறிப்பிட்டுள்ளார் தாரிக் அலி விபத்து நடந்த நான்காண்டுகளுக்குப் பின் 1989 பிப்ரவரி மாதம் பாதிக்கப்பட்டவர் களுக்கான இழப்பீடு பற்றி யூனியன் கார்பைடு கார்ப்பேரஷனுக்கும் ராஜீவ் காந்தி அரசாங்கத்துக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது.

**காங்கிரஸ் நூற்றாண்டு விழாப் பேச்சு**

ராஜீவ் காந்தி விரைந்து செயல்பட்டார். விமான வேகத்தில் இந்தியாவைக் கொண்டு செல்ல விரும்பினார். இரண்டாண்டுகளில் எட்டு முறை அமைச்சரவையில் மாற்றம் செய்தார். இந்திரா காங்கிரஸ் பதவி விரும்பிகள், பேராசைக்காரர்கள், சுயநலவாதிகள், சூழ்ச்சிக் காரர்கள், ஊழல் பேர்வழிகள், அதிகார மோகிகள் ஆகியோரின் கூடாரமாக இருந்ததைக் கண்டு மனம் புழுங்கினார். காங்கிரஸ் கட்டுப்பாட்டுக் கோட்டையாக மாறவேண்டும் மாற்றப்பட வேண்டும் என்று விரும்பினார். ராஜீவ் காந்தி காங்கிரஸ் நூற்றாண்டு விழாவை (1885-1985) க் கோலாகலமாகக் கொண்டாடத் திட்டமிட்டார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தயாரித்து வெளியிட்ட நூற்றாண்டு நினைவு மலர் பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதற்குக் காரணம், மலரின் முகப்பட்டையில் மோத்திலால் நேரு, ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி மற்றும் பல காங்கிரஸ் தலைவர்களின் படங்கள் இருந்தன. ஆனால் மகாத்மா காந்தியின் படம் இடம் பெறவில்லை .

காங்கிரஸ் நூற்றாண்டு விழாவைத் துவக்கிவைத்துப் பேசிய ராஜீவ் காந்தி தனது கருத்துக்களை ஒளிவுமறைவின்றி வெளியிட்டார். அப்பேச்சு காங்கிரஸ்காரர்கள் சுயசோதனை செய்துகொள்வதற்குத் தூண்டுகோலாக இருந்தது. ராஜீவ் காந்தியின் பேச்சில் காணப்பட்ட முக்கிய கருத்துக்களாவன:

1 வேலியே பயிரை மேய்கிறது! அரசாங்க ஊழியர்கள் ஊழியம் செய்வதோடு பதிலாக ஏழைகளை ஏமாற்றுகின்றனர். சட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய போலீசார் குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பாக உள்ளனர். வரி வசூலிக்க வேண்டியவர்கள் வரி ஏய்ப்போருக்கு உதவி செய்கின்றனர். இவர்களிடம் நேர்மையோ, பொதுநல நாட்டமோ, தொலைநோக்கோ, தேசிய குறிக்கோள்களைப் பற்றிய பிரக்ஞையோ, நவீ ன இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற உணர்வோ இல்லை

2 இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் சென்று மக்களின் மனதைக் கொள்ளை கொண்ட காங்கிரஸ் உழைக்கும் மக்களோடு தொடர்பு கொள்ளத் தவறி விட்டது. தேர்தலில் வெற்றி பெறுவது முக்கியமல்ல. மக்களின் நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள், பிரச்னைகள் ஆகியவற்றோடு இடையறாத் தொடர்பு கொள்வதே முக்கியம்.

3. காங்கிரஸ் தலைவர்கள் சமுதாய மாற்றம் செய்வதை விட்டுவிட்டு ஆட்சியைப் பதவிகளைப் பகிர்ந்து கொள்வதிலும், அதிகாரத்தைப் பிரயோகிப்பதிலும் திசைமாறிப் போய்விட்டனர். அதன் மூலம் தங்களைத் தாங்களே பலவீ னப்படுத்திக் கொண்டு நாட்டையும் பலமிழக்கச் செய்துவிட்டனர்.

4. சாதாரண காங்கிரஸ் தொண்டர்கள் காங்கிரஸ் குறிக்கோள்களிலும், கொள்கைகளிலும், திட்டங்களிலும் ஆர்வம் கொண்டுள்ளனர். காங்கிரஸ் பாரம்பரியத்தில் பெருமை கொள்கின்றனர். ஆனால் அதிகாரத் தரகர்கள்' (power brokers) தொண்டர்களின் முதுகில் ஏறிக்கொண்டு சவாரி செய்கின்றனர். இவர்கள் தங்களது செல்வாக்காலும், சலுகைகளை வாரி வழங்குவதாலும் மக்கள் இயக்கத்தை நிலமானிய செல்வந்தர் ஆதிக்கமாக மாற்றி விட்டனர். சாதி, சமய கோஷங்களை எழுப்பித் தங்களைத் தாங்களே நிலை நிறுத்திக் கொள்ளும் சுயநலக் கும்பல்களாகிவிட்டனர். சேவையும்

தியாகமும் 'வெறும் ஓடாக'க் காட்சியளிக்கிறது. காங்கிரஸ் பேராசை வலைக்குள் சிக்கிக் கொண்டது.

5. உயர்ந்த நோக்கங்கள், உன்னதமான லட்சியங்கள் பற்றிப் பேசுகிறோம். ஆனால் நம்மிடையே கட்டுப்பாடோ, கொள்கைப் பிடிப்போ, பொதுநல அக்கறையோ சிறிதும் இல்லை. ஊழல் பொறுத்துக் கொள்ளப்படுவது மட்டுமல்ல; அது தலைமைக்கான தகுதியாவும் கருதப்படுகிறது.

காங்கிரஸ் கட்சியின் தலைவராயிருந்த ராஜீவ் காந்தி அரசாங்க ஊழியர்கள், காங்கிரஸ்காரர்கள் பற்றிப் பகிரங்கமாகப் பேசியது பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ராஜிவ் காந்தியின் பேச்சு குறைந்த காலத்தில் நிறைய சாதிக்கவேண்டும் என்ற ஆதங்கத்தையும், நூற்றாண்டு கால காங்கிரஸ் கலாச்சாரத்தை ஓராண்டில் மாற்றி விட வேண்டும் என்ற அவசரத்தையும் வெளிப்படுத்துவதாக இருந்தது. ஒரு இளந்தலைவரின் பொறுமையின்மை காங்கிரஸ் தலைவர்கள் அப்பேச்சில் ராஜீவ் காந்தியின் அரசியல் அனுபவமின்மை ' யைக் கண்டனர். ராஜீவ் காந்தியிடம் வேகம் இருந்த அளவுக்கு விவேகமில்லை என்ற எண்ணம் எழலாயிற்று.

**அஸ்ஸாம் உடன்பாடு (Assam Accord), 1985**

ராஜிவ் காந்தி பிரதமரான ஒன்றரை ஆண்டுகளுக்குள் எதிர் கொண்ட சவால்களில் குறிப்பிடத்தக்கவை அஸ்ஸாம் அகதிகள் பிரச்னையும், பஞ்சாப் பிரச்னையும் ஆகும். பிரதமர் இந்திரா காந்தியால் தீர்வுகாணாமல் விடப்பட்ட அஸ்ஸாம் அகதிகள் பிரச்னைக்கு ஒரு வழியைக் கண்டார் ராஜீவ் காந்தி, அஸ்ஸாம் மாணவர்கள் தலைவர்களுடன் ஒரு உடன்பாட்டுக் வந்தார் (1985, ஆக. 15). அந்த அஸ்ஸாம் உடன்பாட்டின்படி 1) 1961 க்கு முன் அஸ்ஸாமுக்கு வந்து குடியேறியோர் அஸ்ஸாமியராக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்; 2) 1961க்குப்பின் அஸ்ஸாமுக்கு வந்த, குறிப்பாக பங்ளாதேஷ் போருக்குப்பின் வந்த, அகதிகளின் குடியுரிமைப் பறித்து விடுதல் அல்லது பங்ளாதேசுக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும்; 3) இரண்டாவது எண்ணெய் சுத்திகரிப்பு சாலை, பேப்பர் மில், தொழில்நுட்பக் கல்லூரிகள் உள்ளிட்ட பொருளாதார வளர்ச்சித் திட்டம்;

**ராஜீவ் காந்தி - லோங்கோவால் உடன்பாடு, 1985 - (Rajiv Gandhi - Longowal Agreement)**

ராஜீவ் காந்தி பிரதமரானவுடன் எதிர் கொண்ட சவால்களில் ஒன்று பஞ்சாப் பிரச்னை ஆகும். பஞ்சாப் மொழிவழி மாநிலமாவதை நிராகரித்தார் நேரு (1956). அரியானாவைப் பஞ்சாபிலிருந்து பிரித்து, சண்டிகாரை யூனியன் பிரதேசமாக்கி பஞ்சாப் பிரச்னைக்கு ஒரு தீர்வைக் கண்டார் இந்திரா காந்தி (1966) அவர் சீக்கிய பயங்கரவாதத்துக்குப் பலியானார் (1984), பிரதமர் பொறுப்பேற்ற ராஜிவ் காந்தி பஞ்சாப் பிரச்னைக்கு 'இராணுவத் தீர்வு' க்குப் பதில் நல்லிணக்கத் தீர்வு காண விரும்பினார். அதன் விளைவாக 1985 ஜூலை 24 ஆம் தேதி பிரதமர் ராஜீவ் காந்தி அகாலி தளத் தலைவர் சந்த் லோங்கோவாலுடன் வரலாற்றுச் சிறப்பு மிக்க உடன்பாடு செய்து கொண்டார். மதிப்பீடு

ராஜீவ் காந்தி பிரதமரானவுடன் செய்த முதல் காரியம் சீக்கிய எதிர்ப்புக் கலவரம் பரவாமல் தடுத்ததாகும். அதையடுத்து அவர் அஸ்ஸாம் அகதிகள் பிரச்னைக்குத் தீர்வு கண்டார். அதன்பின் ராஜீவ் காந்தி அகாலிதளத் தலைவர் லோங்கோவாலுடன் செய்து கொண்ட உடன்பாடாகும். முப்பத்தி மூன்று மணி நேரம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியபின் அவ்வுடன்பாடு ஏற்பட்டது. அரசியல் நோக்கர்கள் அந்த உடன்பாட்டை லோங்கோவாலின் தனிப்பட்ட தீரச்செயல் என்று கருதினர். ராஜீவ் காந்தி சீக்கிய தீவிரவாதிகளின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார். அதேபோன்று லோங்கோவாலும் கோரிக்கைகளை விட்டுக் கொடுத்தார். அதற்காக இருவருமே விமர்சிக்கப்பட்டனர். லோங்கோவால் ராஜீவ் காந்தியுடன் செய்து கொண்ட உடன்பாட்டுக்கு அகாலி தளத்தின் ஒப்புதலைப் பெற்றார் (ஜூலை 26).

-ராஜீவ் காந்தி இராணுவத் தீர்வுக்கு பதில் லோங்கோவாலுடன் அமைதித் தீர்வு கண்டமைக்காகப் பொதுவாகப் பாராட்டப்பட்டார். எனினும் அரியானாவும் ராஜஸ்தானும் அந்த உடன்பாட்டில் ஆர்வம் காட்டவில்லை. விளைவுகள் என்று பார்க்கப்போனால் ராஜீவ் காந்தி

லோங்கோவால் உடன்பாடு எதையும் சாதிக்கவில்லை; எந்த பிரச்னையையும் தீர்க்கவில்லை! ராஜீவ் காந்தியும் லோங்கோவாலும் ஜனரஞ்சக வக்கணை வாசங்களை' வாரி வழங்கினர். பஞ்சாப் பிரச்னைக்குரிய தீர்வைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு கமிஷன்களிடம் விடப்பட்டது.

இந்த உடன்பாடு சூட்டைத்தணிக்க உதவியதேயன்றி ஜுரத்தைப் போக்கவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் மூலம் அந்த உடன்பாட்டுக்கு அங்கீகாரம் காண முயன்றார் ராஜீவ் காந்தி. ஆனால் 1985 ஆகஸ்டு மாதம் 20 ஆம் தேதி தேர்தலுக்கு முன் லோங்கோவால் ஷெர்பூர் கிராமத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். பின்னர் நடைபெற்ற பஞ்சாப் சட்டமன்றத் தேர்தலில் அகாலி தளம் வெற்றி பெற்றது. சுர்ஜித் சிங் பர்னாலா முதலமைச்சரானார். எனினும் பஞ்சாபியர் நீலநட்சத்திர நடவடிக்கையின் அதிர்ச்சித் தாக்கத்திலிருந்து விடுபடவில்லை. அகாலி களம் உட்கட்சிப் பூசலாலும் பிளவாலும் பலமிழந்தது.

### ராஜீவ் காந்தி - லோங்கோவால் உடன்பாடு, 1985

(Rajiv Gandhi - Longowal Agreement) ராஜீவ் காந்தி பிரதமரானவுடன் எதிர் கொண்ட சவால்களில் ஒன்று பஞ்சாப் பிரச்னை ஆகும். பஞ்சாப் மொழிவழி மாநிலமாவதை நிராகரித்தார் நேரு (1956). அரியானாவைப் பஞ்சாபிலிருந்து பிரித்து, சண்டிகாரை யூனியன் பிரதேசமாக்கி பஞ்சாப் பிரச்னைக்கு ஒரு தீர்வைக் கண்டார் இந்திரா காந்தி (1966). அவர் சீக்கிய பயங்கரவாதத்துக்குப் பலியானார் (1984). பிரதமர் பொறுப்பேற்ற ராஜீவ் காந்தி பஞ்சாப் பிரச்னைக்கு 'இராணுவத் தீர்வு' க்குப் பதில் நல்லிணக்கத் தீர்வு காண விரும்பினார். அதன் விளைவாக 1985 ஜுலை 24 ஆம் தேதி பிரதமர் ராஜீவ் காந்தி அகாலி தளத் தலைவர் சந்த் லோங்கோவாலுடன் வரலாற்றுச் சிறப்பு மிக்க உடன்பாடு செய்து கொண்டார்.

## மதிப்பீடு

ராஜீவ் காந்தி பிரதமரானவுடன் செய்த முதல் காரியம் சீக்கிய எதிர்ப்புக் கலவரம் பரவாமல் தடுத்ததாகும். அதையடுத்து அவர் அஸ்ஸாம் அகதிகள் பிரச்னைக்குத் தீர்வு கண்டார். அதன்பின் ராஜீவ் காந்தி அகாலிதளத் தலைவர் லோங்கோவாலுடன் செய்து கொண்ட உடன்பாடாகும். முப்பத்தி மூன்று மணி நேரம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியபின் அவ்வுடன்பாடு ஏற்பட்டது. அரசியல் நோக்கர்கள் அந்த உடன்பாட்டை லோங்கோவாலின் தனிப்பட்ட தீரச்செயல் என்று கருதினர். ராஜீவ் காந்தி சீக்கிய தீவிரவாதிகளின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார். அதேபோன்று லோங்கோவாலும் கோரிக்கைகளை விட்டுக் கொடுத்தார். அதற்காக இருவருமே விமர்சிக்கப்பட்டனர். லோங்கோவால் ராஜீவ் காந்தியுடன் செய்து கொண்ட உடன்பாட்டுக்கு அகாலி தளத்தின் ஒப்புதலைப் பெற்றார் (ஜுலை 26).

ராஜீவ் காந்தி இராணுவத் தீர்வுக்கு பதில் லோங்கோவாலுடன் அமைதித் தீர்வு கண்டமைக்காகப் பொதுவாகப் பாராட்டப்பட்டார். எனினும் அரியானாவும் ராஜஸ்தானும் அந்த உடன்பாட்டில் ஆர்வம் காட்டவில்லை. விளைவுகள் என்று பார்க்கப்போனால் ராஜீவ் காந்தி லோங்கோவால் உடன்பாடு எதையும் சாதிக்கவில்லை; எந்த பிரச்னையையும் தீர்க்கவில்லை! ராஜீவ் காந்தியும் லோங்கோவாலும் ஜனரஞ்சக வக்கணை வாசங்களை' வாரி வழங்கினர். பஞ்சாப் பிரச்னைக்குரிய தீர்வைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு கமிஷன்களிடம் விடப்பட்டது.

இந்த உடன்பாடு சூட்டைத்தணிக்க உதவியதேயன்றி ஜுரத்தைப் போக்கவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் மூலம் அந்த உடன்பாட்டுக்கு அங்கீகாரம் காண முயன்றார் ராஜீவ் காந்தி. ஆனால் 1985 ஆகஸ்டு மாதம் 20 ஆம் தேதி தேர்தலுக்கு முன் லோங்கோவால் ஷெர்பூர் கிராமத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். பின்னர் நடைபெற்ற பஞ்சாப் சட்டமன்றத் தேர்தலில் அகாலி தளம் வெற்றி பெற்றது. கர்ஜித் சிங் பர்னாலா முதலமைச்சரானார். எனினும் பஞ்சாபியர் நீலநட்சத்திர நடவடிக்கையின் அதிர்ச்சித் தாக்கத்திலிருந்து

விடுபடவில்லை. அகாலி தளம் உட்கட்சிப் பூசலாலும் பிளவாலும் பலமிழந்தது.

## UNIT-V

## ஐக்கிய முன்னணி ஆட்சி

### (United Front)

1996 ஏப்ரல்-மே மாதங்களில் நடைபெற்ற பதினோறாவது மக்களவைத் தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றது. இரண்டாவது இடத்தைப் பிடித்த காங்கிரஸ் அரசாங்கம் அமைக்க முன்வராமையால் பா.ஜ.க. தலைவர் அடல் பிகாரி வாஜ்பாய் அரசாங்கப் பொறுப்பேற்க குடியரசுத் தலைவரால் அழைக்கப்பட்டார். 1996 மே 16 ஆம் தேதி பிரதமர் பொறுப்பேற்ற வாஜ்பாய் 13 நாள் ஆட்சிக்குப்பின் மக்களவையின் நம்பிக்கை வாக்கைப்பெறும் நம்பிக்கையின்மையால் பதவி விலகினார்.

எந்த ஒரு கட்சியும் அரசாங்கம் அமைக்கும் நிலையிலோ அல்லது மற்றொரு மக்களவைத் தேர்தலைச் சந்திக்கவோ தயாராயில்லை. எனவே, காலக் கட்டாயத்தின் விளைவாக ஜனதா தளம், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, புரட்சி சோஷலிஸ்ட் கட்சி (ஆர்.எஸ்.பி), பார்வர்ட் பிளாக், சமாஜ்வாதி கட்சி, தெலுங்கு தேசம் கட்சி (நாயுடு), திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் மாநில காங்கிரஸ், அசோம் கணபரி கட்சி இந்திரா காங்கிரஸ் (திவாரி), ம.பி.விகாஸ் காங்கிரஸ், அரியானா விகாஸ் ஆகிய 13 கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டணி அமைத்தன. இக்கூட்டணிக்கு ஆக்கிய முன்னணி' என்று பெயரிடப்பட்டது.

எச்.டி.தேவகவுடா ஐக்கிய முன்னணியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேவ கவுடாவின் தலைமையில் அமைந்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைக் காங்கிரசும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும் அரசாங்கத்துக்கு வெளியிலிருந்து ஆதரித்தன. சமகால இந்திய வரலாற்றில் முதன்முறையாக ஒரு தன்னியல்பான கூட்டணி அரசாங்கம் (a Genuine Coalition Goernment) அமைக்கப்பட்டது.

## கூட்டணி ஆட்சி

கூட்டணி (Coalition) என்றால் என்ன? கூட்டணி என்றால் பலதரப்பட்ட அமைப்புகள் குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத் தங்களுடைய வளங்களை ஒன்று சேர்க்க இணைவதாகும். அரசியலில் கூட்டணி என்றால் பல்வேறு அரசியல் கட்சிகள் குறிப்பிட்ட காரணத்துக்காக ஒன்று சேர்ந்து அரசாங்கம் அமைப்பதாகும். கூட்டணி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் என்ன? இந்தியா விடுதலை அடைந்தபின் இந்திய தேசிய காங்கிரஸ் 1947 லிருந்து 1967 வரை முப்பதாண்டு காலம் தொடர்ந்து தனிக்கட்சி அரசாங்கம் அமைத்து ஆட்சி செய்தது. 1967 பொதுத் தேர்தலில் காங்கிரஸ் மத்தியிலும், மாநிலங்களிலும் பலவீ னமடைந்தது 1977 தேர்தலில் காங்கிரஸ் தோல்விகண்டதால் முதன் முறையாக ஜனதா கட்சி காங்கிரசல்லாத அரசாங்கம் அமைத்தது. 1979 மத்தியில் மொராஜி தேசாயின் ஜனதா அரசாங்கம் வீ ழ்ந்தபின் சரண்சிங் பொறுப்புஅரசாங்கம்' (Care-Taker Government) அமைத்தார்.

மொராஜி தேசாய் தலைமையில் ஐந்து கட்சிகள் இணைந்த ஜனதா கட்சி அரசாங்கம் காங்கிரசல்லாத முதல் கூட்டணி ஆட்சியாகும். ஜனதா கட்சியிலிருந்து பிரிந்த ஜனதா (எஸ்) கட்சியும், காங்கிரஸ் (யு) கட்சியும் இணைந்து சரண் சிங் தலைமையில் அமைந்த அரசாங்கம் இரண்டாவது கூட்டணி ஆட்சியாகும். இந்த ஆட்சிக்குக் காங்கிரஸ் 'அரசாங்கத்துக்கு வெளியிலிருந்து' ஆதரவளித்தது. அதன்பின் 1990ல் வி.பி.சிங் தலைமையில் "தேசிய முன்னணி" அரசாங்கம் அமைக்கப்பட்டது. இது மூன்றாவது கூட்டணி அரசாங்கப் பரிசோதனையாகும். 1996இல் அமைக்கப்பட்ட ஐக்கிய முன்னணி அரசாங்கம் நான்காவது காங்கிரசல்லாத ஆனால் காங்கிரஸ் 'வெளி ஆதரவு' பெற்ற கூட்டணி ஆட்சி ஆகும்.

## பிரதமர் தேவ கவுடா

## தற்செயல் பிரதமர்'

1996 ஜூன் மாதம் முதல்தேதி ஹர்தனஹல்லி தேவ கவுடா பிரதமர் பதவிப் பொறுப்பேற்றார். சமகால இந்திய வரலாற்றில் முதல்

முறையாகப் பதவியிலிருந்த மாநில முதலமைச்சர் நேரடியாகப் பிரதமரானார். நரசிம்மராவுக்குப் பிறகு தென்னிந்தியாவிலிருந்து ஒருவர் பிரதமரானது இவர்தான். இவருக்கு இந்தி கொஞ்சமும் தெரியாது. மத்திய அரசாங்க அனுபவம் எதுவும் இல்லாதவர். தேவகவுடா பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டபோது அவர் நாடாளுமன்றத்தின் எந்த அவையிலும் உறுப்பினராக இல்லை. கர்நாடகத்தில் ஜனதா தள முதலமைச்சராயிருந்த தேவ கவுடா குக்கிராமத்தில் பிறந்து மாநில முதல்வரானவர். விவசாயிகளின் நண்பர் வியாபாரிகளின் தோழன்.

பொறியியலாளரான கவுடா மக்கள் செல்வாக்கு பெற்ற கர்நாடக அரசியல் தலைவரானவர். கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தவர் பல்வேறு கட்சிகளை இணைக்கத் தெரிந்தவர். தன்னைவிடத் திறமையும் அனுபவமும் கொண்ட ராமகிருஷ்ண ஹெக்டே போன்றோரைச் சமாளித்தவர். மாநில அரசியலில் இருபது ஆண்டுகால அனுபவம் பெற்றவர். பிழைக்கத் தெரிந்தவர். வி.பி.சிங், ஜோதி பாசு, கருப்பையா மூப்பனார் ஆகியோர் பிரதமர் பொறுப்பேற்க மறுத்துவிட்டதால் அப்பதவி தேவகவுடா மீது திணிக்கப்பட்டது. 'நான் பிரதமரானது தற்செயல் நிகழ்ச்சிதான்' என்று குறிப்பிட்டார் பிரதமர் தேவ கவுடா.

## அனுபவமற்ற அமைச்சரவை

தேவகவுடா அமைச்சரவையில் 21 அமைச்சர்கள் இடம் பெற்றனர். இவர்களுள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம், வெளியுறவு அமைச்சர் ஐ.கே.குஜ்ரால், நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சர் எம்.அருணாச்சலம் ஆகியோர் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் அமைச்சரவையில் இருந்தவர்கள். ஐந்து ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் பெற்றவர்கள். தேவகவுடா உள்ளிட்ட 7 பேர் மாநில நிர்வாக அனுபவமுடையவர்கள். எஞ்சிய பேருக்கு அரசாங்க அனுபவம் கொஞ்சமும் கிடையாது. 1996 ஜூன் 12 ஆம் தேதி பிரதமர் தேவகவுடா காங்கிரஸ் ஆதரவுடனும் ஆசியுடனும் மக்களவை நம்பிக்கை வாக்கைப் பெற்றார். அதன்பின் அவரது அமைச்சரவையை விரிவுபடுத்தினார் (ஜூன் 28).

விரிவுபடுத்தப்பட்ட அமைச்சரவையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் இந்திரஜித் குப்தா உள்துறை அமைச்சராகவும், அக்கட்சி உறுப்பினர் சதுரானன் மிஸ்ரா வேளாண்மைத்துறை அமைச்சராகவும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். முதன்முறையாகக் கம்யூனிஸ்டுகள் மத்திய அரசாங்கத்தில் இடம் பெற்று வரலாறு படைத்தனர். முன்னாள் கர்நாடக வருவாய் துறை அமைச்சரான ஞாலப்பா பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டவுடன் காபினெட் அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டவில்லை என்று கோபம் கொண்டு வெளிநடப்பு செய்தார். அவர் காபினெட் அமைச்சராகப் பதவி உயர்வு பெற்றார்! ஒரிசா முதலமைச்சர் பிஜீ பட்னாய்க்கைத் திருப்திப்படுத்த டி.கே.ரே அமைச்சராக்கப்பட்டார். பீகார் முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ் அவரது ஆதரவாளர்களை அமைச்சர்களாக நியமிக்க வேண்டும் என்று நிர்பந்தித்ததால் ஜம்மு-காஷ்மீரின் ஒரே ஜனதா தள உறுப்பினர் முகமது மக்பூல் தாரும், மகமலா சின்ஹா போன்ற பெண் உறுப்பினர்களும் அமைச்சரவையில் இடம் பெற முடியாமல் போயிற்று. வருவாய்க்குள் மீறிய ரூபாய் 5.52 கோடிக்குச் சொத்து சேர்த்ததாக ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளான ஒரிசா மாநிலங்களவை உறுப்பினர் திலீப் ரே அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். பிரதமர் தேவகவுடாவுக்கு அமைச்சர்களை முடிவு செய்யும் தனிச்சிறப்புரிமை (Prerogative) இல்லாமல் போயிற்று.

## 'வெளி ஆதரவு'

மக்களவையில் 28 உறுப்பினர்களை மட்டுமே கொண்டிருந்த ஜனதா தளம் பிற கட்சிகளுடன் இணைந்து அமைத்த 'அரசியல் அவியல்' கூட்டணி அரசாங்கத்தில் இடம் பெறாத காங்கிரசும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும் வெளியிலிருந்து தேவகவுடா அரசாங்கத்தை ஆதரித்தன. இவ்விரு கட்சிகளும் குறைந்தபட்ச நிபந்தனை'களோடு ஆதரவளித்தன. ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்ட கொள்கைகளை கொண்ட இவ்விரு கட்சிகளின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறாமல் தேவகவுட" அரசாங்கத்தால் எந்த முக்கிய முடிவையும் எடுக்க முடியாது. அரசாங்கத்தில் இடம்

பெற்ற, இடம் பெறாத கட்சிகளின் கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும், விருப்பு

வெறுப்புகளுக்கும் வளைந்து, நெளிந்து, சமரசம் செய்து கொண்டுதான் பிரதமர் தேவ கவுடாவால் செயல்பட இயலும். முடிவெடுக்கும் அதிகாரமற்ற வெளி ஆதரவை நம்பியிருந்த தேவ கவுடா அரசாங்கம் பொம்மலாட்ட அரசாங்கம்' ஆகும். சுருங்கக்கூறின், தேவகவுடா அரசாங்கம் அடுத்த பொதுத் தேர்தலை உடனடியாக சந்திக்க விரும்பாத சந்தர்ப்பவாதிகளைக் கொண்ட, அவர்களின் ஆதரவைப் பெற்ற தற்காலிக இணைப்பமைப்பாகும். ஐக்கிய முன்னணி 139 உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரசின் வெளி ஆதரவு' இன்றி ஆட்சி செய்ய முடியாது.

## குறைந்த பட்ச பொதுத் திட்டம் (Common Minimum Programme)வழிகாட்டு நெறிகள்

1996 ஜுன் மாதம் 5 ஆம் தேதி பிரதமர் எச்.டி.தேவ கவுடா ஐக்கிய முன்ன ணி அரசாங்கத்தின் 25 பக்க 'குறைந்தபட்ச பொதுத் திட்டத்தை' வெளியிட்டார். அத்திட்டத்தில் புதிதாகப் பதவி ஏற்ற கூட்டணி அரசாங்கத்தின் கொள்கைகளும் திட்டங்களும் அறிவிக்கப்பட்டது. கூட்டணிக் கட்சிகள் நேர்மையோடும், பொறுப்போடும், வெளிப்படையாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்று மக்கள் எதிர்பார்த்ததாகவும், ஐக்கிய முன்னணி அரசாங்கம் சமயச்சார்பற்ற, தாராளமய, ஜனநாயகக் கூட்டாட்சியை அமைத்துள்ளது என்றும் கூறப்பட்டது. புதிய அரசாங்கம் மாற்று அரசாங்க பாணியைப் பின்பற்றும் என்றும், கூட்டாட்சி (Federalism), அதிகாரப் பரவல் (decentralisation), பதில் சொல்லும் பொறுப்பு (accountability), சமத்துவம் (eqality), சமூக நீதி (Social Justice), பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் (Economic and Political reforms), மனித உரிமைகளுக்கு மரியாதை (Respect for human freedoms), ஒளிவு மறைவின்மை (Transparency) ஆகியவை இந்த அரசாங்கத்தின் வழிகாட்டு நெறிகளாக இருக்கும் என்ற உறுதியோடு குறைந்த பட்ச பொதுத் திட்டம் அறிவிக்கப்பட்டது.

## பிரதமரின் பிரச்னைகள் பிரதமரின் ஆலோசகர்கள்

தற்செயல் பிரதமரான தேவகவுடா அனுபவமற்ற அமைச்சர்களைக் கொண்டு வெளி ஆதரவுடன் ஆட்சியைத் துவக்கினார். 13 கட்சி ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்குத் தலைமை தாங்கிய தேவகவுடா மூத்த தலைவர்களின் ஆலோசனைகளையும் அனுபவ வழிகாட்டலையும் சார்ந்திருந்தார். நெருக்கடி நேரத்தில் வி.பி.சிங்கின் தலையீடு தேவைப்பட்டது. மார்க்சிய கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் ஹர்கிஷன் சிங் சுர்ஜித் பிரதான ஆலோசகர்களில் ஒருவராக இருந்தார். நிதி அமைச்சர் ப.சிதம்பரம் தேவகவுடாவின் ஏழைகளின் ஏற்றம் பற்றிய கருத்தைப் பொருளாதாரச் சீர்திருத்தத்தோடு குழைத்துக் கொடுத்தார். இந்தர் குமார் குஜ்ரால் வெளியுறவுக் கொள்கைக்கு புதிய அணுகுமுறையைக் கொண்டுவர உதவினார். தேவ கவுடா தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனாரின் ஆலோசனைகளை மிகவும் மதித்தார். சி.எம்.இப்ராஹீம், ஷரத் யாதவ், முரசொலிமாறன், என்.சந்திரபாபு நாயுடு ஆகியோர் சச்சரவுகளைத் தீர்க்க உதவினர். பி.எல்.ஷர்கர், ஸ்ரீகாந்த் ஜேனா, ராம் விலாஸ் பஸ்வான் பிரதமர் தேவகவுடாவின் 'கண்களாகவும் காதுகளாகவும் செயல்பட்டனர் இவர்கள் அன்றி தேவ கவுடா, அரசாங்கத்துக்கு வெளியிலிருந்து ஆதரவளித்த காங்கிரஸ் தலைவர் பி.வி.நரசிம்மராவின் ஆலோசனைகளையும் பெற்றார். இவர்களது ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் தேவ கவுடா பிரச்னைகளைச் சமாளிக்கப் பொதும் உதவின.

## கட்சிப் பிரச்னை

தேவகவுடா பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை ஜனதாத் தளத் தலைவர்கள் சிலர் ஏற்கவில்லை. உதாரணமாக ஜனதாத் தள மூத்த தலைவரான ராமகிருஷ்ண ஹெக்டே பிரதமர் தேவகவுடாவையும், ஐக்கிய முன்னணியையும், அதன் கொள்கைகளையும் கடுமையாக விமர்சித்தார். கட்சி விரோத நடவடிக்கைகளுக்காக ஹெக்டே ஜனதா தளத்திலிருந்து ஆறு ஆண்டு காலத்துக்கு நீக்கப்பட்டார். அதே போன்று பிரதமர் தேவ கவுடா கர்நாடகத்தின கோஜன்ட்ரிக்ஸ் மின் சாரத் திட்ட

(Cogentric Power Project) த்துக்கு ஏற்பளித்ததை எதிர்த்ததால் உத்திரப் பிரதேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு ஜனதா தள மக்களவை உறுப்பினர்களில் ஒருவரான மேனகா காந்தி கட்சி கட்டுப்பாடின்மைக்காக ஆறாண்டு காலத்துக்குக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். (1996 ஜூலை 5) பிரதமரின் பொறுமையின்மையாலும், காழ்ப்புணர்ச்சியாலும் பதவியேற்ற ஒரு வாரத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கைகள் ஜனதா தளத்தைப் பலவீனப்படுத்தியது அதன் நம்பகத் தன்மையைப் பாதித்தது.

## ஊழல் ஒழிப்பு

ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைத்தபோது அடுக்கடுக்கான ஊழல் குற்றச்சாட்டுகள் நாட்டு மக்களை அதிர்ச்சியுறச் செய்தன. எடுத்துக்காட்டாக பங்கு பேர ஊழல், பீகார் மாட்டுத் தீவன ஊழல், சர்க்கரை ஊழல், அரசாங்க கூட்டு ஒதுக்கீடு ஊழல், ஹவாலா ஊழல், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா ஊழல், எருபேர ஊழல்.. எனவே உயர்மட்ட ஊழலை ஒழிப்போம்' என்ற குறிக்கோளோடு ஆட்சிப் பொறுப்பேற்றது ஐக்கிய முன்னணி. ஆனால் பீகார் மாட்டுத் தீவன ஊழலில் குற்றம் சாட்டப்பட்டவரும் ஜனதா தளத் தலைவருமான பீகார் முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவின் வற்புறுத்தலால் முகமது தஸ்லிமுதீன் உள்துறை இணை அமைச்சராக சேர்த்துக் கொள்ளப்பட்டார். அவர் பீகார் அமைச்சராக இருந்தபோது ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளானவர். முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவால் நியமிக்கப்பட்ட சட்டப்பேரவைக் குழு தஸ்லிமுதீன் ஊழலில் சம்மந்தப்பட்டதற்கான முகாந்திரம் இருப்பதாகக் கூறியது. கண்டனத்துக்குள்ளான அமைச்சர் தஸ்லிமுதீன் வேறு வழியின்றி பதவியை ராஜிநாமா செய்தார் (ஜூலை 9) காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்னை

## காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்னை

தமிழ்நாடு-கர்நாடாகா உறவு உடலில் குத்திய முள்ளாக இருந்தது. தேவகவுடா கர்நாடகா முதலமைச்சராக இருந்த போது இப்பிரச்னை பற்றிய நடுவர் மன்றத் தீர்ப்பை ஏற்க மறுத்தவர். அவர் பிரதமரானபின்

நடுவர் நிலையிலிருந்து இப்பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது. ஏனெனில் ஜனதா தளமும், தி.மு.க. வும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பங்குதாரர்கள். தமிழ்நாடு முதலமைச்சர் மு.கருணாநிதியின் நண்பரான வி.பி.சிங்கின் தலையீட்டால் இப்பிரச்னைக்குத் தற்காலிகத் தீர்வு காணப்பட்டது. கர்நாடக முதலமைச்சா எச்.என்.பட்டேல் ஓரளவு காவிரி நீர் (5 டி.எம்.சி) திறந்துவிட சம்மதித்தார்.

கர்நாடக அரசு ஆல்மாட்டி அணைக்கட்டின் (Almatti Dam) உயரத்தை 528 மீட்டராக உயர்த்துவது பற்றி மேற்கொண்ட முடிவை ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு கடுமையாக எதிர்த்தார். அம்முடிவு பக்கவட் நடுவர் மன்ற (Bachawat Tribunal)த் தீர்ப்புக்கு எதிரானது என்பது ஆந்திர முதல்வரின் குற்றச்சாட்டு. இப்பிரச்னைக்குத் தீர்வு காண தேவ கவுடா கர்நாடகா, ஆந்திரா முதலமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டினார். (ஆக. 11) இரு முதலமைச்சர்களும் ஒரு நான்கு நபர் குழுவை அமைக்க முடிவு செய்தனர் (ஆக. 12). அக்குழு ஒரு ஒன்பது நபர் குழுவை நியமித்தது. அக்குழு பக்கவட் நடுவர் மன்றத்தீர்ப்புக்கு எதிரானது என்று சட்ட அமைச்சகம் கருத்து தெரிவித்தது. பிரதமர் ஆல்மாட்டி அணைப் பிரச்னையைக் கிடப்பில் போட்டார். பிரதமர் கர்நாடகா சார்பாகச் செயல்படுகிறார் என்ற எண்ணம் எழுந்தது. தேவ கவுடா முடிவெடுத்துவிட்டு பிறகு அதைப் பற்றிச் சிந்திக்கிறார்; விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் உடனே முடிவெடுத்து விடுகிறார்; சிக்கல்களைப் பற்றி ஆழ்ந்து பரிசீலிக்காமல் ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறார்; இதற்கு ஆல்மட்டி அணை, நர்மதா நதிப் பிரச்னை உதாரணம்.

## திட்டக் கமிஷன் மறுசீரமைப்பு

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் குறைந்தபட்ச பொதுக் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் பொருளாதார வடிவம் கொடுக்கும் நோக்கத்தோடு திட்டக் கமிஷன் மறுசீரமைக்கப்பட்டது. முன்னாள் நிதி அமைச்சரும் சோஷலிசப் பார்வையுடைய அரசியல் விவேகியான மது தண்வடே திட்டக் கமிஷனின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். பிரதமர் அதன் தலைவர். புதிதாகப் பொறுப்பேற்ற (ஆக.1) மது

தண்வடே சோஷலிச அணுகுமுறையின் அவசியம், திட்டக் கமிஷனின் தேவை, பொதுத்துறை இலாபகரமாகச் செயல்பட வேண்டிய கட்டாயம் பற்றிப் பேசினார். உள்கட்டமைப்பு பலப்படுத்த வேண்டியதன் உடனடி இன்றியமையாமையை எடுத்துக் காட்டினார். வேலை வாய்ப்பு அதிகரிப்பு, வறுமை ஒழிப்பு, பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை அகற்றல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் திட்டமிடப்படும் என்று உறுதி கூறினார். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் இக்குறிக்கோள்களை நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

## பொது மூலதன விலக்கல் கமிஷன் (Disinvestment Commission)

ஐக்கிய முன்னணி அரசாங்கம் பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து அரசாங்க மூலதனப் பங்குகளை விலக்கிக் கொள்வது பற்றி முடிவெடுத்தது. அதற்குக் காரணம் 1980லிருந்து அரசாங்கப்பங்கு மூலதனத்துக்கு 3 விழுக்காடுக்கு மேல் வருவாய் கிடைக்கவில்லை . 1993-94 அரசாங்கத்தின் மொத்த பங்கு முதலீடு ரூ.1,60,000 கோடி ஆனால் அதிலிருந்து கிடைத்த வருமானம் ரூ.4,435 கோடி அதாவது 28 விழுக்காடுதான். எனவே, நட்டத்தை ஏற்படுத்தும் பொது மூலதனத்தை விலக்கிக் கொள்வது பற்றி அரசாங்கத்துக்கு ஆலோசனைகூற நிதி அமைச்சர் ப.சிதம்பரத்தை தலைவராகக் கொண்ட 'அமைச்சர்கள் குழு' அமைக்கப்பட்டது. பின்னர் முன்னாள் திட்டக் கமிஷன் உறுப்பினர் ஜீ.வி.ராமகிருஷ்ணன் தலைமையில் பொது மூலதன விலக்கல் கமிஷன் அமைக்கப்பட்டது (ஆக.7).

பொது மூலதன விலக்கல் கமிஷன் 1) ஐந்திலிருந்து பத்தாண்டு காலத்துக்குப் பொது நிறுவனங்களிலிருந்து அரசாங்கப் பங்கு மூலதனத்தைப் படிப்படியாக விலக்கிக் கொள்வதற்கான நீண்டகாலத் திட்டத்தைத் தயாரிக்கும்; 2) ஒவ்வொரு பொதுத் துறை நிறுவனத்திலிருந்தும் விலக்கிக் கொள்ளப்பட்டும் பங்கு மூலதனத்தின் அளவை தீர்மானிக்கும்; 3) முன்னுரிமை கொடுத்து மூலதனத்தை விலக்கிக் கொள்வதற்கான நிறுவனங்களை முடிவு செய்யும்; 4) பங்கு மூலதனத்தை விலக்கிக் கொள்ளும் முறை பற்றி முடிவு செய்யும்; 5) பங்கு மூலதன விற்பனைச் செயல்முறை, விலை விதிப்பு, செயல்பாடு ஆகியவற்றை மேற்பார்வையிடும்; 6) குறிப்பிட்ட பொது

நிறுவனங்களிலிருந்து பங்கு மூலதளத்தை விலக்கிக் கொள்வதற்கான நிதி ஆலோசகர்களைத் தேர்ந்தெடுக்கும்; 7) பங்கு மூலதனத்தை விலக்கிக் கொள்வதால் தொழிலாளர் நலன்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான வழிவகைகளைச் செய்யும். பொது மூலதன விலக்கல் கமிஷன் நியமிக்கப்பட்டது சமகாலப் பொருளாதார வரலாற்றில் முக்கிய மைல் கல் ஆகும்.

## தொழில் நுட்பத் தொலைநோக்கு 2000 (Technology Vision 2000)

பிரதமர் தேவ கவுடா இந்தியப் புத்தெழுச்சிக்கான தொழில் நுட்பத் தொலை நோக்கு 2000 திட்டத்தை வெளியிட்டார் (ஆக.2). இது மக்களின் வாழ்வின் தரத்தை உயர்த்துவதற்கான திட்டம். தரமான பொது சுகாதாரம், உயிரியல் தொழில் நுட்பம். பாதுகாப்பு, விவசாயம், செய்திப் போக்குவரத்து, பொறியியல், மின் சாரம் போன்ற துறைகளில் ஏற்படவேண்டிய மாற்றங்களைப் பற்றி இத்திட்டம் முன்கணிப்பு செய்யும். பாதுகாப்பு அமைச்சரின் ஆலோசகரும், தொழில் நுட்பத் தகவல் முன்கணிப்பு மற்றும் மதிப்பீடு நிறுவனத்தின் (Technology Information Forecasting and Assessment Council) தலைவருமான டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் இத்திட்டத்தைத் தீட்டினார் இந்தியாவைத் தொழில் நுட்ப வழிக்குத் திருப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## உத்தரகண்ட் பற்றிய அறிவிப்பு

1996 ஆகஸ்டு 15ஆம் தேதி பிரதமர் தேவகவுடா தனது முதல் சுதந்திர தின உரையில் உத்தரகண்ட் தனி மாநிலமாக அமைக்கப்படும் என்று அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக அறிவித்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். உத்திரப் பிரதேசத்தில் உள்ள எட்டு மலை மாவட்டங்களைக் கொண்டு இம்மாநிலம் அமைக்கப்படும். அம்மாநிலம் 51 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவையும், 60 இலட்சம் மக்களையும் கொண்டிருக்கும். இதற்கான மசோதா விரைவில் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் என்று தெரிவித்தார் பிரதமர். இந்த எதிர்பாரா அறிவிப்பை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்தது. பா.ஜ.க. அந்த அறிவிப்பை தேர்தல் தந்திரம்' என்று கூறியது. மலை மாவட்டங்களுக்கு யூனியன் பகுதி' அந்தஸ்து கொடுத்தால் போதும்

என்றது காங்கிரஸ். முலாயம் சிங் யாதவின் பகுஜன் சமாஜ் கட்சி (உ.பி) பிரதமரின் உத்தரகண்ட் அறிவிப்பு பற்றி மௌனம் சாதித்தது.

## ரமேஷ் சந்திரா கமிட்டி அறிக்கை

1995 ஜீன் மாதம் 2 ஆம் தேதி செல்வி மாயாவதி லக்னோ விருந்தினர் விடுதிக்கு வந்தபோது அவரும் அவரது ஆதரவாளர்களும் தாக்கப்பட்டனர். அப்போது அவர் முலாயம் சிங் யாதவ் அரசாங்கத்துக்கு அளித்துவந்த ஆதரவை விலக்கிக் கொள்வதாக ஆளுநருக்கு அறிவித்திருந்தார். அவருக்கு 282 சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதற்கான ஆதாரங்களைக் கொடுத்துத் தன்னை அரசாங்கம் அமைக்க அழைக்குமாறு ஆளுநரைக் கேட்டுக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அவர் தாக்கப்பட்டு அவரது ஆதரவாளர்களில் சிலர் கடத்திச் செல்லப்பட்டனர். அச்சம்பவம் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ரமேஷ் சந்திரா கமிட்டி சமர்ப்பித்த அறிக்கையில் ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த இரு மூத்த அமைச்சர்களான முலாயம் சிங் யாதவ், பெனி பிரசாத் வர்மா ஆகியோருக்கெதிராக ஆதாரங்கள் இருப்பதாகவும், அவ்விருவரும் செல்வி மாயாவதியைத் தாக்கிய சம்பவத்தில் சம்மந்தப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல. போலீசார் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்ததாகவும், போலீசார் திட்டமிட்டு சதி செய்து தாக்குதல் நடத்தியது கடமை பிறழ்ந்த செயல் என்றும், கடத்தப்பட்டோர் முலாயம்சிங் யாதவ் வீ ட்டில் அடைக்கப்பட்டு வெற்றுக்காகிதத்தில் கட்டாயமாகக் கையொப்பம் வாங்கப்பட்டதற்கு ஆதாரங்கள் இருப்பதாகவும் அந்த அறிக்கை கூறியது. ரமேஷ் சந்திரா கமிட்டி அறிக்கை நாடாளுமன்றத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. முகாந்திர ஆதாரம் இருந்தும் மத்திய பாதுகாப்பு அமைச்சராயிருந்த முலாயம் சிங் யாதவ் அந்த அறிக்கையை ஏற்க மறுத்துவிட்டார். பிரதமர் தேவகவுடா சம்மந்தப்பட்ட இரு அமைச்சர்கள் மீதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. குற்றமயமாகிக் கொண்டிருந்த அரசியல் (Criminalisation of Politics) ஐக்கிய முன்ன ணி அரசாங்கத்தால் அங்கீகாரம் பெற்றது.

## குஜராத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி

1996 செப்டம்பர் 19 ஆம் தேதி குஜராத்தில் 11 மாத கால சுரேஷ் மேத்தாவின் பாரதீய ஜனதா கட்சி அரசாங்கம் கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. சட்டப் பேரவையில் பெரும்பான்மை வாக்கெடுப்பில் வெற்றிபெற்ற சுரேஷ் மேத்தா அரசாங்கத்தை நீக்கியது 'ஜனநாயகப் படுகொலை' யாகக் கருதப்பட்டது. அரசாங்கம் நீக்கப்பட்டதேயன்றி சட்டப் பேரவை கலைக்கப்படவில்லை. தேவகவுடா அரசாங்கத்தின் நம்பகத்தன்மை கேள்விக் குறியாயிற்று. ஒரு மாத கால அரசியல் நிலையின்மைக்குப் பிறகு மகாகுஜராத் ஜனதா கட்சித் தலைவரான சங்கர் சிங் வகேலாவின் தலைமையில் அரசாங்கம் அமைக்கப்பட்டது (அக்.23). வகேலா சட்டப் பேரவையின் நம்பிக்கை வாக்கைப் பெற்றார் (அக்.29).

## பெண்களுக்கு இட ஒதுக்கீடு

1996 செப்டம்பர் 12 ஆம் தேதி பிரதமர் தேவ கவுடா பெண்களுக்கு நாடாளுமன்றத்திலும் மாநில சட்டப் பேரவைகளிலும் 33 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்வதற்கான அரசியலமைப்புச்சட்ட மசோதாவை மக்களவையில் அறிமுகப்படுத்தினார். இந்த 81 வது சட்ட திருத்தம் பெண்களுக்குப் பஞ்சாயத்து நிறுவனங்களில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு செய்த 73, 74வது சட்டத் திருத்தங்களின் விரிவாக்கமாகும். எனவே, 81வது சட்டத்திருத்தம் பெண்கள் மத்திய-மாநில ஜனநாயக ஆட்சியில் பங்கேற்பதற்காக மேற்கொள்ளப்பட்ட மாபெரும் முயற்சியாகக் கருதப்பட்டது. பால் நீதி (Gender Justice) வழங்குவதற்கான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் முற்போக்கு நடவடிக்கை என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அம்மசோதா விவாதிக்கப்பட்டபின் நாடாளுமன்றக் கூட்டு தேர்வுக்குழு (Joint Select Committee of Parliament) வின் விரிவான பரிசீலமைக்கு விடப்பட்டது (செப்.13). இந்த வரலாற்று முக்கியத்துவமுடைய மசோதா முடக்கப்பட்டது. இச்செயல் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பாசாங்கும் போலி நடிப்புக்கான எடுத்துக்காட்டாகும்; அரசியல் உறுதியின்மையின் அடையாளமாகும்.

## லோக் பால் மசோதா

தேவகவுடா அரசாங்கம் ஐக்கிய முன்னணியின் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தின் முக்கிய வாக்குறுதிகளில் ஒன்றான லோக் பால் மசோதா (Lok Pal Bill) வை மக்களவையில் அறிமுகப்படுத்தியது. (செப்.13) 1988 ஊழல் தடுப்புச் சட்ட (The Prevention of Coruption Act, 1988)த்தின் கீழ் ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளாகும் பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் லோக் பால் விசாரணைக்குள்ளாவர். இது உயர்மட்ட ஊழலுக்குகெதிரான அமைப்புரீதியான தீர்வாகும். சுயேச்சையாக இயங்கும் அதிகாரமுடைய இவ்வமைப்பு அரசியல் மற்றும் அதிகாரவர்க்கத்தின் செல்வாக்குக்கு உட்படாமல் சுதந்திரமாகச் செயல்படவல்லது. லோக்பாலிடம் வரும் வழக்கு ஆறுமாதங்களுக்குள் விசாரித்து முடிக்கப்படும். இவ்வமைப்பு பொய்ப்புகார் கொடுப்போர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும். இம்மசோதா பொது வாழ்வில் தூய்மையை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட துணிகர முயற்சியாகும். எனினும் அம்மசோதா சட்டமாக்கப்படவில்லை!

## மத்திய-மாநில உறவுகள்

ஆறாண்டுகால இடைவெளிக்குப்பின் மாநிலங்களுக்கு இடையேயான குழு (the inter-state council) கூட்டப்பட்டது. (அக்.15) அக்கூட்டத்தில் கலந்து கொண்ட முதலமைச்சர்கள் மத்திய மாநில உறவுகள் பற்றி விவாதித்தனர். குறிப்பாக மாநிலங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சியைப் புகுத்துவதற்குக் காரணமாயுள்ள அரசியலமைப்புச் சட்டத்தின் 356வது சரத்தை நீக்குவது பற்றிய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமர்தேவகவுடா பரஸ்பரக் கருத்துப் பரிமாற்றத்தின் மூலம்தான் மத்திய-மாநில உறவுகள் ஆரோக்கியமுடையதாக இருக்கும் என்றும், உள்ளாட்சி நிறுவனங்களின் பங்கேற்பால்தான் கூட்டுறவுக் கூட்டாட்சி (Cooperative Federalism) பலப்படும் என்றும் குறிப்பிட்டார். இத்தகைய கூட்டாட்சியை நடைமுறைப்படுத்துவதுதான் பிரதமரின் பிரச்சனையாக இருந்தது.

## உத்திரப் பிரதேசத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி

குஜராத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வந்த (செப்.19) ஐக்கிய முன்னணி அரசாங்கம் உத்திரப்பிரதேசத்தில் மீண்டும் அவ்வாட்சியைப் புகுத்தியது (அக்.17). சட்டப்பேரவை கலைக்கப் படவில்லை . காங்கிரசும் பகுஜன் சமாஜ்வாடி கட்சியும் சேர்ந்து செல்வி மாயாவதியை முதலமைச்சராக்க வேண்டும் என்றன. சமாஜ்வாதி கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதவின் வழிசென்ற ஐக்கிய முன்னணி செல்வி மாயாவதி முதலமைச்சராவதை எதிர்த்தது. 174 சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்ற தனிப்பெரும் கட்சியான பா.ஜ.க. அரசாங்கம் அமைக்க முன்வந்தது. தனிப் பெரும்பான்மைக் கட்சியான பா.ஜ.க.வுக்கு வாய்ப்பளிக்காமல் உத்திரப்பிரதேசத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வந்ததற்காக தேவ கவுடாவின் ஐக்கிய முன்னணி அரசாங்கம் கண்டனத்துக்குள்ளாயிற்று.

## பொது வினியோக முறை

பொது வினியோக முறை (Public Distribution System)யைச் சீரமைக்க முடிவு செய்தது தேவ கவுடா அரசாங்கம் (டிச.26). சீரமைக்கப்பட்ட முறையின் கீழ் 35 கோடி ஏழை மக்களுக்கு 10 கிலோ உணவுப் பொருள் நடைமுறையில் உள்ள பொது விநியோக விலையில் பாதி விலைக்கு வினியோகிக்கப்படும். இத்திட்டம் முதலில் தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் செயல்படுத்தப்படும். பின் பிற மாநிலங்களுக்கு விரிவுப்படுத்தப்படும். 1997 ஜனவரி 26 ஆம் தேதி அமுல்படுத்தப்பட்ட இத்திட்டம் மத்திய அரசாங்கத்தின் மாநில பளுவை மேலும் அதிகரிக்கவே செய்யும்.

## தேவகவுடாவின் வீழ்ச்சி

பத்து மாதம் பத்து நாட்கள் பதவியிலிருந்து தேவ கவுடாவின் ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1997 ஏப்ரல் 11 ஆம் தேதி வீ ழ்ந்தது அதற்குக் காரணம் சீத்தாராம் கேசரியின் தலைமையிலான காங்கிரஸ்

ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு 'வெளியிலிருந்து' கொடுத்துவந்த ஆதரவை விலக்கிக் கொண்டதாகும். காங்கிரஸ் ஆதரவை விலக்கிக் கொண்டதால் பிரதமர் தேவகவுடா நாடாளுமன்றத்தின் நம்பிக்கை வாக்கைப் பெறவேண்டியதாயிற்று. அதற்குக் காரணம் அவர் மக்களவையில் பலப்பரீட்சை செய்யாமல் பதவி விலகத் தயாராயில்லை. நீண்ட விவாதத்துக்குப்பின் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பில் தேவ கவுடாவுக்கு ஆதரவாக 190 வாக்குகளும் எதிராக 338 வாக்குகளும் பதிவாயின. நம்பிக்கை வாக்கு பெற முடியாத பிரதமர் தேவ கவுடா பதவி விலகினார். அதை அடுத்து இந்தர் குமார் குஜ்ரால் (Inder Kumar Gujral) இந்தியாவின் 12-வது பிரதமராகப் பதவிப் பொறுப்பேற்றார் (ஏப்.21).

## மதிப்பீடு

'தற்செயல் பிரதமராக' கப் பதவி ஏற்ற தேவ கவுடா 'தற்காலிக பிரதமராக' இருந்து பதவி விலகினார். அவருடைய பத்துமாத ஆட்சிக் காலத்தில் 13 கட்சிக் கூட்டணியைத் திறம்படச் சமாளித்தார். அதாவது பதிமூன்று திசைகளில் சென்றக் கட்சிக் குதிரைகளை ஒருங்கிணைத்து அரசாங்க ரதத்தைக் கவிழாமல் காத்தார். இரண்டாவதாக, உயர் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்தார். 1996-97இல் வளர்ச்சி விகிதம் 6.8 விழுக்காடாக இருந்தது. விவசாய மீட்பு ஏற்பட்டது. உற்பத்தித் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. அன்னியச் செலவாணி இருப்பு கணிசமாக உயர்ந்தது. இப்பொருளாதார வளர்ச்சிக்கு அமைச்சர்கள் ப.சிதம்பரமும், முரசொலி மாறனும் உறுதுணையாக இருந்தனர். மூன்றாவதாக அண்டை நாடுகளுடன் நல்லுறவு ஏற்பட்டது. குறிப்பாக ஜம்மு-காஷ்மீர் சட்டபேரவைத் தேர்தல் அமைதியாகவும் நியாயமாகவும் நடைபெற்றது. சீனாவுடன் எல்லை உடன்பாடு (Agreement on the Line of Actual Control) செய்துகொள்ளப்பட்டது. புதிதாகப் பிரதமர் பொறுப்பேற்ற நவாஸ் ஷெரீபுடன் ராஜதந்திரத் தொடர்பு கொண்டு இந்திய-பாகிஸ்தான் உறவில் இணக்கம் ஏற்பட்டது. இந்தியா கங்கை நதி நீர்ப் பகிர்வு பற்றிப் பங்ளாதேஷுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் அரிய சாதனையாகும். இவற்றுக்கெல்லாம் வெளியுறவு அமைச்சர் ஐ.கே.குஜ்ரால் தோன்றத் துணையாக இருந்தார்.

எனினும் பிரதமர் தேவ கவுடா 'கர்நாடக முதலமைச்சர் மனப்பான்மை 'யுடன் செயல்பட்டமையால் பாரபட்சமற்ற பிரதமர் என்ற நிலையிலிருந்து விலகினார். காவிரி நீர்ப் பங்கீடு மற்றும் அல்மாட்டி அணைக்கட்டுப் பிரச்னைகளில் கர்நாடகத்துக்கு ஆதரவாக இருந்து தமிழ்நாடு, ஆந்திர மாநில மக்களின் ஆதரவை இழந்தார். மூத்த ஜனதா தளத் தலைவர் ராமகிருஷ்ண ஹெக்டேயைக் கட்சியிலிருந்து விலக்கியதன் மூலம் கட்சியைப் பலவீனப்படுத்தினார் உத்திரப் பிரதேச அரசியல் பற்றிக் குழம்பி தயங்கித் தடுமாறியதால் பா.ஜ.க. வின் ஆதரவுடன் செல்வி மாயாவதி கூட்டணி அரசாங்கம் அமைத்தார். வழிநடத்தும் குழு (Steering Committee) என்ற வால் ஐக்கிய முன்ன ணி அரசாங்கம் என்ற நாயை ஆட்டிக் கொண்டிருந்தது. தேவ கவுடா அதிகாரப் பரவல் பற்றிப் பேசினார். ஆனால் அவரது வலக்கரமாகத் திகழ்ந்த அமைச்சர் சி.எம்.இப்ராஹீம் அதிகாரக் குவிப்பில் ஈடுபட்டார். அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வான் தன் வழி சென்றார்.... ஆளுமைக் கவர்ச்சியோ (Charisma) பேச்சாற்றலோ, தலைமைத் திறனோ இல்லாத தேவகவுடா தம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. அரசாங்கத்துக்கு வெளியிலிருந்து ஆதரித்த மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும், காங்கிரசும் பிரதமர் கழுத்தில் கட்டப்பட்டப் பாராங்கற்களாக இருந்தன. குறிப்பாக 142 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ் தலைவர் சீத்தாராம் கேசரியுடன் ஒத்துபோக முடியாமையால் தேவ கவுடா பிரதமர் பதவியை இழக்க வேண்டியதாயிற்று,

இந்தியா டுடே' (India Today) தேவகவுடா அரசாங்கம் பற்றி நடத்திய தேசிய கருத்துக் கணிப்பின் முடிவுகள் வருமாறு: 1) தேவகவுடாவைப் பற்றிக் கேள்விப்பட்டதாக 75 விழுக்காட்டினரும்; 2) தேவ கவுடா அரசாங்கத்தின் செயல் திறன் பற்றி 24 விழுக்காட்டினர் நன்றாக இருப்பதாகவும், 25 விழுக்காட்டினர் மோசம் என்றும்; 47 விழுக்காட்டினர் சுமார் என்றும் கூறினார்கள்; 3) பொதுவாக ஐக்கிய முன்னணி அரசாங்கம் பற்றி 17 விழுக்காட்டினர் நன்றாக இருப்பதாகவும், 40 விழுக்காட்டினர் சுமாராக உள்ளதாவும், 30 விழுக்காட்டினர் மோசம் என்றும் கூறினர்; 4) பிரதமர் தேவ கவுடாவைப்பற்றிப் பெண்களும் (77%), பிற்பட்ட வகுப்பாரும் (79%)

அதிகமாக அறிந்திருந்தனர்; 5) பெரும்பான்மையினர் தேவ கவுடா வேலை வாய்ப்பு, விலைவாசி உயர்வு, வறுமை போன்ற அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் அதிருப்தி தெரிவித்தனர். சுருங்கக்கூறின் பிரதமர் தேவ கவுடா ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைக் கவிழாமல் காப்பாற்றினார்.

## பிரதமர் ஐ.கே.குஜ்ரால்

### பிரதமர் தேர்வு

தேவ கவுடா தலைமையிலான மத்திய அரசு பதவி விலகிய பிறகு (ஏப்.11) அடுத்த பிரதமர் யார் என்ற கேள்வி எழுந்தது. அரசாங்கம் அமைக்க முன்வந்த காங்கிரஸ் அதன் நிலையை மாற்றிக் கொண்டு காங்கிரஸ் கருத்தரிந்து செயல்படும் வேறொரு ஐக்கிய முன்னணிப் பிரதமரை ஆதரிப்பதாக அறிவித்தது. அதையடுத்து அடுத்த பிரதமரைத் தேர்வு செய்வது பற்றி ஐக்கிய முன்னணித் தலைவர்களிடையே இரகசிய ஆலோசனைகள் நடைபெற்றன. வழக்கம் போல் பல பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. அவர்களில் ஒருவர் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கருப்பையா மூப்பனார். முலயாம் சிங் யாதவ், லாலு பிரசாத் யாதவ், பொம்மை ஆகியோரும் பிரதமர் பதவிக்கான போட்டியில் கலந்து கொண்டனர். கூட்டாட்சி முன்னணி (Federal Front) உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்து ஏற்படாமையால் மூப்பனார் பிரதமர் பதவிக்கான போட்டியில் வெற்றி பெறவில்லை. எதிர்ப்பு குறைவு என்பதால் தேவ கவுடா அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராக இருந்த ஐ.கே.குஜ்ரால் அடுத்த ஐக்கிய முன்னணிப் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார்.

### வாழ்க்கைக் குறிப்பு

இந்தர் குமார் குஜ்ரால் 1919 டிசம்பர் 4 ஆம் தேதி தற்போது பாகிஸ்தானில் உள்ள ஜீலத்தில் (Jhelum) பிறந்தார். இவரது தந்தை அவ்தார் நாராயண் குஜ்ராலும், தாயும் பஞ்சாபில் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிர பங்கு கொண்டனர். ஐ.கே. குஜ்ரால் லாகூரில் மாணவராயிருந்தபோது பால பாரத குழந்தைகள் இயக்கத்தில் கலந்து கொண்டார். மாணவர் இயக்கத்தில் முக்கியப் பங்கேற்றார். இவர் பிரபல கவிஞர் ஷீலாவை மணந்துகொண்டார். இவரது சகோதரர்

சதீஷ்குஜ்ரால் பிரபல கலைஞர். இந்தர் குமார் குஜ்ரால் 1942 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்கேற்றதால் சிறைப்பட்டார்.

இந்தியா சுதந்திரம் பெற்றபின் குஜ்ரால் டெல்லிக்கு வந்து இறக்குமதி-ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டார். காங்கிரசில் சேர்ந்தார். புது டெல்லி முனிசிபல் கமிட்டித் தலைவராக இருந்தார் (1959-1964), 1967 இல் மாநிலங்களவை உறுப்பினரான குஜ்ரால் இந்திரா காந்தியின் 'அடுப்பங்கரை அமைச்சரவைக்குழு' (Kitchen Cabinet)வில் இடம் பெற்றார். இவரும் தினேஷ் சிங்கும் பிரதமர் இந்திரா காந்தியின் நெருங்கிய ஆலோசகர்களாக இருந்தனர். அடுத்த பத்தாண்டுகளில் (1967-1976) குஜ்ரால் பல பதவிகளை வகித்தார். நெருக்கடி காலத்தில் இந்திரா காந்தி அமைச்சரவையில் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சராகவும், செய்தி மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சராகவும் இருந்தார். பின்னர் திட்டக் கமிஷனுக்கு மாற்றப்பட்டு (1976) இந்திய தூதராக மாஸ்கோவுக்கு அனுப்பப்பட்டார்.

பிரதமர்கள் மொரார்ஜி தேசாயும், சரண் சிங்கும் குஜ்ராலை வெளியுறவுத் தூதராக வைத்துக்கொண்டனர். இந்திரா காந்தி மீண்டும் பிரதமரானவுடன் குஜ்ரால் அவரை விமர்சித்தார். அதன் விளைவாக குஜ்ரால் அவரது அரசாங்கத்திலும், ராஜீவ் காந்தி அரசாங்கத்திலும் இடம் பெறவில்லை. 1989 இல் ஜலந்தர் தொகுதியில் வெற்றி பெற்று மக்களவை உறுப்பினரான குஜ்ரால் வி.பி.சிங் அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராக இடம் பெற்றார். அதன்பின் 1996 இல் ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைத்தவுடன் குஜ்ரால் மீண்டும் வெளியுறவு அமைச்சரானார். தேவ கவுடா பதவி விலகியதால் 78 வயதான குஜ்ரால் ஐக்கிய முன்னணியின் பொதுக்கருத்துப் பிரதமர் (Consensus Prime Minister) ஆனார்.

**பிரதமரின் பிரச்னைகள்**

**நம்பிக்கை வாக்கெடுப்பு**

ஐ.கே. குஜ்ரால் மக்களவையின் நம்பிக்கை வாக்குக்கோரிய ஏழாவது பிரதமர் ஆவார். முதல் முறையாக பிரதமர் சரண் சிங் நம்பிக்கை வாக்கு பெறுமாறு குடியரசுத் தலைவரால் கோரப்பட்டார்

(1975 ஆக.13). அவர் மக்களவையை சந்திக்கும் முன்பே பதவி விலகினார். இரண்டாவதாக பிரதமர் வி.பி.சிங் இருமுறை (1989 டிச.21, 1990 நவ.7) நம்பிக்கை வாக்கு பெறவேண்டியிருந்தது. இரண்டாவது முறை நம்பிக்கை வாக்கைப் பெறாமையால் பதவி விலகினார்! மூன்றாவதாகப் பிரதமர் சந்திரசேகர் மக்களவையின் நம்பிக்கை வாக்கு கோரினார் (1990 நவ. 16). நான்காவதாக பி.வி.நரசிம்ம ராவ் நம்பிக்கை நம்பிக்கை வாக்கு பெற்றார் (1991 ஜூலை 12). ஐந்தாவதாக அடல் பிகாரி வாஜ்பாய் நம்பிக்கை வாக்கு பெறுவதற்கு முன்பே ராஜிநாமா செய்தார் (1996 மே 28). ஆறாவதாக தேவ கவுடா 1996 ஜூன் 4ஆம் தேதி நம்பிக்கை வாக்கைப் பெற்றார். ஆனால் ஏப்ரல் 11ஆம் தேதி எடுக்கப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்றதால் பதவி விலகினார். ஏழாவதாக ஐ.கே.குஜ்ரால் நம்பிக்கை வாக்கு பெற்றார் (ஏப். 22)

**அமைச்சரவை அமைப்பு**

அமைச்சரவையை அமைப்பது பிரதமரின் தனிச்சிறப்புரிமை ஆகும். ஆனால் அரசியலில் நிச்சயமற்ற சூழ்நிலை இருந்த சமயத்தில் பிரமதர் பொறுப்பேற்ற குஜ்ராலுக்கு அவ்வுரிமை இல்லாமல் போய்விட்டது. அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஐக்கிய முன்னணித் தலைவர்களிடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. புதிதாகப் பிரதமரான குஜ்ராலால் தன் விருப்பப்படி அமைச்சரவையை அமைக்க முடியவில்லை. எனவே, தேவ கவுடா அமைச்சரவையில் அங்கம் வகித்த அனைவரையும் அமைச்சர்களாக நியமிப்பதென முடிவாயிற்று. லாலு பிரசாத் யாதவின் வற்புறுத்தலின் பேரில் தேவேந்திர பிரசாத் யாதவை அமைச்சரவையிலிருந்து அகற்ற வேண்டியதாயிற்று. அதே போன்று ஜி.கே. மூப்பனாரின் நம்பகத்தன்மை அனைத்து ஐக்கிய முன்னணித் தலைவர்களாலும் உறுதி செய்யப்பட்ட பின் த.மா.க தொடர்ந்து ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்க இசைந்ததால் அக்கட்சியின் நான்கு அமைச்சர்களும் மீண்டும் குஜ்ரால் அமைச்சரவையில் இலாக்கா மாற்றமின்றிச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். சுருங்கக்கூறின் ஐக்கிய முன்னணி ஆட்சியில் அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும் தனிச்சிறப்புரிமை பிரதமருக்கில்லை என்பது புலனாயிற்று. அதுமட்டுமல்ல. வேண்டாத அமைச்சரை விலக்கும் அதிகாரமும் பிரமருக்கு இல்லை. கால் நடைத்துறைத்

தீவன ஊழலில் குற்றம் சாட்டப்பட்ட மத்திய இணை அமைச்சர் சந்திரதேவ் பிரசாத் வர்மா பிரதமர் கேட்டுக்கொண்ட பின்னரும் பதவி விலக மறுத்துவிட்டார்!

**பிரதமரின் ஆலோசகர் தேர்வு**

ஐ.கே.குஜ்ரால் பிரதமர் பொறுப்பேற்றவுடன் அவரது நெடுநாள் நண்பரான 76 வயதான பபானி சென்குப்தா (Bhabani Sengupta) வைத் தனது பிரத்யே ஆலோசகராக நியமித்தார். பபானி சென்குப்தா அறிவு ஜீவி. சாணக்யா சென்' என்ற புனைப்பெயரில் வங்காள நாவல்களை எழுதியவர். குஜ்ரால் முதல் முறையாக வெளியுறவு அமைச்சரான போது (1989-90) பபானி சென்குப்தா அவரது ஆலோசகராகவும், பேச்சுக்களை எமகிக் கொடுப்பவராகவும் இருந்தார். 1974இல் சென்குப்தா நியூ யார்க் டைம்ஸ் (The Newyork Times) என்ற பத்திரிக்கைக்கு போக்ரான் அணுவெடிப்புப் பற்றி எழுதிய கட்டுரைகள் சர்ச்சைக்குள்ளாயின. குஜ்ரால் தேவ கவுடா அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராக இருந்தபோது 'குஜ்ரால் சித்தாந்தம்' (Gujral Doctrine) உருவாக பபானி சென்குப்தா பெரிதும் காரணமாக இருந்தார்.

காஷ்மீர் மற்றும் அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தம் பற்றிய சென்குப்தாவின் கருத்துக்கள் சர்ச்சைக்குரியவை. எனவே பபானி சென்குப்தாவின் நியமனம் நாடாளுமன்றத்தில் கடுமையான விவாதத்துக்குள்ளாயிற்று. சென்குப்தாவின் பின்னணியை சந்திரசேகர், வாஜ்பாய் போன்றோர் எதிர்மறையாக விமர்சித்தனர். சென்குப்தா அமெரிக்க உளவுத்துறை (CIA) ஏஜெண்டாகச் சித்தரிக்கப்பட்டார். பிரதமர் குஜ்ரால் தனது நெருங்கிய நண்பரும், வெளியுறவுக் கொள்கை குழு' உறுப்பினருமான பபானி சென்குப்தாவின் நியமனத்தை நியாயப்படுத்தி, அவருக்கு எதிராகக் கூறப்பட்ட புகார்களை மறுப்பதற்கு பதிலாக நண்பரை நட்டாற்றில் கைவிட்டார். பிரதமரின் செயல் சென்குப்தாவின் மீது கூறப்பட்ட தேசதுரோக நடத்தை பற்றிய குற்றச்சாட்டில் உண்மை இருக்குமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது. பபானி சென்குப்தா நியமிக்கப்பட்ட இரண்டு வாரங்களில் ராஜீனாமா செய்யவேண்டிய தாயிற்று (மே 6). அதன் விளைவாக குஜ்ரால் எதிர்ப்பை எதிர்கொள்ள முடியாத பிரதமர் என்ற எண்ணம் எழுந்தது.

## ஊழல் ஒழிப்பு

ஐ.கே.குஜ்ரால் பிரதமர் பொறுப்பேற்றவுடன் ஊழலில் சம்மந்தப்பட்டவர் யாராயினும் அவர்களைச் சட்டப்பிடிக்குள் கொண்டுவரப் போவதாக மக்களவையில் சூளுரைத்தார். ஆனால் பிரதமரின் இயலாமை விரைவில் வெளிப்பட்டது. பீகார் கால் நடைத்தீவன ஊழலில் சம்மந்தப்பட்டதாகக் கருதப்பட்ட மத்திய இணை அமைச்சர் சந்திரதேவ பிரசாத் வர்மாவுக்கு எதிராக வழக்கு தொடர இந்தியப் புலனாய்வுத் துறை (CBI) குடியரசுத் தலைவரின் அனுமதியைப் பெற்றது. பிரதமர் சம்மந்தப்பட்ட அமைச்சர் பதவி விலக வேண்டும் என்றார். ஆனால் அமைச்சர் அவர் சார்ந்த ஜனதாத் தளத் தலைவர் லாலு பிரசாத்யாதவ் சொற்படித்தான் நடப்பேன் என்றார். பிரதமரால் தனிச்சிறப்புரிமை அதிகாரத்தைப் பிரயோகிக்கமுடியவில்லை. அதுமட்டுமல்ல. மத்திய புலனாய்வுத் துறைக்கு எதிராக ஆளும் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே குடியரசுத் தலைவரைச் சந்தித்துப் புகார் கூறினர். கால்நடைத் தீவன ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஜனதாதளத் தலைவரும் பீகார் முதலமைச்சருமான லாலு பிரசாத் யாதவும் மற்றும் அவரது இரு அமைச்சர்கள் மீதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

## எல்லைப் பாதுகாப்பு

தேவ கவுடா அரசாங்கத்தின் திடீர்ச்சரிவும், ஐக்கிய முன்னணியில் நிலவிய உட்கட்சிப் பூசல்களும் இந்தியாவின் வடகிழக்கு எல்லை மாநிலங்களில் பயங்கரவாதிகளை ஊக்குவிப்பதாக இருந்தன. ஏழு வடகிழக்கு மாநிலங்களின் மக்கள் தொகை இந்திய மக்கள் தொகையில் நான்கு விழுக்காட்டுக்குக் குறைவுதான். எனினும் அப்பகுதியின் பாதுகாப்பு இந்தியப் பாதுகாப்புக்கு அத்யாவசியமானது. எனவே பிரதமர் குஜ்ரால் வடகிழக்கு மாநிலங்களுக்குச் சென்றார். அம்மா நிலங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு ரூ.6,100 கோடி கொடுப்பதாகக் கூறிய பிரதமர் தேவகவுடாவின் வாக்குறுதியை (1996 அக்.) நிறைவேற்றுவதாக உறுதி அளித்தார். அப்பகுதி முன்னேற்றத்துக்காகப் புதிய பொருளாதாரக் கொள்கையை வகுக்கப்

போவதாகக் கூறினார். பயங்கரவாதிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை நடத்தத் தயாரானார். திட்டக் கமிஷனின் நேரடி மேற்பார்வையின் கீழ் வடகிழக்குக் குழு (North East Council) பிரத்யேகமாக அமைக்கப்போவதாக அறிவித்தார். குஜ்ரால் பிரதமரான பின்னரும் வெளியுறவுத்துறை அமைச்சராகவே செயல்படுகிறார் என்று பேசப்பட்டார்.

## அதிகாரி மாற்றம்

ஊழலை ஒழிப்பது ஐக்கிய முன்னணியின் குறைந்தபட்சப் பொதுத்திட்டத்தின் ஆதாரக் கொள்கைகளில் ஒன்றாகும். குஜ்ரால் பிரதமர் பொறுப்பேற்றபின் ஊழல் ஒழிப்புச் சட்ட நடவடிக்கைகளில் அரசு குறுக்கிடாது என்று உறுதி அளித்தார். ஆனால் மத்திய புலனாய்வுத்துறைத் தலைவர் ஜோகீந்தர் சிங் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டு அவருக்கு பதில் ஆர்.சி.சர்மாவைப் புதிய இயக்குநராக நியமித்தது பிரதமரின் நடுநிலையையும் நம்பகத்தன்மையையும் பெரிதும் பாதித்தது. ஜோகீந்தர் சிங் வேலை நிமித்தம் பிரான்ஸ் சென்றிருந்தபோது அவருக்குப் பதவி மாற்றம் செய்தது சர்ச்சைக்குள்ளாயிற்று. ஜோகீந்தர் சிங் பீகார் கால்நடைத் தீவன ஊழலில் லாலு பிரசாத் யாதவ் உள்ளிட்ட 56 பேர்கள் மீது குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்யப்போவதாக அறிவித்த (ஏப்ரல் 28) ஒரு வாரத்துக்குள் அவர் பதவி மாற்றம் செய்யப்பட்டார். அரசாங்கம் புலனாய்வுப் பணியில் குறுக்கிடுவதாகக் கருதப்பட்டது. ஐக்கிய முன்னணி அரசாங்கமும் அதை வெளியிலிருந்து ஆதரித்த காங்கிரசும் உயர்மட்ட ஊழலை ஒழிப்பது பற்றிக் கொஞ்சமும் கவலைப்படவில்லை என்ற எண்ணம் உறுதியாயிற்று.

## லாலு பிரசாத் யாதவ்

பொதுவாழ்வில் நேர்மையும் நாணயமும் முற்றிலும் சீர்குலைந்து போனதற்குப் பீகார் முதலமைச்சராயிருந்த (1990-1997) லாலு பிரசாத் யாதவ் மிகமோசமான முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். 'பொதுவாழ்வில் பரிசுத்த' இயக்கத்தைத் தோற்றுவித்த ஜெயப்பிரகாஷ் நாராயணின் தொண்டராக அரசியல் பிரவேசம் செய்தார் லாலு யாதவ், 1977 ஆம் ஆண்டு நெருக்கடி நிலை நீக்கப்பட்டபின் நடைபெற்ற

தேர்தலில் லாலுவும், சந்திரதேவ பிரசாத்தும் ஜே.பி.யின் செயற்குழுவின் சார்பாக மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஊழல் ஒழிப்பு வீ ரர்களாகச் செயல்பட்டனர் 1990 மார்ச் மாதம் லாலு பீகார் முதலமைச்சரானார். பா.ஜ.க. தலைவர் அத்வானியின் ரதயாத்திரையை நிறுத்தியதன் மூலம் லாலுபிரசாத் யாதவ் சமயச்சார்பற்ற தலைவரானார் (1990 அக்).

1991 மே - ஜூனில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் லாலு பெருஞ்சாதனை படைத்தார். 1995இல் இரண்டாவது முறையாக சட்டப் பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சராகத் தொடர்ந்தார். பின்னர் லாலு ஜனதா தளத் தலைவரானார் (1996 ஜன). அதன்பின் அடுக்கடுக்காக ஊழல் புகார்களுக்குள்ளனார் லாலு பிரசாத் யாதவ், அவரது செல்வாக்கு குறையலாயிற்று. மக்களவைத் தேர்தல் முடிவுகள் லாலுவின் அரசியல் செல்வாக்குகள் குறைவின் வெளிப்பாடாக இருந்தது (1996 மே). மாட்டுத்தீவன ஊழலில் சிக்கிய லாலு பிரசாத் யாதவ் ஜனதா தளத்தை உடைத்து ராஷ்ட்ரீய ஜனதா தளம் என புதுக்கட்சியை உருவாக்கினார் (ஜூலை 5). கைது செய்யப்படுவதினின்று தப்பிக்க மனைவி ரப்ரி தேவியை அக்கட்சியின் தலைவியாக்கித் தன் முதலமைச்சர் ராஜினாமா செய்து விட்டுத் தன் மனைவியை முதலமைச்சராகச் செய்க நீதிமன்றத்தில் சரணடைந்தார். (ஜூலை 30) நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்ட பிரசாத் யாதவின் குடும்ப அரசியலும் பரம்பரை ஆட்சியும் ஜனநாயக . மக்களாட்சி விபரீதம் 'அரசியல் மூர்க்க த்தனம்' ஆகும். பிரதமர் குற்றால முன்னணியும், வழி நடத்தும் குழுவும் இக்கேலிக்கூத்தைத் தடுக்கவில்லை. 'க அரசாங்கத்தில் பிரதமரால் திறமையாகச் செயல்படமுடியாது'

1997 ஆகஸ்டு 15ஆம் தேதி பிரதமர் ஐ.கே.குஜ்ரால் செங்கோட்டை கொடியேற்றி வைத்து உரையாற்றினார். அவரது இந்திய விடுதலைப் பொன்விமாப்பேசி: இந்தியாவின் அனைத்து மாவட்டங்களிலும் பரவியுள்ள ஊழல் (Corruption. குற்றமயமாகும் அரசியல் (Criminalisation of Politics) ஆகியவற்றுக்கெதிராக சத்தியாக்கிரக இயக்கத்தைத் துவக்க நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுக்கார் "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்'

## மதிப்பீடு

ஐ.கே.குஜ்ரால் அரசாங்கத் தலைவரேயன்றி ஆட்சித் தலைவரல்லர்! அதற்குக் காரணங்கள்: 1) குஜ்ராலுக்கு அரசியல் அடிப்படை இல்லை; 2) இவரால் அமைச்சரவைக் குழுத் தலைவராக சுதந்திரமாக செயல்படமுடியவில்லை; 3) இவரைப் பொதுக்கருத்து பிரதமராக (Consensus Prime Minister) ஏற்றுக் கொண்ட ஐக்கிய முன்னணித் தலைவர்கள் இவருக்குக் குறைந்தபட்ச அதிகாரங்களைக் கூடக் கொடுக்க மறுத்தனர்; 4) சட்ட அங்கீகாரமற்ற வழி நடத்தும் குழு (Steering Committee) அரசாங்க முடிவுகளைத் தீர்மானிக்கும் உயர் அமைப்பாக (Super Cabinet) இருந்தது; 5) அமைச்சரவைக் குழு கூட்டுப் பொறுப்பேற்கவில்லை; 6) யாவற்றுக்கும் மேலாக குஜ்ரால் அரசாங்கத்தின் வாழ்வு அரசாங்கத்துக்கு வெளியிலிருந்து ஆதரவு கொடுக்கும் காங்கிரஸ் கட்சியின் கையில் இருந்தது. கூட்டணிப் பிரதமர் செயல்பட முடியாப் பிரதமராகத்தான் இருக்க முடியும் என்பதற்கு குஜ்ரால் உதாரணமாக விளங்கினார்.